# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 03 சனிக்கிழமை (18.12.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 022


வடக்கு, கிழக்குப் பகுதிகளில்

# சட்ட விரோதக்கொலைகள், ஆள்கடத்தலில் ஈ.பி.டி.பி. மற்றும் கருணா குழு ஈடுபட்டன

## அமெரிக்கத் தூதராக இருந்த பிளேக்கின் ஆவணத்தை வெளியிட்டது விக்கி லீக்ஸ்

கொழும்பு, டிசெம்பர் 18

வடக்கு - கிழக்கில் ஆள்கடத்தல்கள், சட்டத்துக்குப் புறம்பான கொலைகள், கப்பம் பெறுதல் என்பவற்றில் ஈ.பி.டி.பி.யினரும் கருணா குழுவினரும் ஈடுபட்டிருந்தனர் என்று அமெரிக்கத் தூதுவராக இருந்த ரொபேர்ட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார். அது தொடர்பான ஆவணங்களை விக்கி லீக்ஸ் தற்போது வெளியிட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி பிளேக் அனுப்பி வைத்த அந்த அறிக்கையில் வடக்கு-கிழக்கில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்த இரத்தத்தை உறைய வைக்கும் தகவல்கள் இடம்பெற்றுள்ளன. துணைப் படைகளான கருணா குழுவும் ஈ.பி.டி.பியும் ஆள்களைக் கடத் திக்கப்பம் பெறுவதற்கு பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் அனுமதி அளித்திருந்தார் என்று அமெரிக்கத் தூதருக்கு நம்பிக்கையான ஒருவர் தெரிவித்திருக்கிறார் என்று அந்த ஆவணம் கூறுகிறது. (27ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சு, கருத்துச் சுதந்திரம் யாழ். குடாநாட்டில் தாராளம்

### கட்டளைத் தளபதி தெரிவிப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 18

போர் முடிந்து தற்போது ஜனநாயகச் சூழல் ஏற்பட்டுள்ள நிலையில் பேச்சுச் சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரம் என் பவற்றை யாழ்ப்பாணத்து ஊடகங்கள் தாராளமாகப் பயன் படுத்த முடியும்; அதற்கு எந்தவிதத்திலும் தடைகள் ஏற்படாது என்று தெரிவித்தார் இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க.

யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் குடாநாட்டுப் பத்திரிகைகளின் பிரதிநிதி (28ஆம் பக்கம் பார்க்க)

## மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் பிரச்சினை கூட்டமைப்புடன் பேச அமைச்சர் முடிவு

### மாவை, செல்வத்துடனான சந்திப்பின்போது உறுதியளிப்பு

கொழும்பு, டிசெ.18

வடக்கு, கிழக்கில் மீள்குடியேற்றம் மற்றும் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்து அந்தந்தப் பிரதேச தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தி தீர்வுகாண மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோன் நடவடிக்கை எடுக்கப்போவ தாக உறுதியளித்துள்ளார் என வன்னி மாவட்டக் கூட்டமைப்பு எம்.பி. செல்வம் அடைக்கல நாதன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களான மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கல நாதன் ஆகியோர் நேற்று மீள் குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோனை அவரது அமைச்சில் சந்தித்துப் பேச்சு நடத்தினர். (28ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவுக்கே அமெரிக்கா ஆதரவு

### விக்கிலீக்ஸ் இணையம் தகவல்

கொழும்பு, டிசெ.18

இலங்கையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராகப் போட்டியிட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா வெற்றி பெற வேண்டும் என்று அமெரிக்கா விரும்பியதாக உலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள 'விக்கிலீக்ஸ்' இணையத்தளம் புதிய தகவலொன்றை வெளியிட்டுள்ளது.

சரத் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டினால், இலங்கையின் அரசியல் கட்டமைப்பில் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என அமெரிக்கத் தூதுவர் பெட்ரிகா புட்னாஸ் தெரிவித்தார் என விக்கி லீக்ஸ் வெளியிட்டுள்ள ஆவணத்தில் தெரி (28ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கவின் முக்கிய பதவிகளுக்கு போட்டியிட இதுவரை எவரும் விண்ணப்பிக்கவில்லை

கொழும்பு, டிசெ. 18

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவி உட்பட முக்கிய 5 பதவிகளுக்குப் போட்டியிட இன்னும் எவரும் விண்ணப்பிக்கவில்லை என்று அக் கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் எம்.பி. ஜோஸப் மைக்கல் பெரேராவே இவ்வாறு கூறினார்.

இதுதொடர்பாக அவர் மேலும் (28ஆம் பக்கம் பார்க்க)

## பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த லியம் பொக்ஸின் வருகை ஒத்திவைப்பு

கொழும்பு, டிசெ.18

பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் லியம் பொக்ஸின் இலங்கை விஜயம் பிற்போடப்பட்டுள்ளதாக 'தி கார்டியன்' செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

(முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஞாபகார்த்த வைபவத்தில் உரையாற்றுவதற்காக லியம் பொக்ஸ் தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வரவிருந்தார்.

லியம் பொக்ஸின் விஜயம் பிரிட்டிஷ் அரசு வட்டாரங்களில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி இருந்த நிலையிலேயே அவர் இலங்கை விஜயத்தை பிற்போட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(28ஆம் பக்கம் பார்க்க)


NIBM BUILDING COMPETENCIES



ஒளிமயமான எதிர்காலத்திற்கு NIBM வழிகாட்டும்

நாட்டின் நம்பிக்கை வாய்ந்த உயர் கல்வி நிலையம் வழங்கும் முகாமைத்துவ, தகவல் தொழில்நுட்ப மற்றும் ஆங்கில கற்கை நெறிகள் மூலம் வெற்றிகரமான எதிர்காலத்தில் அடியெடுத்து வையுங்கள்

- மனிதவள முகாமைத்துவத்தில் அடிப்படைக் கற்கை நெறி (ஆங்கிலத்திலும் தமிழிலும்)
- வியாபார முகாமைத்துவத்தில் சான்றிதழ் கற்கை நெறி
- கணனித் தொழில்நுட்பத்தில் சான்றிதழ் கற்கை நெறி
- ஆங்கில மொழியில் சான்றிதழ் கற்கை நெறி

A statutory Body under the Ministry of Youth Affairs & Skills Development

தேசிய வியாபார முகாமை நிறுவனம்
40, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி இல: (021) 222 0360, 61, 62

அனுமதிகள் ஆரம்பமாகியுள்ளன! முதலில் அனுமதிக்கப்படும் சிலருக்கு 25% கட்டணக் கழிவு.

NIBM BUILDING COMPETENCIES Jaffna யாழ்ப்பாணம்

மாபெரும் மலிவு விற்பனை
18.12.2010 சனிக்கிழமை -
24.12.2010 வரை



Special Offer!

அனைத்துப் பொருட்களும் உத்தரவாதத்துடன்

சுந்தர்சன்
மானிப்பாய்

30%
வரையான விலைக்கழிவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## கண்ணிகளை அகற்றி முடிக்க 10 வருடங்கள் செல்லும்

# யாழ். குடாநாட்டின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க அனைவரது பங்களிப்பும் தேவை

### யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.18

யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் மற்றும் தேவைகள் ஏராளமாக உள்ளன. அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கவும், தேவைகள் பலவற்றை நிவர்த்தி செய்யவும் அனைத்துத் தரப்பினரினதும் பங்களிப்பு; ஒத்துழைப்பு அவசியம்.

யாழ். அரச அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குடாநாட்டு நிலைமை தொடர்பாக நேற்று செயலகத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அரச அதிபர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகள், தேவைகள் ஏராளமாகக் காணப்படுகின்றன. அதனை நிவர்த்திசெய்ய அனைவரும் தம்மாலான பங்களிப்பை வழங்கவேண்டும்.

19 ஆயிரம் குடும்பங்கள் இன்னும் மீள்குடியமர்த்தப்பட வேண்டும். 60 ஆயிரம் வீடுகள் அமைக்கப்பட வேண்டும். 27 ஆயிரம் விதவைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும். 246 சிறுவர்கள் தீராத நோய்க்குள்ளாகி சிகிச் சைக்குப் பணம் இன்றித் தவிக்கின்றார்கள்.

யாழ். மாவட்ட அரச அதிபராக மிக அண்மையில்தான் பதவியேற்றேன். அதற்கிடையில் இங்கு பல்வேறு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத் துள்ளேன். அத்துடன் இந்த மாவட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி குறித்த திட்டங்களை வகுத்துள்ளேன்.

அடுத்தவருடம் 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டுவரைஇங்கு மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தித்திட்டங்கள் குறித்து தரவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

அடுத்த 2011 ஆம் ஆண்டு மட்டும் 1648 திட்டங்கள் 18 ஆயிரத்து 698 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்படவுள் ளன.

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் 5 ஆயிரத்து 150 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. 2 ஆயிரம் வீடுகள் புனரமைக்கப்படவுள்ளன.

உலக வங்கியின் நிதியுதவியுடன் 2 ஆயிரத்து 700 வீடுகள் இதுவரை புனரமைக்கப்பட்டுள்ளன. சுவிஸ் நாட்டின் நிறுவனம், கிரித்தாஸ் ஆகிய அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளுடனும் வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள வீதிகள், மிகவும் மோசமான நிலையில் உள்ளன. அவற்றையும் உடனடியாகத்திருத்தியமைக்க வேண்டும்.

கல்வி சுகாதாரம் போன்ற விடயங்களிலும் அதிக கவனமெடுக்கப்பட்டு அபிவிருத்திப் பணிகள் துரித கதியில் மேற்கொள்ளப்படவுள்ளன.

**கண்ணிகளை அகற்றி முடிக்க இன்னும் 10 ஆண்டுகள் தேவை**

யாழ். குடாநாட்டில் எஞ்சியுள்ள பகுதிகளில் கண்ணி வெடிகளை அகற்றி முடிப்பதற்கு இன்னும் 10 ஆண்டுகள் தேவைப்படுகிறது.

யாழ்.மாவட்ட அரச அதிபராக பதவியேற்ற பொழுது இங்குள்ள மக்களின் முக்கிய பிரச்சினையாக உயர்பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டியிருந்தது. இந்த விடயம் தொடர்பாக யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜனரல் மஹிந்த ஹத்துருசிங்கவுடன் கேட்டபோது-

யுத்த காலத்தில் மட்டும் உயர்பாதுகாப்பு வலயங்கள் இருந்தன. தற்போது அவ்வாறு எதுவுமில்லை. கண்ணி வெடிகளை அகற்றிவிட்டு மக்களை மீள்குடியேற்றம் செய்யுமாறு கோரினர்.

அதனடிப்படையிலேயே வடமராட்சி கிழக்கில் மக்கள் குடியேற்றம் செய்யப்பட்டனர். கடந்த மாதம் வலி.வடக்கில் 3 கிராம சேவகர் பிரிவில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர்.

இருந்த போதும் யாழ். குடாநாட்டில் இன்னும் 18 ஆயிரத்து 04 குடும்பங்களைச் சேர்ந்த 66 ஆயிரத்து 605 பேர் மீள்குடியமர்த்தப்பட வேண்டியுள்ளது. இவர்களில் பெரும்பாலானவர்கள் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிலேயே மீளக் குடியமர்த்தப்பட வேண்டியுள்ளனர்.

மீளக்குடியமர்வை மேற்கொண்ட தோடு மட்டுமல்லாமல் அவர்களுக்கான கல்வி, சுகாதாரம், வீடு, குடிதண்ணீர் என்பன தொடர்பிலும் கவனம் செலுத்தி நிறைவேற்றி வருகின்றோம்.

இதேவேளை, மக்களை மீள் குடியமர்த்துவது தொடர்பான நிகழ்ச்சி நிரல் எதுவும் தம்மிடம் இல்லை எனவும் சில வேளைகளில் இராணுவத்தினரிடம் இருக்கக்கூடும் எனவும் தெரிவித்தார்.

மேலும் கண்ணி வெடிகளை முற்றுமுழுதாக அகற்றுவதற்கு இன்னும் 10 வருடங்கள் தேவைப்படுவதாகவும் இருப்பினும் தற்போது, படிப்படியாக கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-9-15)

## சண்முகலிங்கன் பதில் துணைவேந்தர்

யாழ்ப்பாணம், டிசெ.18

யாழ்.பல்கலைக்கழகத்தின் பதில் துணைவேந்தராக பேராசிரியர் நா.சண்முகலிங்கன் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முதல் மறு அறிவித்தல் வரை நா.சண்முகலிங்கன் பதில் துணை வேந்தராக நியமிக்கப்பட்டுள்ளார் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் காமினி சமரநாயக்க அறிவித்துள்ளார் என்று பலகலைக்கழக பதிவாளர் வி.காண்டீபன் தெரிவித்துள்ளார்.

துணைவேந்தர் நா.சண்முகலிங்கத்தின் பதவிக்காலம் 15 ஆம் திகதியுடன் முடிவடைந்ததையடுத்து புதிய துணைவேந்தர் நியமிக்கப்படும் வரை அவர் பதில் துணைவேந்தராக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பேராசிரியர் ரத்னஜீவன் ஹூல் நியமிக்கப்பட்டுள்ளார் என்று ஜனாதிபதி செயலகம் தகவல் வெளியிட்டபோதும் நேற்றிரவு வரை அவருக்கு நியமனக் கடிதம் கிடைக்கவில்லை எனத்தெரிவிக்கப்பட்டது. (ஒ-ஐ)

## முன்பள்ளி ஆண்டு விழா

தென்மராட்சி, டிசெ.18

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு சனசமூக நிலையத்தின் பாரதி முன்பள்ளியின் 35 ஆவது ஆண்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

நிலையத் தலைவர் க.மோகனராஜலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக இளைப்பாறிய அதிபர் நா.அருட்சோதி கலந்துகொள்வார். (ஒ-207)

# ஐ.நா. நிபுணர் குழுவுக்கு அனுப்பிய சாட்சியங்கள் திரும்பியது ஏன்?

### இன்னர் சிற்றி பிரஸ் கேள்வி எழுப்புகிறது

கொழும்பு, டிசெ.18

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக ஆலோசனை வழங்குவதற்காக ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூன் நியமித்துள்ள நிபுணர் குழுவுக்கு சாட்சியங்களை அனுப்புவதற்கான காலஎல்லை மேலும் நீடிக்கப்படும் என்று ஐ.நா பொதுச் செயலரின் பதில் பிரதி பேச்சாளர் பர்கான் ஹக் தெரிவித்துள்ளார்.

ஐ.நா நிபுணர்குழுவுக்கு சாட்சியங்களை சமர்ப்பிப்பதற்கான கால எல்லை கடந்த 15ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்துள்ளது.

ஆயினும் இந்தக் கால எல்லை மேலும் நீடிக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் கடந்த 15ஆம் திகதி நண்பகல் இன்னர் சிற்றி பிரஸ் அனுப்பிய மின்னஞ்சல் ஒன்று நிபுணர்குழுவிடம் சேராமல் திரும்பயுள்ளதாக அந்த ஊடகம் கூறியுள்ளது.

அத்துடன் மறுநாள் அதிவிரைவு பொதி விநியோக சேவை மூலம் சாட்சியங்களை ஐ.நாவின் முகவரிக்கு அனுப்பிய போதும் அதைப் பொறுப்பேற்றுக்கொள்வதற்கு யாரும் இல்லை என்று திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகவும் இன்னர் சிற்றி பிரஸ் தெரிவித்துள்ளது.

இந்த விடயத்தில் நிபுணர் குழு அக்கறையின்றி இருக்கிறதா என்று கேள்வி எழுப்பியுள்ள இன்னர் சிற்றி பிரஸ், உள்ளக அறை நிரம்பியதால் மின்னஞ்சல் திரும்பயிருந்தாலும் அதிவிரைவுப் பொதி விநியோக சேவையின் ஊடாக அனுப்பிய சாட்சியங்களும் திரும்பியது ஏன் என்று கேள்வி எழுப்பயுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் வரைக்கும் ஐ.நா. நிபுணர்குழுவுக்கு 1100 சாட்சியங்கள் கிடைத்துள்ளன.

ஆயினும் எத்தனை நிராகரிக்கப்பட்டன அல்லது திரும்பின என்பது கவனிப்புக்குரிய விடயம் என்றும் அது மேலும் தெரிவித்துள்ளது.

## அரச ஊழியரின் சம்பள உயர்வு கோரி

# ஐ.தே.க. சார்புத் தொழிற்சங்கங்கள் 22இல் மருதானையில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, டிச. 18

அரசஊழியர்களின்சம்பளத்தை அதிகரிக்கக் கோரியும், பொருள்களின் விலைகளைக் குறைக்கக் கோரியும் ஐ.தே.கட்சி சார்பு தொழிற்சங்கங்கள் இம்மாதம் 22 ஆம் திகதி கொழும்பு மருதானையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள் ளன.

இவ்வகையான ஆர்ப்பாட்டங்கள் நாடு முழுவதிலும் நடத்தப்படும் என்று ஐ.தே. கட்சியின் எம்.பி. ஜோஸப் மைக்கல் பெரேரா நேற்றுக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

ஐ.தே.கட்சி சார்பு தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் நலன் கருதியே செயற்படுகின்றன. கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது அரச ஊழியர்களுக்கு 2,500 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாக்குறுதி அளித்தார். அந்த வாக்குறுதி மீறப்பட்டது.

அரச ஊழியர்கள் இப்போது வேலை செய்யும் மனநிலையில் இல்லை. அதிகரித்துச் செல்லும் செலவீனத்துக்கு ஏற்ப சம்பள உயர்வு இல்லாமையே இதற்குக் காரணம். ஐ.தே.கட்சியின் ஆட்சி வரும் வரை அவர்கள் காத்துக்கொண்டிருக்கின்றனர்.

அனைத்துக்கும் வரி விதிக்கப்படுகின்றது. மக்களின் வரிப் பணத்தின் ஊடாக அரச எம்.பிக்களுக்கு 'பிராடோ' வாகனங்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன.

அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்கக் கோரியும், பொருள்களின் விலைகளைக் குறைக்கக் கோரியும் நாம் இந்த மாதம் 22 ஆம் திகதி கொழும்பு மருதானையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளோம்.

அரச ஊழியர்களுக்கு வருட இறுதியில் ஆகக் குறைந்தது 10 ஆயிரம் ரூபாவாவது போனஸாக வழங்கப்படவேண்டும் என்று நாம் அரசிடம் கேட்கின்றோம்.

இவ்வகையான ஆர்ப்பாட்டங்கள் நாடு முழுவதிலும் முன்னெடுக்கப்படும். இதன் முதலாவது ஆர்ப்பாட்டம் அண்மையில் கொழும்பு புறக்கோட்டையில் நடத்தப்பட்டது. மருதானையில் இடம்பெறப்போவது இரண்டாவது ஆர்ப்பாட்டமாகும். - என்றார். (ஒ-சி)

## கற்பிட்டியில் 10 தீவுகளில் வெளிநாட்டு முதலீடுகள்

கொழும்பு, டிசெ.18

இலங்கை சுற்றுலாத் துறையின் மேம்பாட்டுக்கான பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

இவ்வருடம் இலங்கை வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 6 லட்சத்தைக் கடந்துள்ளதாகவும் அடுத்த வருடம் ஏழு லட்சம் சுற்றுலாப் பயணிகளை எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். கல்பிட்டி கடலில் உள்ள 10 தீவுகளில் முதலீடு செய்ய 10 பிரதான வெளிநாட்டு கம்பனிகள் முன்வந்துள்ளன. இவைமார் 500 மில்லியன் டொலர் இலங்கையில் முதலீடு செய்ய உள்ளன.

யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதோடு முதலீடுகளும் அதிகரித்துள்ளன.

க்ல்பிட்டியில் உள்ள 14 தீவுகளில் 2இல் ஏற்கெனவே முதலீடு செய்யப்பட்டுள்ளன. 10 தீவுகளில் முதலீடு செய்ய பிரதான நிறுவனங்கள் முன்வந்துள்ளன. இங்கு ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள், கொல்ப் மைதானம், பொழுதுபோக்கு இடங்கள், பூங்கா என்பன அமைக்கப்படும்.

இங்கு வாழும் மக்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படாதவாறே இந்தத் தீவுகள் அபிவிருத்தி செய்யப்படும். முதலீட்டாளர்கள் தமது மொத்த முதலீட்டில் 5 வீதத்தை இங்குள்ள மக்களின் வீடு மற்றும் வசதிகளை மேம்படுத்த செலவிட உள்ளனர்.

சர்வதேச மட்டத்தில் கேள்விப் பத்திரம் கோரியே இந்தத் தீவுகளில் முதலீடு செய்ய அனுமதி வழங்கப்படுகிறது. 30 முதல் 50 வருட காலத்திற்கு இவை குத்தகைக்கு வழங்கப்படும் என பிரதி அமைச்சா மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவோரை சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை

## உதவித் தொழில் ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.18

சிறுவர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள தொழில் தருனர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க ஆரம்பித்துள்ளோம். இதன் முதற்கட்டமாக யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ரீதியாகத் திடீர் சோதனை நடத்துவதற்கும் தயாராகி விட்டோம் எனத் தெரிவித்தார். யாழ்.மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன்.

இந்த விடயம் தொடர்பாக உதவித் தொழில் ஆணையாளர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.மாவட்டத் தொழில் திணைக்களத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி புதிதாக ஐந்து அதிகாரிகள் தமது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளனர். இதன் மூலம் நாம் எமது பணிகளை முழு வீச்சுடன் மேற்கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி நல்லூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதியில் நாம் திடீர் சோதனைகளை மேற் கொண்டோம். இதன்போது திருநெல்வேலி, கொக்குவில் ஆகிய இரண்டு சந்தைகளிலும் திடீர் சோதனை செய்தபோது வேலைக்கு அமர்த்தப்பட்ட 6 சிறுவர்கள் எம்மிடம் சிக்கிக் கொண்டனர். அவர்களை வேலைக்கு அமர்த்திய தொழில் தருனர்களைக் கடுமையாக எச்சரித்தோம். இனிவரும் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகளை தொழில் தருனர்கள் தொடர்வார்களானால் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்போம் என அவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளோம்.

சிறுவர்கள் ஆறுபேரும் அவர்களுடைய பெற்றோர்களுடன் இணைக்கப்பட்டுள்ளனர். இந்தத் திடீர்ச் சோதனை நல்லூர் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. இதற்கு கோப்பாய் பொலிஸாரும் தமது ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளன. சிறுவர் நன்னடத்தை அதிகாரி எமது திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் இந்தத் திடிர்ச் சோதனைக்குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

சில மாதங்களுக்கு முன்னர் சங்கானைப் பகுதியில் சிறுவன் ஒருவனை வீட்டு வேலைக்கு அமர்த்திய வீட்டு உரிமையாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டது. 75 ஆயிரம் ரூபா நஷ்டஈடு சிறுவனுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டது.

அதேபோல அரியாலைப் பகுதியில் சிறுவன் ஒருவனை வீட்டு வேலைக்கு என அமர்த்திய வீட்டு உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தியுள்ள தொழில் தருனர்கள் அவர்களை விடுவித்து அவர்கள் கல்வி நடவடிக்கையை தொடர ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வாறான தொழில் தருனர்கள் 12 மாத கால சிறைத் தண்டனை அல்லது 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் நீதிபதியின் தற்துணிவினால் தீர்மானிக்கப்படும். நஷ்ட ஈட்டுத் தொகை ஆகியவற்றை செலுத்த வேண்டி ஏற்படும் என்றார்.

(த-14)

# தேசிய பாதுகாப்பு நிகழ்வுக்காக ஜனாதிபதி, பிரதமர் யாழ். வருவர்

யாழ்ப்பாணம், டிசெ.18

தேசிய பாதுகாப்புத் தின நிகழ்வுகளின் பிரதான வைபவம் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பிரதமர் தி.மு. ஜயவர்த்தன ஆகியோர் அன்றையதினம் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளதாக அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ். செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அரச அதிபர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் முற்பகல் 9 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணிவரை இந்நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

இதில் அனர்த்தத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்வது எவ்வாறு! மற்றும் அதிலிருந்து தப்பிக் கொள்வது ஆகிய கருப்பொருளாக கொண்ட 19 ஊர்திகளின் பவனிகளும் இடம் பெற உள்ளன. இதில் மிகச் சிறந்ததாக தெரிவுசெய்யப்படும் முதல் மூன்று ஊர்திகளுக்கும் வணிகர் கழகத்தினால் பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் யாழ்ப்பாணத்து கலை, கலாசாரங்களைப் பிரதிபலிக்கும் வகையில் பாடசாலை மாணவர்களின் அணிவகுப்புக்களும் இடம்பெற உள்ளன. தேசிய பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகளும் அன்றயதினம் வழங்கப்பட இருக்கின்றன.

இந்த நிகழ்வுகளில் இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரவீர, பிரதி அமைச்சர் டுலிப் விஜயசேகர பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

(த-19)

# கனடாவில் இருந்து நாடு திரும்பிய இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

## கொட்டாஞ்சேனையில் சம்பவம்

கொழும்பு, டிசெ.18

கனடாவிலிருந்து நாடு திரும்பிய இளம் குடும்பஸ்தர் ஒருவர் கொட்டாஞ்சேனை ஹின்னி ஹப்புஹாமி மாவத்தையில் அமைந்துள்ள அவரது வீட்டில் தூக்கிட்டுத் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 33 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஆரோக்கியம் ரேஷ்குமார் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கனடாவிலிருந்து நாடு திரும்பிய இவர் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டாரா என்பது தொடர்பில் கொட்டாஞ்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். நேற்றுமுன்தினம் காலை இவரது சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக கொழும்பு தேசிய வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

தற்கொலை செய்தகொண்டதாக கூறப்படும் குறித்த நபரின் மனைவி மற்றும் பிள்ளைகள் இந்தியாவில் வசித்து வருவதாகவும் சிகிச்சை பெறுவதற்காகவே இவர் இலங்கை வந்ததாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். தூக்கில் தொங்கியநிலையில் இவரது சடலம் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டபோது அதற்கு அருகில் தமிழினால் எழுதிய கடிதமொன்றும் மீட்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் கொட்டாஞ்சேனைப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# விஜய் நம்பியாரை நீக்குமாறு ஐ.நாவுக்கு பிரிட்டன் அழுத்தம்

பர்மாவுக்கான ஐ.நாவின் தற்காலிகத் தூதுவர் பதவியில் இருந்து விஜய் நம்பியாரை நீக்கி விட்டு நிரந்தரத் தூதுவர் ஒருவரை நியமிக்குமாறு ஐ.நா பொதுச் செயலர் பான் கீ மூனிடம் பிரிட்டன் கேட்டுக்கொண்டுள்ளது.

நியுயோர்க்கில் கடந்தவாரம் செய்தியாளர்களிடம் பேசிய ஐ.நாவுக்கான பிரிட்டன் தூதுவர் மார்க் லயல் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளதாக சியாங்மாய் என்ற ஊடகவியலாளர் மிஸ்ஸிமா என்ற இணையத்தில் எழுதியுள்ள கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த டிசெம்பர் மாதம் நைஜீரிய இராஜதந்திரி இப்ராகிம் கம்பாரி பர்மாவுக்கான தூதுவர் பதவியில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் ஐ.நா பொதுச் செயலரின் பிரதம அதிகாரியாக உள்ள விஜய் நம்பியார் பர்மாவுக்கான தூதுவர் பதவியையும் பகுதி நேரமாகக் கவனித்து வருகிறார்.

இவரை இந்தப் பதவியில் இருந்து நீக்கி விட்டு பர்மாவுக்கு நிரந்தரத் தூதுவர் ஒருவரை நியமிக்குமாறு பிரிட்டன் வலியுறுத்தியுள்ளது.

இதே கருத்தையே ஐ.நாவுக்கான மெக்சிக்கோவின் தூதுவரும் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக மிஸ்ஸிமா இணையத்துக்கு தகவல் வெளியிட்டுள்ள ஐ.நாவின் பதில் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக், தூதுவர்களின் இந்தக் கருத்துக் குறித்து ஆலோசனை செய்து வருவதாக ஐ.நா பொது செயலர் அவர்களிடம் தெரிவித்துள்ளதாகக் கூறினார்.

பர்மா விவகாரத்தில் ஐ.நாவின் பங்கு முக்கியமானது என்று பிரிட்டன் கருதுகிறது.

விஜய் நம்பியார் சிறுபான்மையின மக்களுக்கு எதிராக செயற்படுகிறார் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

எனவே, அவரை இந்தப் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று பிரிட்டன் கோரியுள்ளது.

# நாட்டில் இவ்வாண்டு 8 வீத பொருளாதார அபிவிருத்தி

இந்த 2010 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் 8 சதவீத பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதாகக் குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. 2002 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட இரண்டாவது சிறந்த வளர்ச்சி இதுவெனக் கருதப்படுகிறது.

பொருளாதாரத்தின் முக்கிய துறைகளான விவசாயம், கைத்தொழில், சேவை உள்ளிட்ட துறைகள் துரித வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளதாகக் குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்த இறுதிக் காலாண்டில் விவசாயம் 6.2 வீதத்தாலும் - கைத்தொழிற்றுறை 8.8 வீதமாகவும் சேவைத்துறை 8 வீதத்தாலும் அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# சங்கானை இந்துக் குருவின் கொலைக்கு தென்னிந்தியத் திருச்சபை கண்டனம்

யாழ்ப்பாணம், டிசெ.18

சங்கானை முருகமூர்த்தி ஆலயப்பிரதம குரு கொடூரமான முறையில் கொல்லப்பட்ட சம்பவத்தை வன்மையாக கண்டிக்கின்றோம். இது போன்ற செயல்கள் தொடர்ந்தும் இடம்பெறாதவாறு தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றோம் .

இவ்வாறு திருச் சபையின் யாழ். அத்தியட்சாதீனத்தின் பேராயர் கலாநிதி எஸ். டானியல் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு.

எமது சகோதர இந்து சமயத்தின் சங்கானை முருகமூர்த்தி ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ நித்தியானந்த குருக்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் ஏற்பட்ட வன்முறையை அறிந்து அதிர்ச்சி அடைந்துள்ளோம். சிவஸ்ரீ நித்தியானந்த குருக்களின் சடுதியும், துர்ப்பாக்கியமுமான மரணத்தையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை குடும்பத்தினருக்கு தெரிவித்துக் கொள்கின்றோம் .

இவ்விதமான வன்செயலை திருச் சபை சார்பாக வன்மையாக கண்டிக்கின்றோம். வன்செயலுக்கு காரணமானவர்கள் அடையாளம் காணப்பட்டு சட்டத்தின் முன்னால் நிறுத்தப்பட வேண்டும் என்றும், இச் செயல்கள் தொடர்ந்தும் நடைபெறா வண்ணம் பொறுப்பில் உள்ள வர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது. (த)

# பௌத்த கலாசாரத்துக்கு அடிபணிந்தே சிறுபான்மை இனங்கள் வாழவேண்டும்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

கொழும்பு, டிசெ.18

சிங்களத்தில் மாத்திரமே தேசிய கீதம் என்ற கொள்கைக்கு இணங்காத எந்தவொரு நபருக்கும் உள்நாட்டில் இட மில்லை என தெரிவித்துள்ள தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், சிங்கள பௌத்த கலாசாரத்திற்கு அடிபணிந்தே ஏனைய சிறுபான்மை இனங்கள் வாழ வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர கூறுகையில்,

இலங்கை ஒரு சிங்கள பௌத்த தேசம். இங்கு சிங்கள கலாசாரமும் அதன் மொழிகளுமே தேசிய கொள்கைகளாக கருதப்பட வேண்டும். ஏனைய சிறுபான்மை இன மக்களுக்கு சுதந்திரமாக வாழ முடியும். ஆனால் தேசிய பௌத்த கொள்கைகளுக்கு உட்பட்டவர்களாகவே அவர்கள் வாழ வேண்டும். மேலும் தமிழில் தேசிய கீதத்தை பாடுவதற்கு கொண்டு வரப்பட்டுள்ள தடையானது வரவேற்கப்பட வேண்டியதொன்றாகும்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உள்நாட்டில் சில சக்திகளும் இந்தியா மற்றும் மேற்குலக நாடுகள் சிலவும் கருத்துக்களை வெளியிடுகின்றன. இவர்கள் அனைவரும் ஒரு விடயத்தை நன்றாக புரிந்துகொள்ள வேண்டும். இலங்கை எந்தவொரு நாட்டிற்கும் அஞ்சாது. ஏனென்றால் சகல அதிகாரங்களையும் கொண்ட தனிச் சிங்கள இராச்சியமே இலங்கையாகும்.

எனவே இந்தியா உள்ளிட்ட எந்தவொரு வெளிநாடுகளின் சவால்களுக்கும் முகம் கொடுக்க நாங்கள் தயாராகவே உள்ளோம். தேசிய கீதம் விடயத்தில் யாருக்கும் தலையிட உரிமை கிடையாது. அது அரசின் தீர்மானமாகும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்ட விரோதமாக வைத்திருந்த

# ரி56 துப்பாக்கியுடன் கொலை அச்சுறுத்தல் விடுத்த நபருக்கு ஆயுள் சிறைத் தண்டனை

அம்பாறை, டிசெ.18

சட்டவிரோதமாக அனுமதிப்பத்திரமின்றி ரி 56 ரக தன்னியக்கத்துப்பாக்கியை வைத்திருந்து தண்டிக்கப்படவேண்டிய குற்றம் புரிந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த நபர் ஒருவருக்கு கல்முனை மேல் நீதிமன்றம் ஆயுள்கால சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியுள்ளது.

கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் கடந்த வியாழக்கிழமை இந்தத் தீர்ப்பினை வழங்கினார்.

சுலைமாலெவ்வை முகமது யூசுப் றியாஸ் எனும் நபர் மீது, சட்ட முரணாக அனுமதிப்பத்திரமின்றி 2006.06.24 ஆம் திகதி ரி 56 ரக தன்னியக்கத் துப்பாக்கி ஒன்றைத் தன் உடைமையில் வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட வழங்கு விசாரணை கல்முனை மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

குறித்த எதிரி 2006.06.22 ஆம் திகதி தமது குடும்பப் பிரச்சினை ஒன்றின் போது வெடிவைத்து மரண அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பான பொலிஸ் விசாரணையின் போது, அட்டாளைச் சேனை 15 ஆம் பிரிவு சலீம் சென்ரர், வீதியிலுள்ள பாழடைந்த வீடொன்றிலிருந்து குறித்த ரி 56 ரக தன்னியக்கத் துப்பாக்கியை எடுத்துக்கொடுத்துள்ளார்.

மேற்படி வழக்கு விசாரணையின் போது எதிரி கூண்டிலிருந்து அளித்த வாக்கு மூலம் நம்பகத்தன்மையில்லாததால் நிராகரிக்கப்பட்டது.

இதேவேளை எதிரி சுலைமாவெல்வை முகம்மது யூசுப்றியாஸ் மீது சுமத்தப்பட்ட குற்றாச்சாட்டு நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டதால், எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட மேல் நீதிமன்ற நீதிபதி கடந்த வியாழக்கிழமை எதிரிக்கு ஆயுள்கால சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கினார்.

மேலும் குறித்த எதிரி முன்னர் சட்ட விரோதமாகக் கைக்குண்டு ஒன்றை தன்னகத்தே வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் அம்பாறை மேல் நீதிமன்றத்தால் தண்டமும், ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டவர் என்பதும் மன்றின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-30)


ஜனஜய லொத்தர்

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

வாரம் 186

சீட்டிழுப்புத் திகதி 16.12.2010

வெற்றி இலக்கங்கள்: 13 37 50 55

சுப்பர் இலக்கம்: 11

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 10,388,870/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 1 இலக்கத்துக்கும் | 61737 | ரூ. 20/= | ரூ. 1,234,740/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 1 இலக்கத்துக்கும் | 5603 | ரூ. 40/= | ரூ. 224,120/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 2 இலக்கங்களுக்கும் | 4758 | ரூ. 100/= | ரூ. 475,800/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 2 இலக்கங்களுக்கும் | 399 | ரூ. 200/= | ரூ. 79,800/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 3 இலக்கங்களுக்கும் | 100 | ரூ. 1,500/= | ரூ. 150,000/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 3 இலக்கங்களுக்கும் | 15 | ரூ. 3,000/= | ரூ. 45,000/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 4 இலக்கங்களுக்கும் | 1 | ரூ. 1,000,000/= | ரூ. 1,000,000/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 10,388,870/= | |
| மொத்த எண்ணிக்கை | 72613 | | ரூ. 3,209,460/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 10,576,280/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, சுதந்திர வெல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 2 333 546 - 47 தொலைநகல்: 2 333 545
Website: www.dlb.lk


## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை செல்லம்மா (அச்சுவேலி)

வளலாய் மேற்கு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், வரணனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை செல்லம்மா நேற்று (17.12.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - சூசைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் கணபதிப்பிள்ளை (வர்த்தகர்)யின் அன்பு மனைவியும், சிவபாக்கியம் (திருகோணமலை), சரஸ்வதி (கனடா), பாலகிருஸ்ணன் (வளலாய்), தனபாலசிங்கம் (காந்தி - புற்றளை, புலோலி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவசுப்பிரமணியம் (கனடா), யோகநாயகி (வெள்ளவத்தை), அருந்தவநாயகி (கனடா), நவரத்தினராஜா (பிரான்ஸ்), பாலசிங்கம் (கனடா), சுகுணராஜா (வரணன்), ஸ்ரீஸ்கந்தராஜா (கனடா), ஆனந்தகௌரி (கனடா), சரவணபவானந்தன் (கனடா), ஆகியோரின் அன்புத் தாயாரும், வதனேஸ்வரி (கனடா), சண்முகராஜா (வர்த்தகர், வெள்ளவத்தை), ஸ்ரீகாந்தா (கனடா), ரேணுகா (பிரான்ஸ்), ஜெயந்தினி (கனடா), சுகிதரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சபேசன் (கனடா), சதீசன் (கனடா), நிலானி (லண்டன்), மாதுளன் (கனடா), மாதுஜன் (கனடா), ரிஷியன் (பிரான்ஸ்), பிறயன் (பிரான்ஸ்), துவாரகா (கனடா), கர்ஷன் (கனடா), பிரமியா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வரணன்,* தகவல்: சுகுணராஜா (மகன்),
*அச்சுவேலி.* (107512) சண்முகராஜா குடும்பம்.

### திருமதி இராசம்மா ஆறுமுகசாமி



பங்களா லேன், மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா ஆறுமுகசாமி நேற்று (17.12.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற குலசிங்கம் மற்றும் திருமதி கி.சறோஜாதேவி, திருமதி கி.சகுந்தலாதேவி, பாலசிங்கம் (கனடா), இராஜசிங்கம் (ராஜா கொம்பிளெக்ஸ், சுன்னாகம்) ஆகியோரின் அன்புத்தாயாரும், திருமதி கு.சறோஜினிதேவி, காலஞ்சென்ற சிவலிங்கசோதி மற்றும் சிவராஜா (கனடா), வசந்தமலர் (கனடா), திருமகள் ஆகியோரின் அன்பு மாமியும்,தயாளினி, நடேசன், சபேசன், நிரஞ்சன், நிசாந், விமேஷ், வாகீசன், சோபனா, பிறிந்தன், தாரகா, சாமினி, இரவிபரன், மகிபரன், சர்மினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஆரணியின் அன்புப் பூட்டியும் காலஞ் சென்றவர்களான பொன்னம்பலம், சுப்பிரமணியம், வல்லிபுரம் பொன்னம்மா மற்றும் முத்துத்தம்பி, தனலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2010) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பங்களா லேன்,* தகவல்:
*மல்லாகம்.* பிள்ளைகள்.

## தென்மராட்சி மாணவர் திங்களன்று கௌரவிப்பு

தென்மராட்சி, டிசெ.18

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடந்த ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களை சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் விருதுகள் வழங்கி கௌரவிக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறும்.

கழகத் தலைவர் லயன் சி.முருகதாசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலனும், சிறப்பு விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக 306 பி மாவட்ட வட பிராந்திய பிரதி பொருளாளர் லயன் வ.ஸ்ரீபிரகாஸும் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் 81 மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (ஒ-207)

## உடும்பைக் கட்டி எடுத்துச்சென்றவருக்கு ரூ.5 ஆயிரம் அபராதம்

தென்மராட்சி, டிசெ.18

உடும்பை சித்திரவதை செய்யும் விதத்தில் கட்டிக்கொண்டு சென்ற தனங்கிளப்பு வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை நேற்று விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 2 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-207)




Study/ Live/ Work in UK/ India

- Jan& Feb. Intake
- Highly Trusted College களில் உடனடி Admission
- இலகுவான Sponsor ஆலோசனைகள்
- விசாகளிற்கு முன்பும் பின்பும் உத்தரவாதமான சேவைகள்.
- இலகுவாக செல்வதற்கான இறுதிச் சந்தர்ப்பம்.

தொடர்புக்கு: Email: bfcservice@yahoo.com

BFC Services
01, Brown Road, Jaffna.
T.P: 0213206826, 0755518040, 0772266889.


## மரண அறிவித்தல்கள்

### பஞ்சாட்சரம் மாணிக்கம்



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி, தம்பையப்புலம் தெய்வீகம் வீட்டை வசிப்பிடமாகவும் தற்பொழுது லண்டனில் வசித்தவருமான பஞ்சாட்சரம் மாணிக்கம் கடந்த 11.12.2010 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பஞ்சாட்சரம் - தெய்வானை தம்பதியரின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும் பத்மாவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், சின்னையாதேசியர், சிவபாக்கியம், பொன்னுத்துரை மற்றும் நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ரவீந்திரகுமார் (கனடா), தெய்வரஞ்சினி (ஜேர்மனி), உதயகுமார் (லண்டன்), காலஞ்சென்ற சிறிகாந்தன் மற்றும் தேவரஜனி (கனடா), நளினி (ஜேர்மனி), ஜனார்த்தனி (கனடா), சந்திரகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மென்மொழி (கனடா), கிரிதரமூர்த்தி (ஜேர்மனி), பிறேமசுகந்தினி (லண்டன்), சிவகுமாரன் (கனடா), பகிதரன் (ஜேர்மனி), ஐங்கரமூர்த்தி (கனடா), ஜனனி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிந்து, ராகுல், தேவகி, பிரவீன், கிரிஜன், ஜெனீவன், ஜெசிந்தன், ஜனகன், பிரகா, சாவித்திரி, பிரசன்னா, சாமினி, சௌமியா, பவன், பிருந்தா, பிரித்திகா, பிரியராணி, கஜனி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.12.2010) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*00441773689074,* தகவல்:
*00492029735914* (107516) குடும்பத்தினர்.

### வைரமுத்துப்பிள்ளை சுந்தரமூர்த்தி

(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபரும், காரைநகர் இளைஞர் சங்க ஸ்தாபகரும்)



காரைநகர், மணற்காட்டைப் பிறப்பிடமாகவும் செட்டிச்சோலை, அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்துப்பிள்ளை சுந்தரமூர்த்தி (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபரும், காரைநகர் இளைஞர் சங்க ஸ்தாபகரும்) நேற்று (17.12.2010) வெள்ளிக்கிழமை சிவபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்துப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அன்னபூரணத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட மருமகனும் காலஞ்சென்றவர்களான நல்லையா (ஆராய்ச்சியாளர், தென்னை அபிவிருத்தி நிலையம்), வைசிகமகபதி மற்றும் திருமதி ரோஹிணியம்மா (Canada) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சத்தியமூர்த்தி (செயற்பாட்டு முகாமையாளர், மக்கள் வங்கி, ஊர்காவற்றுறை), முருக மூர்த்தி (ஆசிரியர், யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ச.சிவராஜேஸ்வரி, மு.மனோகரி (ஆசிரியை, யா/மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ச.சத்தியமூர்த்தி (I.S.A College, Colombo), மு.தர்ஷனா (யா/மகாஜனக் கல்லூரி), மு.கிருஷ்ன் (யா/மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.12.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் செட்டிச்சோலை, அளவெட்டியிலுள்ள அவரது இளைய மகனது வீட்டில் இடம்பெற்று, பூதவுடல் அளவெட்டி கேணிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செட்டிச்சோலை,*
*அளவெட்டி வடக்கு, அளவெட்டி.* தகவல்:
*021 3007080/021 3006778* பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஆயுதக் கலாசாரம் ஒழியாதா?

சங்கானை, வெல்வில் முருகமூர்த்தி ஆலயத்தின் பிரதம குருவும், இந்து மக்களின் நன்மதிப்பைப் பெற்றவரும் சிவாச்சாரிய சிரேஷ்டரும் இந்துமத குருபீடத்தின் யாழ். மாவட்டத்தின் தலைவருமான நித்தியானந்தக் குருக்களின் படுகொலைக்கு யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்ரு சிங்க பகிரங்கமாக மன்னிப்புக் கோரியுள்ளார். யாழ்.மாவட்ட இராணுவத்தினர் சார்பில் தனது மன உணர்வை வெளியிட்ட அவர், இத்தகைய சம்பவம் இனிமேல் நடைபெற இடம்கொடுக்காத வகையில் தாம் செயற் படுவார் என்றும் உறுதி அளித்திருக்கிறார். குடா நாட்டு மக்கள் தளபதியின் கூற்றைக் கருத்தில் கொள்வர்.

போர் முடிந்து போன சூழ்நிலையில், இந்துமத குரு ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டமை குடாநாட்டில் பெரும் பதற்றத்தைத் தோற்றுவித்துள்ளது. அமைதி நிலையை கேள்விக்குறியாக்கி உள்ளது. இச்சம்வத்தின் முன்னரும் குடாநாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு, அச்சமற்ற சூழ்நிலைக்குச் சவால்விடும், பீதிதரும் சம்பவங்கள் அடிக்கடி நடைபெற்றே வந்திருக்கின்றன, வருகின்றன.

அவற்றின் உச்ச நிலையான, பயங்கரமான, பெரிதும் கண்டனத்துக்குரிய ஒரு சம்பவமே இந்துமத குருவின் கொலை. கடவுளுக்கு அடுத்தபடியாக வணக்கத்துக்கு உரியவர்கள் இந்துமத குருக்கள். (ஏனைய சமயங்களிலும் மத குருமார் அவ்வாறே மதிக்கப்படுகின்றார்கள்) அவரை நோக்கித் துப்பாக்கியை நீட்டும் அளவுக் குக் குடாநாட்டிலே சட்டமும் ஒழுங்கும் சீர்கெட்டுப்போய்க் கிடக்கிறது. மத குருமாரின் உயிரைப் பறிக்கும் அளவுக்கு காட்டுமிரட்டித்தனம் குடாநாட் டில் தலைவிரித்து ஆடுகிறது என்பதற்கான ஒரு குறியீடாக் கப்பட்டிருக்கிறது பிரதம குருவின் கொலை.

குடாநாட்டு மக்கள் ஆயுதக் கலாசாரக் காலத்தில் வாழ்கிறார்களா அல்லது ஜனநாயகச் சூழலில் வசிக்கிறார்களா என்பதனை நிர்ணயித்துள்ள ஒரு குறியீடாகவும் சிவாச்சாரியரின் படுகொலைச் சம்பவம் எழுந்து நிற்கிறது.

வடக்கில் இதற்கு முன்னர் நடைபெற்ற கொலை, கொள்ளை மற்றும் வன்முறைகளில் ஆயுதக் குழுக்கள் பின்னணியில் இருப்பதாகவும், படைத் தரப்பின் ஆசீர்வாதம் அவற்றுக்கு உண்டு என்றும் ஒரு சந்தேகம் மக்கள் மத்தியில் நிலவி வந்தது. அதனால் பொதுமக்கள் பீதியுடன் வாழும் சூழ்நிலை உருவாகி இருந்தது. சிவாச்சாரியாரின் கொலையின் பின்னர் குடாநாட்டு மக்களின் பீதி நிலை மேலும் அதிகரித்துள்ளது.

இந்த அபாயகரமான நிலையை நீக்க வேண்டும் ஆயின், அரசாங்கமும் அதன் அலகுகளான படையினர், பொலிஸார், சட்டம் ஒழுங்கின் பாதுகாவலர்கள் என்ற சம்பந்தப்பட்ட தரப்புகள் இதய சுத்தியுடன் செயற்பட வேண்டும். உள்ளொன்று வைத்து நடிவடிக்கை புறமொன்றாகச் செயற்படுவது அல்லது செய லாக்குவதே இது வரை நடைபெற்று வருகிறது.

இந்த நிலை மாற்றப்பட்டால், மாறினால் மட்டுமே குடாநாட்டில், வடக்கில், மட்டுமன்றி தமிழர் வாழும் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் அவர்கள் பீதியும் கிலேசமும் இன்றி வாழ முடியும்.

அதற்கு வகை செய்வதற்கு வடக்கு, கிழக்கில் உள்ள ஆயுதக்குழுக்களிடம் இருந்து ஆயுதங்கள் முற்றாகக் களையப்பட வேண்டும். அதேபோன்று படைத்தரப்பினர் எந்தச் சந்தப்பத்திலும் எந்த வகையிலும் வன்செயல்களுக்கு உதவும் நிலை முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும். அதற்கான கடும் (இராணுவ) விதிகள் நடைமுறையாக்கப்பட வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, தமிழ் மக்கள் இரண்டாம் தரமானவர்கள், அவர்களுக்கு எந்தக்கெடுதியும் செய்யலாம், அவ்வாறு செய்தாலும் அதனைப் பூசிமெழுகித் தம்மைக் காப்பாற்ற உயரதிகாரிகளும் அரச இயந்திரமும் கைகொடுக்கும் என்ற நிலையை படைத்தரப்பினரின் மனங்களில் இருந்து களைய வேண்டும். அதனையும் பரிசுத்தமாகச் செய்வது பிரதானம்.

இத்தகைய ஒரு நிலையை ஏற்படுத்தினால் சிவாச்சாரியார் நித்தியானத்தக் குருக்கள் கொலை தொடர்பாக, இராணுவத்தின் சார்பில் அதன் மதிப்புக்குரிய உயர் பதவியை வகிக்கும் மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்ருசிங்க, யாழ். மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கேட்கும் நிலை போன்ற ஒரு சந்தர்ப்பம் வராது.

தாம் அணிந்துள்ள சீருடைக்குள் ஓரளவு சிறந்த மனிதன் இருக்கிறான் என்று அவர் மனந்திறந்து கூறியது மக்கள் அவரை ஓரளவு புரிந்துகொள்ள வைக்கிறது. இதுவரை எந்த இராணுவ அதிகாரியும் தனது சேவையாளர் சார்பில் மன்னிப்புக் கேட்டதாக இல்லை. ஹத்துருசிங்காவின் ஆழ் மனதில் மனிதாபிமானம், மனிதம் ஊறியுள்ளது புலனாகிறது.

அவர் யாழ். மாவட்டத்தில் பணியாற்றும் காலத்தில் இங்கு பூரண அமைதியை உருவாக்கினால், செயலில் காட்டினால் தொடர்ந்தும் இராணுவத்தினருக்கும் மக்களுக்கும் இடையேயான உறவு சீராகும் வாய்ப்பு அதிகம். அதனை அவர் செய்து காட்டுவாரென நம்புவோமாக.

# ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் பதிவுகள் மேற்கொள்ளலாம்

அச்சுவேலி, டிசெ.18

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள 21 வயதுக்கு உட்பட்ட தனிப்பட்ட பரீட்சார்த்திகளை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அந்த வகையில் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் மாகாணக் கல்வித் திணைக்களத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

எதிர்வரும் 2011.01.01 ஆம் திகதி 21 வயதைப் பூர்திசெய்யாத தனிப்பட்ட பரீட்சார்த்திகள் மாகாணக் கல்வித் திணைக்களத்தில் உரிய முறையில் பதிவு செய்து பதிவு இலக்கத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். (இது ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை விண்ணப்பம் அல்ல) மார்ச் மாதம் இலங்கை பரீட்சைத் திணைக்களம் பரீட்சை க்கு விண்ணப்பம் கோரும் போது மாகாணக் கல்வித் திணைக்களத்தில் பதிவு செய்த பதிவு இலக்கத்தை பரீட்சை விண்ணப்பத்தில் உரிய கோட்டில் பூர்தி செய்து கொள்ள வேண்டும்.

பாடசாலை மட்ட செயற்றிட்டங்கள் மற்றும் மதிப்பீட்டுக்கான பதிவுக்கட்டணமாக மாகாணக் கல்வித் திணைக்களத்தில் 100 ரூபாவும் பரீட்சைக்குத் தோற்றும் பிரதான பாடங்கள் ஒவ் வொன்றுக்கும் தலா 100 ரூபா வீதம் மதிப்பீட்டு வேலைத்திட்டத் திற்கு 100 ரூபாவும் சகல செயற்பாடுகளை மேற்பார்வை செய்யும் கட்ட ணமாக 75 ரூபாவுமாக மூன்று பாடங்களுக்கும் தோற்றும் பரீட் சார்த்தி 575 ரூபாவை மாகாணக்கல் விப் பணிப்பாளரின் முகவரிக்கு மாற்றக் கூடிய காசுக் கட்டளையாக அனுப்பி பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்வதற்கான விண்ணப்ப படிவங்களை வலயக் கல்வி அலு வலகங்களில் பெற்று எதிர்வரும் மார்ச் மாதம் 25ஆம் திகதிக்கு முன் னர் பதிவு செய்ய வேண்டும்.

மாகாணக்கல்வித்திணைக்களத்தின் பதிவு இலக்கம் குறிப்பிடாமல் விண்ணப்பிக்கும் 21 வயதுக்கு உட்பட்டவர்களின் பரீட்சை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது பரீட்சைத்திணைக் களம் அறிவிக்கும் பரீட்சைக் கட்டணத்தை உரிய முறையில் செலுத்தி இலங்கை பரீட்சைத் திணைக்களத்துக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்க வேண்டும்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த மாணவர்கள் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத் திற்கு தமது பதிவு தொடர்பான விண்ணப்பங்ளை அனுப்பி வைக்க வேண்டும். (201-11)

# பிரதேச செயலர் பதவி ரத்தாகும்: உதவி அரச அதிபர்களாக நியமனம்

## சட்டமா அதிபருடன் அரசு ஆலோசனை

கொழும்பு,டிசெ.18

பிரதேச செயலாளர்கள் பதவிகளை ரத்து செய்வதுபற்றி அரசு ஆலோசித்துவருகிறது. இந்தவிடயம் தொடர்பாக சட்டமா அதிபருடன் கலந்தாலோசிக்கப்பட்டுவருவதாகத் தெரியவருகின்றது.

பிரதேச செயலாளர் என்ற பெயரை ரத்து செய்துவிட்டு அதிக அதிகாரங்களுடன் கூடிய உதவி அரச அதிபர்களாக அவர்களை நியமிப்பது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது. அமைச்சர் ஜோன் செனவிரட்ன இத்தகவலை வெளியிட்டதாக கொழும்பு ஆங்கில பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதுபற்றி சட்டமா அதிபருடன் தொடர்பு கொண்டுள்ளோம். சட்டமா அதிபர் இது தொடர்பாக தற்போது நடவடிக்கை எடுத்து வருகின்றார். மேலதிக மாவட்டச் செயலாளர்கள் இனிமேல் உதவி அரச அதிபர்களாக நியமனம் பெறுவார்கள். இவர்களின் செயற்பாடுகளை அவதானிக்கும் அதிகாரம் அரச அதிபர்களுக்கு வழங்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உதவி அரச அதிபர்களால் தாம் அநீதியாக நடத்தப்பட்டுள்ள தாக எவராவது கருதுவாரானால் அவர் அரச அதிபரிடம் முறைப்பாடு செய்து நியாயம் பெறமுடியும் என்று அவர் கூறியுள்ளார். (ப)

## நிந்தவூர் கொலைச் சம்பவம்

# ஒன்பது வருடங்களாக தலைமறைவாகவுள்ள றிசேவ் இன்ஸ்பெக்டருக்கு மரண தண்டனை

அம்பாறை, டிசெ. 18

நிந்தவூரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று தொடர்பாக தலைமறைவாகியுள்ள கல்முனை பொலிஸ்நிலைய றிசேவ் பொலிஸ் சப் இன்ஸ் பெக்டர் ஒருவருக்கு கல்முனை மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து நேற்று வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்தது.

கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் இந்தத் தீர்ப்பினை வழங்கியதுடன், மேலும் நான்கு குற்றச்சாட்டுகளுக்கும் தண்டனை வழங்கினார்.

கடந்த 2001.01.03 ஆம் திகதி உமர் தாஹிர் எனும் கல்முனை பொலிஸ் நிலைய றிசேவ் பொலிஸ் சப் இன்பெக்டர், தனது மாமன் குடும்ப காணி எல்லைத் தகராறின் போது தனக்கு வழங்கப்பட்ட தற்பாது காப்புக்கான றிவோல்வர் மூலம் சுட்டதால் கலந்தர் சுலைமா லெவ்வை கொலை செய்யப்பட்டதுடன், குறித்த மேல் நீதிமன்ற வழக்கில் மீராசாகிபு அக மட் லெவ்வை, அகமட் லெவ்வை முகம்மது முஸம் மில், சுலைமா லெவ்வை கதீஜா, அக மட்லெவ்வை முபீலா ஆகியோரை கொலைசெய்ய எத்தனித்ததாகவும் வழக்கு தொடுநர் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டு சாட்சியங்களும் நெறிப்படுத்தப்பட்டிருந்தன.

மேற்படி எதிரியான றிசேவ் பொலிஸ் சப் இன்பெக்டர் உமர் தாஹிர் மீது கல்முனை மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் தொடரப்பட்ட வழக்கில் எதிரி விளக்கத்திற்குச் சமுகமளிக்காமல் தொடர்ச்சியாக தலைமறைவாகியுள்ளார்.

அவருக்காக எந்தவொரு சட்டத்தரணியும் மன்றில் ஆஜராக வில்லை.

ஆனாலும் எதிரி மீதான கொலைக் குற்றச் சாட்டு உட்பட மேலும் நான்கு குற்றச்சாட்டுக்களின் பேரிலும் கண்ட சாட்சியங்கள் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபணமாகின.

இதனைத் தொடர்ந்து நேற்று வெள்ளிக்கிழமை கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் எதிரியை ஐந்து குற்றச் சாட்டுக்களுக்கும் குற்றவாளியாகக் கண்டு தீர்ப்பு வழங்கினார்.

இதன்படி முதலாவது குற்றச் சாட்டுக்கு மரண தண்டனையும், மேலும் நான்கு பேருக்கு கொலை எத்தனிப்பு செய்த நான்கு குற்றச்சாட்டுக்களுக்கும் தலா பத்து வருட கடூழிய சிறைத்தண்டனையும், தலா 15 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்து மேல் நீதி மன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங் கம் தீர்ப்பு வழங்கினார். (ஒ-30)

## நாளை

மார்கழி 04 19.12.2010

ஞாயிற்றுக்கிழமை

| | | |
|---|---|---|
| திதி: | : | திரயோதசி பி.ப. 03.09 வரை |
| நட்சத்திரம் | : | கார்த்திகை பி.ப. 04.41 வரை |
| [illegible] | : | 09.23-10.53 வரை |
| [illegible] | : | 04.5[illegible] வரை |

# திருக்கேதீச்சரத்தில் திருவாசக விழா

மன்னார்,டிசெ.18

பாடல்பெற்ற திருத்தலமாகிய திருக்கேதீச்சரம் திருவாசக மடத்தில் திருவெம்பாவையின் இறுதி மூன்று நாள்களும் மிகச் சிறப்பாக நடைபெற உள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தினரால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள இந்த நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவுகள், திருவாசகப் பண்ணிசை, சங்கீத கதாப்பிர சங்கம் ஆகிய பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறும். திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையின் செயலர் புலவர் அ.திருநாவுக்கரசு மற்றும் திரு [illegible]மடத்தின் செயலர் திருமதி [illegible]யோகநாயகி அருள்லிங்கம் ஆகியோர் விழாவிற்கு தலைமை வகிப்பார்

சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம், சைவப்புலவர் க.நித்தியதசிதரன் ஆகியோருடைய சிறப்புச் சொற்பொழிவுகள் இடம்பெறவிருக்கின்றன. ஆதீன ஓதுவார் சி.தில்லைமணி, சங்கீத பூஷணம் சி. சிவஞான ராஜா, திருவாசகச் செம்மல் வை.சே.சிவராஜா ஆகியோரின் திருவாசகப் பண்ணிசை நிகழ்வுகளும், திருமதி விஜயலட்சுமி சிவஞானத்தின் (திருகோணமலை) சங்கீத க்தாப்பிரசங்க நிகழ்வும் நடைபெற உள்ளன. திருவாசக விழாக் காணவரும் அடியார்களுக்கு திருவாசக மடத்தில் பகல் அன்னதானம் வழங்கப்படுமென வும் திருவாசக மடப்பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு அலுவலகக் கட்டடங்கள் வடமராட்சி கிழக்கில் நிர்மாணம்

பருத்தித்துறை, டிசெ.18

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீட்சித்திட்டத்தின் கீழ் வடமராட்சி கிழக்கில் அரச அலுவலகக் கட்டடங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை, தபால் நிலையம், கால்நடை வைத்தியர் அலுவலகம் ஆகிய அரச அலுவலகங்களே நிர்மாணிக்கப்படவுள்ளன.

ஏற்கனவே அப்பகுதியிலுள்ள யுத்தத்தினால் சேதமடைந்த பாடசாலைக் கட்டடங்கள், வீதிகள் மேற்படி திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை வடமராட்சி கிழக்கிலுள்ள ஏழு கிராம சேவையாளர் பிரிவுகளில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டதையடுத்து அபிவிருத்திப் பணிகள் அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஒ-201-190)


மட்டுவில் தெற்கு
வளர்மதி சனசமூக நிலைய ஸ்தாபகர்
அமரர் பொன். நாகமணி அவர்களின்

## 14ஆம் ஆண்டு நினைவலைகள்

பூமிக்காய் 1936.07.16 விண்ணுக்காய் 1996.12.05



அமரர் பொன் நாகமணி அவர்கள்

தேன்குளத்தில் மலர்ந்த தேகமிகு வெண்டாமரையே
தேவர் உலகத்தில் உம் முகவரியைத் தாருமையா
பேதமின்றி வரைந்து விட்ட வளர்மதியில்- நின்று
பேசுகின்றோம் நின் பேசற்கரிய நற்செயலை

பதினான்காண்டுகள் முன் இவ்வுலகில் வாழ்ந்த நாளில்- நீர்
ஈன்று விட்ட பெண்ணவள் இன்னும் இளமை குன்றவில்லை

உலகத்தின் கண்களுக்கு உருவத்தை மறைத்துவிட்டு
உள்ளத்தால் உயர்ந்து விட்ட உணர்வைத்திட்டினீர்

மாண்புகழ் படைத்த மானிடனே தென்றல் தரும்- நின்
மங்கல வாழ்த்தொலிகள் எம் செவியில் இனிக்கிறது
தூய உள்ளத்தோடு தூமதியாய் ஒளிர்பவனே
நித்தமும் உம்மை நினைவில் கொண்டுள்ளோம்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

நிர்வாகம்,
வளர்மதி சனசமூக நிலையம்.

(107466)



## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

18.11.2010இல் இந்தியாவில் காலமான
புளியங்கூடல், ஊர்காவற்றுறையைச் சேர்ந்த



அமரர் கந்தையா மகேஸ்வரன்
(பரா மனேஜர், முன்னாள் கிளை முகாமையாளர்- வேலணை, ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்)

தீவகத்துக் கூட்டுறவை தீரமுடன் வளர்த்த
கந்தையா என்னும் கனவான் தனயனாய்
மஞ்சள் முகத்துடன் மகேஸ்வரன் நாமத்தில்
மகவாய் அன்று மண்ணில் உதித்தாயே

வேலணை பலநோக்கில் வேண்டும் ஒருவனாய்
பதினைந்து ஆண்டுகள் பக்குவமாய் பணிசெய்து
ஊர்காவற்றுறையில் ஊர்போற்ற சிலகாலம்
நன்றாய் பணிசெய்து நன்மதிப்பு பெற்றாயே
ஓய்வுக் காலத்தில் ஓர் குறையும் அற்றவனாய்
பிள்ளைகள் அரவணைப்பில் பெருமிதம் கொண்டவனாய்
மைந்தன் ஒருவனை மணமகனாய் சென்னையிலே
கண்ட பூரிப்பில் காலம் துறந்தாயோ?

மங்காப் புகழுடனே மண்ணில் வாழ்ந்த
மகேஸ்வரன் அண்ணலின் முப்பத்திஓராம் நாள்
நிறைவு தினத்திலே அஞ்சலி செலுத்தி
அமைதியுடன் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

முன்னாள் வேலணை ப.நோ.கூ.சங்க பணியாளர்கள்,
முன்னாள் ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்க பணியாளர்கள், } நண்பர்கள்.

(107769)



## காணி விற்பனைக்கு

தாவடி தெற்கு, பத்தானை வீதியில் 4½ பரப்பு உடைய ஒரு காணியும், வீட்டுடன் 4½ பரப்புடைய மற்றுமொரு காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0777667136, 0112503415, 0213007003.

## கோழிக்குஞ்சு விநியோகம்

பிறிமா N01 புறொயிலர் குஞ்சு உடன் விற்பனைக்கு உண்டு.
நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர். 021 222 6944.

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

யாழ். நகரில் இருந்து 3 km தூரத்தில் யாழ் பல்கலைக்கழக சூழலில் கொக்குவில் கிழக்கு கோயில் வீதியில் 4 பரப்புக் காணியில் தனி வீடு, நன்னீர்த் தனிக் கிணறு மற்றும் இதர வளங்களுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு -0783251872

## இறைச்சிக்கோழி விற்பனை

கூடிய நிறையிலுள்ள புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். கூடுதல் கொள்வனவு செய்வோருக்கு விசேட விலைக்கழிவு
விஜயகுமார், குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும்

## அசோகா

(வார்த்தைகளற்ற நாடகம்)
இலங்கையிலுள்ள திருமறைக் கலாமன்ற பல்லின இளைஞர்கள் இணைந்து வழங்கும் படைப்பு

காலம்: இன்று (18.12.2010) சனிக்கிழமை
நேரம்: மாலை 6.00 மணி
இடம்: கலைத்தூது கலையகம், 286, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமறைக் கலாமன்றம்
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

அனுமதி இலவசம்

## விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு

மானிப்பாய் மெமோறியல் பாடசாலைக்கு முன்பாக உடுவில் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய மாடிவீடு குத்தகைக்கு அல்லது விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 0774833931

## வீடு விற்பனைக்கு

மானிப்பாயில் 4.2 பரப்புக்காணியில் சகல வசதிகளுடனும் 5 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. (16 தென்னை, 7 பலா, 4 மா மரங்களைக் கொண்டதும், மாதாந்தம் 2500 ரூபா தொடக்கம் 3500 ரூபா வரை வருமானம் பெறக் கூடியதும் கிணறு, Tank, Motor வசதிகளையுடைய காணி) 5 நிமிட நடந்துசெல்லும் தூரத்தில் கோயில்கள், வைத்திய சாலை, பஸ்தரிப்பிடம், வங்கிகள், சுப்பர் மார்க்கட் ஆகிய சிறந்த சுற்றுச் சூழலில் அமைந்துள்ளது.
தொடர்புகளுக்கு:
தொ.பே. 011 2360135, 075 5002618
Email: transworldc@sltnet.lk

## திருமண சேவை

பட்டதாரிகள், பொறியியலாளர்கள், டாக்டர்கள், ஆசிரியர்கள் உட்பட அநேக உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களின் ஜாதகங்கள் எம்மிடம் உண்டு. உங்கள் விருப்பத்திற்குரிய மணமக்களைத் தெரிவுசெய்திட நேரில் சந்தியுங்கள்.
த.சிவானந்தன்
தொலைபேசி:- 0778996281

## பெண் ஊழியர்கள் தேவை

திருநெல்வேலியிலுள்ள காகிதாதிகள் விற்பனை நிலையத்துக்கு பெண் ஊழியர் தேவை. திருநெல்வேலிக்கு அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: 0770790095, 0771147424


## கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் 20.12.2010 என அறிவிக்கப்பட்டிருந்தது. கணக்கறிக்கை முடிவடையாத காரணத்தினால் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது. கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். அங்கத்தவர்கள் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

திரு.சி.இராசதுரை - பொதுச் செயலாளர்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.
பழைய மாணவர் சங்கம்.


## துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலையின் முன்னாள் அதிபர்
மு.செல்லையா அவர்கள்
16.12.2010 (வியாழக்கிழமை) அன்று காலமான செய்திகேட்டு துயர் அடைவதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு குடும்பத்தவரின் துயரிலும் பங்கு கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும்
பாடசாலை அபிவிருத்திச்சங்கம்
யா/இளையதம்பி இந்து வித்தியாலயம், வண்ணார்பண்ணை.

வசீகரத் தோற்றத்திற்கு!
## சந்தனாலேப



(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல்பூச்சுமருந்து)
சந்தனாலேப
'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்).
MANUFACTURED BY: SANJEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.

## STUDY IN U.K.



IELTS அவசியமில்லை

யாழ். நகரில் மிகக் குறைந்த செலவில் உங்கள் கனவுகளை நனவாக்கிட உங்கள் நம்பிக்கையான நண்பன்
- ★ கல்லூரிக் கட்டணம் அதிகூடிய தொகை 2000 பவுண்ஸ் மட்டுமே.
- ★ சேவைக்கட்டணம் முற்றிலும் இலவசம்
- ★ குடும்பமாக கல்வி பயிலக் கூடிய வசதிகள்
- ★ மிகக் குறைந்தசெலவில் Sponsor வசதிகள்
- ★ பிரபலமான சட்டத்தரணிகளின் அனுசரணையுடன் Documentation வசதிகள்
- ★ லண்டனில் தரம் வாய்ந்த கல்லூரிகள்/பல்கலைக்கழகங் களில் அனுமதிகள்

January Admission இற்கான இறுதி வாய்ப்பு

Visa கிடைத்த பின்பே கல்லூரிக் கட்டணம் செலுத்தும் வசதிகள். இச்சலுகை December 31 வரை மட்டுமே!

Student Visa வுக்கான விதிமுறைகள் கடுமையாக்கப் படுவதற்கு முன்பாக இறுதி வாய்ப்புக்கு முந்திக்கொள்ளுங்கள்.

தொடர்பு: 077 0871616

அலுவலக முகவரி: 245, பலாலி வீதி, கந்தர்மடம். (Baby Photo அருகில்)
அலுவலக நேரங்கள்: திங்கள் - சனி வரை காலை 9 - பிற்பகல் 3.30



## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் பேரம்பலம் பராசக்தியம்மா

மலர்வு 12.06.1940
உதிர்வு 12.12.2005

கைக்குள் உனை வைத்து
காலமெல்லாம் பார்த்திருந்த - எமை
பாரினிலே தவிக்க விட்டு
தனிவழி சென்றீரோ? அம்மா!

கைதடி, நுணாவில்,
சாவகச்சேரி.

திருமதி தி.பேரின்பராணி குடும்பம்.

(107497)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரியில் சுகாதாரச் சீர்கேடு அதிகாரிகள் கவனம் எடுப்பார்களா?

தென்மராட்சி,டிசெ.18

டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் தீவிர முயற்சி மேற்கொண்டு வரும் சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் மேற்படி நகர்ப்பகுதியில் ஏற்பட்டுள்ள சுகாதார சீர்கேட்டைத் தடுக்க எதுவித முயற்சியும் மேற்கொள்ளாமல் இருப்பது குறித்து பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சாவகச்சேரி சந்தியிலிருந்து வைத்தியசாலை வரையான அரை மைல் தூரத்தில் தேங்கி நிற்கும் வெள்ளத்தால் ஏற்படும் சுகாதார சீர்கேடுகள் குறித்தே மக்கள் கவலை தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் வங்கிகள், கூட்டுறவு அலுவலகம், பிரதேச செயலகம் போன்றவற்றுடன் பெருமளவு வர்த்தக நிலையங்களும் உள்ளன. இவற்றில் ஏழு உணவு நிலையங்களும் ஒரு பேக்கரியும் அமைந்துள்ளன.

இந்தப் பகுதியில் தேங்கி நின்ற மழை வெள்ளம் வழிந்தோடக் கூடிய ஏற்பாடுகளை பொலிஸாரும் வீதி அபிவிருத்திச் சபையினரும் நகர சபையினரும் மேற்கொண்டுள்ள போதிலும் இந்தப் பகுதியில் ஏற்பட்டுள்ள குழிகளில் தேங்கி யுள்ள வெள்ளம் வாகனங்கள் செல்லும் வேளையில் வீதியில் வழிந்தோடுகிறது. சில உணவகங் களின் முன்னால் தற்போதும் மழை வெள்ளம் தேங்கி நிற்கின்றது


கடந்த வாரம், உலர்ந்த கால நிலை நிலவிய போது, நிலம் காய்ந்திருந்த போது வாகனங்கள் செல்லும் வேளைகளில் வாகனத்தை மறைத்து தூசிகள் பறந்து உணவகங்களுக்குச் சென்று அங்கு உணவு அருந்துவோரின் உணவுகளில் தேங்கியதைக் காணமுடிந்தது. இது எந்தளவுக்குச் சுகாதார சீர்கேட்டை உருவாக்கும் என்பதை சுகாதாரத் திணைக்களத்தினர் அறிய மாட்டார்களா? அல்லது கவனிக்கத் தவறிவிட்டார்களா?

மழை பெய்யும் வேளைகளில் உணவகங்கள் முன்பாக வெள்ளம் தேங்கி நிற்பதும் வெயில் காலத்தில் வீதியில் எழும் தூசிகளால் உணவுப் பொருள்கள் மாசடைவதும் சுகாதாரத் திணைக்களத்தினருக்குத் தெரியவில்லையா? இதனால் ஏற்படக் கூடிய பாதிப்புகளை அறிய மாட்டார்களா?

இந்த ஏழு உணவகங்களில் தினமும் நூற்றுக்கணக்கானோர் மூன்று வேளை உணவு அருந்துகின்றனர். அங்குள்ள பேக்கரியில் தயாரிக்கப்படும் பாண் நகர்ப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்யப்படுகின்றது.

எனவே இத்தகைய சுகாதாரச் சீர்கேட்டுகளை யாரும் கவனிக்க மாட்டார்களா என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (201-207)

## புதிய வருகை.....



சுத்தமாக்கல்: இலங்கை கிரிக்கெட் நிதியத்தினால் ஒதுக்கப்பட்ட நிதியின் மூலம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கெனக் கொள்வனவு செய்யப்பட்ட புல் வெட்டும் இயந்திரத்தை பாடசாலை அதிபர் நோபெல் விமலேந்திரன் இயக்கி வைக்கிறார். (86)

# யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் 5 நாள்கள் ஆளுமை விருத்திப் பயிற்சி

## செயல்திறன் அரங்க இயக்கம் நடத்தியது

யாழ்ப்பாணம், டிசெ. 18

யாழ். இந்து ஆரம்பப் பாடச்ாலையில் மாணவர்களுக்கான அரங்கு ஊடான ஆளுமை விருத்தி செயற்றிட்டத்தின் இறுதி நாள் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. யாழ். செயல்திறன் அரங்க இயக்கத்தினால் மாண வர்களுக்கான ஆற்றல் விருத்திச் செயற்பாடுகள் கடந்த ஐந்து நாள்களாக பயிற்சிப் பட்டறைப் பாணியில் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

நேற்றைய தினம் இறுதி நாள் நிகழ்வுகள் நடைபெற்றன. தெரிவு செய்யப்பட்ட 31 பிள்ளைகள் இந்தச் செயற்றிட்டத்தில் கலந்து கொண்டனர். கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் வகையிலான இந்தப் பயிற்சிப் பட்டறையில் அரங்கப் பயிற்சிகள் ஊடாக மாணவர்களின் திறன்கள் வெளிக் கெண்டு வரப்பட்டன.

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் செயல்திறன் அரங்க இயக்கம் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் செயல்திட்டத்தின் ஒரு பகுதியாகவே இந்தப் பயிற்சிப் பட்டறைப் பாணியிலான ஆளுமை விருத்தி அரங்கு மேற்கொள்ளப்பட்டதாக நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

நிகழ்வின் இறுதி நாளான நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு பயிற்சிப் பட்டறையின் இறுதி நாள் நிகழ்வு இடம்பெற்றது. பாடசாலை அதிபர் எஸ். தியாகலிங்கம் செயற்றிறன் அரங்க இயக்கத்தின் இயக்குநருமான தே. தேவானந்த் மற்றும் பெற்றோர் உட்படப் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

''பிள்ளைகளின் ஆற்றல் கற்பித்தலை மகிழ்ச்சிகரமாக மேற்கொள்வதும் புதிய கல்வி சீர்திருத்தத்தின் பண்பு சார் விருத்தியை மேம்படுத்துவதற்குமான ஒரு தளமாக இத்தகைய செயற்பாடுகள் அமையும்'' என்று நிகழ்வில் பேசிய பாடசாலை அதிபர் எஸ். தியாகலிங்கம் தெரிவித்தார். (ம-319)

# மீள்குடியமர்ந்தோர் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரச கடன் உதவித் திட்டம்

சண்டிலிப்பாய்,டிசெ.18

குடாநாட்டில் மீள்குடியமர்ந்த குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் தொழில் முயற்சியில் ஈடுபடுவதற்காக ஒவ்வொரு குடும்பத்துக்கும் இரண்டரை லட்சம் ரூபா நிதியை அரசு கடனாக வழங்கவுள்ளது. இதற்கான விண்ணப்பப் படிவங்கள் பிரதேச செயலங்களால் கிராம உத்தியோகத்தர் ஊடாக பயனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை- வன்னியில் இடம்பெற்ற போர் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் எந்தப் பொருள்களுமின்றி குடாநாட்டுக்கு வந்து மீளக்குடியமர்ந்துள்ளனர். வருமானமின்றி, தொழிலின்றி வாழ்த்து கொண்டிருக்கும் இவர்களின் வாழ்வாதாரத்தை வளம்படுத்த முன் வந்த அரசு தொழில் முயற்சியில் ஈடுபடுவதற்கான கடன் வழங்கும் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

நான்கு வீத வட்டியுடன் வழங்கப்படவிருக்கும் இந்தக் கடனை வங்கிகள் மூலம் பெற்றுக் கொள்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (201-115)

# மாநகர சபையினால் மலசலகூடம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.18

யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதியில் பொது மக்களின் வசதியைக்கருதி மாநகர சபை மலசலகூட வசதிகளை மீண்டும் ஆரம்பித்து வைத்துள்ளது. கடந்த பல வருடங்களாக பயன்படுத்தப்படாத நிலையில் இவை மூடப்பட்டுக் கிடந்ததனால் நகருக்கு வரும் பொது மக்கள் பெரும் சிரமங் களை எதிர்கொண்டு வந்தனர். மின்சார நிலைய வீதியில் உள்ள மாநகர சபைக்குச் சொந்த மான காணியில் அமைந்துள்ள இந்த மலசல கூடங்களில் திருத்த வேலைகள் துரிதமாக்கப்பட்டுள்ளன. (ம-7)

# வீதிக் குழிகளால் காயமடைவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

தென்மராட்சி, டிசெ.18

பருவப் பெயர்ச்சி மழையை அடுத்து குடாநாட்டின் பெரும்பாலான வீதிகள் சேதமடைந்துள்ளன. அவற்றால் ஏற்படும் விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

மழை வெள்ளம் தேங்கி நின்ற வீதிக் குழிகளில் மோட்டார் சைக்கிள் சில்லு இறங்கியதால் தூக்கி வீசப்பட்ட இருவர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மீசாலையைச் சேர்ந்த எம்.கோபி (வயது 26), ராஜன் (வயது34) ஆகியோர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற வருகின்றனர்.

ஏ-9 வீதியில் ஏற்பட்டுள்ள குழியில் மோட்டார் சைக்கிள் சில்லு இறங்கியதால் தூக்கி வீசப்பட்டு இதுவரை 15 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். (ம-207)

# யுவதிகளுக்கு தையல் இயந்திரங்கள் வேள்ட் விஷன் நிறுவனம் வழங்கியது

தென்மராட்சி,டிசெ.18

கைதடியில் மாவட்டக் கூட்டுறவுச்சபையால் நடத்தப்பட்ட தையல் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட யுவதிகளுக்கு வேள்ட் விஷன் நிறுவனம் தையல் இயந்திரங்களையும் தையல் உபகரணங்களையும் வழங்கியுள்ளது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட நாவற்குழி, கைதடி, மட்டுவில் ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான உபகரணங்களையும் வழங்கினர்.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர். சில்வெஸ்திரி அலன்ரின், வேள்ட் விசன் நிறுவன பிரதேச புனர் நிர்மாண திட்ட இணைப்பாளர் றொன சமோ, பிரதேச உதவித் திட்டப் பணிப்பாளர் திருமதி இ.இரகுநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தையல் பயிற்சிகளைப் பூர்த்தி செய்த யுவதிகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கென 150 பிளாஸ்ரிக் கதிரைகள், மூன்று உருக்கு அலுமாரிகள், பிரசர் பொக்ஸ்-2, நிறுவை இயந்திரம், குளுக்கோமீற்றர், 2மறைப்புத் திரை உட்பட மருத்துவ உபகரணங்களும் பணிமனை உத்தியோகத்தர்களிடம் கையளிக்கப்பட்டன. (ம-207)




# பாகுபாடுகளை நீக்கி உரிமையைப் பேணுவது மனித உரிமைப் பாதுகாவலர்களின் கடமை

## ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர்

யாழ்ப்பாணம்,டிசெ.18

இனம், மதம்,மொழி,பால் இவற்றுக்கிடையே காட்டப்படும் பாகுபாடுகளை நீக்கி மக்களின் உரிமைகளைப் பேணுவது மனித உரிமை பாதுகாவலர்களின் கடமையாகும் என்று மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் தங்கவேல் கனகராஜ் தெரிவித்தார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் [illegible]கையில் :

இந்த வருடம் கொண்டாடப்படுவது மனித உரிமைகள் தினத்தின் 62 ஆவது ஆண்டாகும். யாழ்ப்பாணம் போரினால் பெரிதும் பாதிப்படைந்துள்ளமையால் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இனரீதியாகத் தாக்கப்படும் சித்திரவதைகள், சிறுவர்களுக்கான உரிமைகள் போன்ற மக்களது உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராய்ந்து பாதுகாப்பினைப் பெற்றுக் கொடுப்பவர்களே மனித உரிமை பாதுகாவலர்கள்.

இதேவேளை- ஊடகவியலாளர்கள், வைத்தியர்கள், சட்டத்தரணிகள், மனித உரிமை உறுப்பினர்கள் இவை தொடர்பாக ஆராய முடியும். அத்துடன் மாணவர்கள் மத்தியில் இவை தொடர்பான விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்படவேண்டும் என்றார் அவர்.

பிரதேச செயலர் திருமதி அன்ரன் யோகநாயகம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் வெளிக்கள உத்தியோகத்தர் பிறைன் கன்டர், டி.ஆர்.சி.யாழ்.பிரதிநிதி பபிலோ புலோறஸ் மற்றும் சமூக ஆர்வலர்களும் பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டனர்.

மனித உரிமைகள் தினப் போட்டிகளின் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. அத்துடன் சமூக ஆர்வலர்களது '' மனிதம் காப்போம்'' எனும் நாடகமும் இடம்பெற்றது. (201 313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



M.M.V. வீதி,

புதிய பிரிவுகள் ஆரம்பம்

DIPLOMA IN MICROSOFT OFFICE
DIPLOMA IN PC APPLICATION
ADV. DIP. IN HARDWARE NETWORKING
DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING
DIP. IN VIDEO PRODUCTION MULTIMEDIA
DIP. IN WEB DESIGNING DEVELOPMENT
DIP. IN PRE-PRESS DESKTOP PUBLISHING
TALLY AUTOCAD C++

ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்
Spoken English
veta Experts In English Training An ISO 9001:2000 Company
புதிய பிரிவுகள் ஆரம்பம்.
17/12/2010 8.30 a.m. & 3.30 a.m.
19/12/2010 7.30 a.m. & 10.30 a.m.
பாடசாலை மாணவர்களுக்கான
ICT - (Grade 10 & 11)

அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட கணனி நிறுவனம்
DMI COMPUTER EDUCATION
No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்பாணம். Tel.: 021-222 4403
M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) நெல்லியடி. Tel. : 021-226 2470
ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்


# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ. 18

யூனியன் அஷ்யூரன்ஸ் காப்புறுதியின் அனுசரணையில் யாழ். முகாமையாளர் சம்மேளனமும் இலங்கை பொறியியலாளர் சங்கத்தின் வடபிராந்தியம் யாழ்.விஞ்ஞானச் சங்கத்தின் 'சி' பிரிவு ஆகியன இணைந்து நடத்தும் தொழில் புரியும் இடங்களில் ஏற்படக்கூடிய விபத்துக்கள் ஆபத்துக்கள் சுகாதாரப் பிரச்சினைகளும் பாதுகாப்பு முறைகளும் என்னும் கருத்தரங்கு இன்று மாலை 5 மணி தொடக்கம் 6 மணி வரை நடைபெறவுள்ளது.

நல்லூரில் அமைந்துள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த பேராசிரியை எஸ்.ஆர். டி.எ செனவி ரட்ண வளவாளராகக் கலந்து கொள்வார். ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (201)

## மண்ணெண்ணெய் விநியோகம்

கொடிகாமம், இராமாவில் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு யாழ். வணிகர் மன்றப் பிரதிநிதிகளால் தலா ஐந்து லீற்றர் வீதம் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (204-207)


# மணிவிழா நாயகனை மனதார வாழ்த்துகின்றோம்



கடந்த 38 வருடங்கள் அரச சேவையில் பணியாற்றியதுடன் எமது தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகப் பணியாற்றி இன்று (18.12.2010) ஓய்வுபெறும்

**திரு.சி.தேவராசா**
*(நிர்வாக உத்தியோகத்தர்)*

அவர்கள் அகவை அறுபதின்
நிறைவைக் கொண்டாடும் இந்நாளில்
இன்னல்நிறை தென்மராட்சிக்கு
கண்ணியமான சேவை புரிந்தவரே–ஏதிலிகளாய் வந்த
வன்னி மக்களுக்காய் முனைப்புடனே உழைத்தவரே
உன்னத சேவையால் உயர்ந்தவரே – உங்கள் சேவை
மண்ணில் நிலைக்க, ஓய்வுக்காலம் இனிதே சிறக்க
உளமார வாழ்த்துகின்றோம்! வாழ்க வாழ்கவே!!

பிரதேச செயலரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்
பிரதேச செயலகம், தென்மராட்சி.



# யாழ் மண்ணில் முதற் தடவையாக பிருந்தாவன் கல்லூரி....

Brindavan College
Group of Institutions, Bangalore, India
Approved by AICTE, Recognized by Govt. & UGC and Affiliated to Bangalore University & VTU



www.brindavancollege.com

**Engineering courses**
- B.E- Electronics & Communication Engineering
- B.E- Computer Science Engineering
- B.E- Information Science Engineering
- B.E- Mechanical Engineering
- B.E- Civil Engineering

**Under-graduate courses**
- BCA - Bachelor of Computer Application
- BBM - Bachelor of Business Management
- B.Com - Bachelor of Commerce
- B.Sc., Computer Science
- B.Sc., Biotechnology
- B.Sc., Microbiology
- B.Sc., Genetics

A/L 2"S" சித்திகள் போதுமானது

**Post-graduate courses**
- MBA - Master of Business Administration
- MCA - Master of Computer Applications
- M.Sc., Biotechnology
- M.Sc., Microbiology
- M.Sc., Applied Genetics

**Pre-university courses (10+2)**
Science, Arts & Commerce courses




- Presently over 100 Sri Lankan students are studying.
- About 800 Sri Lankan students have graduated.
- Degree recognized by UGC - Sri Lanka.
- Pay US$100/- for reservation and book the seat.
- Students with 2/3 A/L passes or awaiting results can register for UG courses and save one year.

Free Seminar & Spot Admission by Chairman / Principal at JAFFNA

| VENUE | DATE | TIME |
| --- | --- | --- |
| Green Grass Hotel 33, Aseervatham Lane,Hospital Road | 20- Dec- 2010 | 10 AM |

மேலதிக விபரங்கள் மற்றும் அனுமதிக்கு கல்லூரி பிரதிநிதியை தொடர்பு கொள்ளவும்
S. K. சிவராம் - 077 9703866



பிரிவு A
18 - 12 - 2010
சனிக்கிழமை
மு.ப 11.00

பிரிவு B
20 - 12 - 2010
திங்கட்கிழமை
மு.ப 10.00

பிரிவு C
22 - 12 - 2010
புதன்கிழமை
பி.ப 3.00

உங்கள் குழந்தையின் ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி..........
பள்ளி விடுமுறைக் காலத்தைப்
பயனுள்ளதாக மாற்றிடுங்கள்,
இன்றே இணைந்திடுங்கள்.....
தரம் 3 முதல் 9 வரையான மாணவர்களுக்கெனப்
பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட கற்கைநெறி
"GATEWAY e-Kids"
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.



IT ISLAND - GATEWAY CENTRE
347, Kasthuriyar Road, Jaffna. Tel : 021 567 5555



SALE! SALE! SALE!

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு
எமது அன்பு வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கிணங்க
01.12.2010 - 31.12.2010 வரை
அதிரடி விலைக்கழிவு
ஆடவர், பெண்கள், சிறுவர்களுக்கான அனைத்துப் புடைவைத் தினுசுகளையும் மாணவ மாணவிகளுக்கான சீருடைத் துணிவகைகளையும் மிகவும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
(19.12, 26.12 ஞாயிறு தினங்களிலும் கடை திறந்திருக்கும்)

லைடன் புடைவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி, (பஸ்நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.



# வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி
## லொறி 26ஸ்ரீ 5777 உடற்கோப்பு மறுசீரமைப்பு

எமது சங்கத்தின் லொறி 26ஸ்ரீ 5777 மறுசீரமைப்பதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேலதிக விவரங்கள் விண்ணப்பப் படிவங்களை தலைமைக் கந்தோரில் பெற்றுக்கொள்ளவும். விண்ணப்ப முடிவுத் திகதி: 05.01.2011 ஆகும்.

பொது முகாமையாளர்
(சி/573591) வலி.கிழக்கு (தெ.ப) ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி.



# விநியோகத்தர் தேவை

பிரபல மென்பான உற்பத்தி நிறுவனமான ஷா-கோல (SHAA -COLA) நிறுவனத்துக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் வவுனியா பிரதேசங்களுக்கு விநியோகத்தர்கள் தேவைப்படுகின்றனர்.

புதிய தொழிநுட்பத்தில் தயாரிக்கப்படும் (SHAA -COLA) உற்பத்திப் பொருள்களை சந்தைப் படுத்த விரும்பும் விநியோகஸ்தர்கள் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் :

1. களஞ்சிய வசதி
2. வங்கி உத்தரவாதம் : 10 இலட்சம் ரூபா
3. வாகன வசதி - ( விநியோகத்துக்கு)
அனுபவமுள்ளோருக்கு முன்னுரிமை.

தொடர்புகளுக்கு
J.உமாகாந்தன்
விற்பனை முகாமையாளர்
T.P. 0718684456

Megaway Marketing Services (P.V.T) Ltd
Moragahahena, Millawa,
Horana.
T.P. 0342254054
Fax : 0342254696
(சி/573589)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (18.12.2010) சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெறும் இலங்கை வேதாகமக் கல்லூரியின் (பேராதனை) 40 ஆவது பட்டமளிப்பு விழாவில் எமது ஜீவபாதை மிஷனறி சபையின் போதகர் ஜோன்சன் அவர்களின் மகன் நிசாந் அவர்கள் Dip.T.H. பட்டம் பெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். இவர் மேலும் பல உயர்வுகள் பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
போதகர், ஊழியர்கள், மூப்பர்கள், விசுவாசிகள்,
ஜீவ பாதை மிஷனறி சபை,
கதீற்றல் றோட், யாழ்ப்பாணம்.



# தரம் - 5 வகுப்புகள்

புலமை பரிசில் மாணவர்களுக்கு வீடுகளுக்கு வந்து பிரத்தியேகமாக வகுப்புகள் பிரபல ஆசிரியரால் கற்பிக்கப்படும். யாழ்.மாநகர சபை, நல்லூர் பிரதேசசபை பகுதிகளுக்கு உட்பட்ட வர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: T.P.0772487080 அல்லது 021 222 0139



# தொடர்பு கொள்ளவும்

நீர்வேலி கதிரேசன் கோயிலைச் சேர்ந்த சத்தியசீலன் குருக்கள் (சஷ்டி) என்பவரை அவசர அலுவல் காரணமாக கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.
தொலைபேசி இல:-
0776617525, 009142192163
RAYMOND (நண்பன்).
(சி/5735590)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ந்து பெய்த மழையினால் முல்லைத்தீவில் பரவலாகப் பாதிப்பு

முல்லைத்தீவு, டிசெ.18

கடந்த சில தினங்களாகப் பெய்த பெருமழையினால் முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பாதிப்புக்கள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முள்ளியவளை - வற்றாப்பளை வீதியில் நீர் மூடிப்பாய்ந்ததால் சில மணிநேரம் போக்குவரத்துக்கள் தடைப்பட்டன. தற்போது மீள்குடியேறிய முள்ளியவளை, தண்ணீரூற்று மற்றும் இவற்றை அண்டிய பகுதிகளில் வசிக்கும் மக்களின் வீடுகள் அரைகுறை நிலையில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ளதால் மழை, காற்றினால் மக்கள் பாதிக்கபட்பட்டனர். அத்துடன் நிலத்தில் நீர் தேங்கியுள்ளதால் நடமாடுவதற்கே சிரமங்களை எதிர்நோக்கினார்கள்.

பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் நிலையும் பரிதாபமாக இருந்தது. அவர்களால் பரீட்சைக்குத் தம்மைத் தயார் செய்ய முடியாததோடு வீதிகளின் மோசமான நிலையினால் பிரயாணக் கஷ்டங்களையும் எதிர்கொண்டனர்.

நெல் வயல்கள் யாவும் வெள்ளத்தினால் மூடப்பட்டிருந்தன. சுனாமி வருமோவென்ற அச்சத்தினால் மீன் பிடிப்பதற்குச் சிலர் கடலுக்குச் செல்லவில்லை. குமுளமுனை, மாமூலை, கணுக்கேணி பகுதிகளிலும் மழையினால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதைவிடப் பேராறு பகுதியிலுள்ள தாழ்ந்த நிலங்களில் குடியேறியுள்ள மக்களின் வீடுகளுக்குள் வெள்ளநீர் புகுந்துள்ளது. முத்துஐயன்கட்டு இடதுகரை - கற்சிலைமடு சிறு வீதியின் குறுக்காகப் பேராறு பெருக்கெடுத்ததால் போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் பல மைல் தூரம் சுற்றிவர வேண்டிய நிலை ஏற்பட்டது. அத்துடன் வேகமாக வீசிய காற்றினால் சிலரது வீடுகள் தூக்கியெறியப்பட்டன. 25 வீதமான நெல் வயல்கள் வெள்ளத்தில் மூழ்கி அழிந்துள்ளன. குறிப்பாக மன்னாகண்டல், வெளிவயல் போன்ற இடங்களில் அதிக பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. (க-500)

# நாச்சிக்குடா கிராம மக்களும் ச.ச.நிலையம் அமைக்கக் கோரிக்கை

பூநகரி, டிசெ. 18

பூநகரி, நாச்சிக்குடா கிராம மக்களும் தமக்கென சனசமூக நிலைய மொன்று அமைக்கப்படவேண்டு மெனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் தமிழ் முஸ்லிம் மக்கள் இணைந்து வாழும் கிராமம் இதுவாகும். கடற்றொழிலே இந்த மக்களின் பிரதான தொழிலாகும். கடலுக்குச் செல்லாத வேளைகளில் இவர்கள் பொழுதைக் கழிப்பதற்கான வசதிகள் எதுவும் இந்தக் கிராமத்தில் இல்லை. இதனால் வீண்பொழுதைக் கழிக்க வேண்டிய நிலையில் இவர்கள் உள்ளனர்.




ஆகவே இந்த மக்கள் தமது பொழுதைப் பயனுள்ள வகையில் கழிக்கு முகமாகவும், தமது பொது அறிவை வளர்ப்பதற்கும், புதினங்களை அறிந்து கொள்வதற்கும் சனசமூக நிலைய மொன்று அமைக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

இத்துடன் நாச்சிக்குடா அ.த.க. பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களும் இந்த நிலையம் அமைப்பதன் மூலம் நன்மை பெறுவர்.

ஆகவே இந்தக் கிராம மக்களின் அறிவினை வளர்க்கும் பொருட்டு சனசமூக நிலையத்தை விரைவில் அமைத்துத் தருமாறு இந்த மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-406)

# தம்மை மீள்குடியமர்த்துமாறு பளையில் இடம்பெயர்ந்த குடும்பங்கள் கோரிக்கை

பளை, டிசெ. 18

கச்சார்வெளி, அல்லிப்பளை, அரசர்கேணி ஆகிய பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு உட்பட்ட கிராமங்களைச் சேர்ந்த பொது மக்கள் தம்மை விரைவில் மீள்குடியேற்றம் செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப் பிரதேசங்களில் மிதிவெடி அபாயம் உள்ளதால் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தாமதமடைகின்றன. அதேவேளை இந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த 25 குடும்பங்கள் தற்போது வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் தாம் தொழில் வாய்ப்புகள் ஏதுமின்றி வீணே முடங்கிக்கிடக்க வேண்டிய நிலையிலுள்ளதாக இவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால் விரைவில் கண்ணி வெடிகளை அகற்றித் தம்மை மீள்குடியோற்றம் செய்யுமாறு இவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-313-311)

# கற்சிலைமடு அ.த.க பாடசாலையில் புலமைப்பரிசில் மாணவர்கள் கௌரவிப்பு

முல்லைத்தீவு, டிசெ.18

கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தயெய்திய மற்றும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு பாடசாலை ஆசிரியை திருமதி சுப்பிரமணியம் விமலாதேவி தலைமை தாங்கினார். பிரதம விருந்தினராக துணுக்காய் கல்விப் பணிப்பாளர் மேகநாதன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக ஒட்டுசுட்டான் 34 ஆவது பிரிவின் கட்டளைத் தளபதி அகமட் கலந்து சிறப்பித்தார். பிரதம விருந்தினரும், சிறப்பு விருந்தினரும் குத்து விளக்கேற்றி நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தனர்.

தலைமையுரையைத் தொடர்ந்து தரம்-5 வகுப்பாசிரியை திருமதி சந்திரகலா கணேசலிங்கம் மாலையணிவித்துக் கௌரவிக்கப்பட்டார். இவருக்கான வாழ்த்துப்பாவினை பாடசாலை ஆசிரியர் ரதீஸ்வரன் வாசித்தார்.

தொடர்ந்து 159 புள்ளிகளைப் பெற்ற மாணவி இளங்கீரன் நிக்சனா, 151 புள்ளிகளைப் பெற்ற மாணவி சிறிக்குமார் தர்மிளா ஆகியோர் பிரதம விருந்தினரால் ஆசிவழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 26 மாணவர்கள் சிறப்பு விருந்தினரான கட்டளை அதிகாரி அகமட், அயல் பாடசாலையின் அதிபர் யோகேஸ்வரன், கிராம அலுவலர் மு.சிவநேசன் ஆகியோரால் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வுக்கான சிற்றுண்டிகளை இராணுவ அதிகாரி கப்டன் ரணசிங்க ஏற்பாடு செய்ததுடன் மாணவர்களுக்குத் திருக்குறள் புத்தகங்களையும் தமது அன்பளிப்பாக வழங்கினார். சிறப்புரையினைக் கல்விப்பணிப்பாளர் மேகநாதன் நிகழ்த்தினார்.

அவர் தமது உரையில்; யுத்தத்தினால் கல்விநிலை பாதிக்கப்பட்ட போதிலும் ஆசிரியர்களின் அயராத உழைப்பினால் இந்தப் பாடசாலை சிறந்த பெறுபேறுகளைப் பெற்றமை போற்றுதற்குரியது என்று விதந்துரைத்தார். பாடசாலை அதிபர் சி. நாகேந்திரராசா ஓய்வுபெற்ற கிராம அலுவலர் மு.சிவநேசன், இராணுவ கட்டளை அதிகாரி அகமட், ஆசிரியை சந்திரகலா கணேசமூர்த்தி ஆகியோரும் உரையாற்றினர்.

நன்றியுரையை ஆசிரியர் கமலேஸ்வரன் ஆற்றினார். இந்த நிகழ்வில் மாணவ, மாணவிகளின் பாட்டு, பேச்சு என்பனவும் இடம்பெற்றன. (க-500)

# தொடர் மழையினால் முல்லைத்தீவில் மரக்கறி விலைகள் அதிகரிப்பு

முல்லைத்தீவு, டிசெ. 18

தற்போது தொடரும் அடைமழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் மரக்கறிகளின் விலைகள் என்றுமில்லாதளவு அதிகரித்துக் காணப்படுகின்றது.

மரக்கறிப் பயிர்கள் மழையில் அழிந்ததன் காரணமாகவே இந்த விலையுயர்வுகள் காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். அத்துடன் மரக்கறிகளுக்கு நிகராகத் தேங்காயின் விலையும் அதிகரித்துள்ளது. தற்போது கரணைக்கிழங்கு, தக்காளி, வெண்டிக்காய் என்பன கிலோவொன்று 120 ரூபாவுக்கும், கத்தரிக்காய் 120 ரூபா தொடக்கம் 130 ரூபா வரைக்கும், வெங்காயம் 120 ரூபா முதல் 150 வரைக்கும், பச்சைமிளகாய் 100 ரூபா முதல் 120 ரூபா வரைக்கும் விற்பனையாகி வருகின்றன.

இதேவேளை கடல் மீன் கிலோவொன்று 400 ரூபாவாகவும் குளத்து மீன் 100 ரூபா தொடக்கம் 150 ரூபா வரைக்கும் விற்பனையாகின்றன. (க-500)

# சேவாலங்காவின் உதவிகள்

முல்லைத்தீவு, டிசெ. 18

சேவாலங்கா நிறுவனத்தினர் தொடர்ந்து தமது உதவிகளை மக்களுக்கு வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள கற்சிலைமடு கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கு இந்த நிறுவனம் ஏற்கனவே பல உதவிகளை வழங்கியுள்ளது.

தற்போது மரவள்ளித்தடிகளை வழங்கி வருகின்றது. (க-500)

# செம்பாட்டுக் கிரவலாகக் காட்சிதரும் பல்லவராயன்கட்டு-பாலாவி தார் வீதி

பூநகரி, டிசெ. 18

பூநகரிப் பிரதேசத்திலுள்ள பல்லவராயன்கட்டு பாலாவி வீதி மோசமாகச் சேதமடைந்து மக்களின் பாவனைக்கு உதவாத நிலையில் செம்பாட்டுக் கிரவலாகக் காணப்படுகின்றது.

வலைப்பாடு, வேரவில், கிராஞ்சி, பாலாவி, பூநகரி ஆகிய ஐந்து கிராமங்களை இணைக்கும் முக்கிய வீதியாக இது விளங்குகின்றது. இந்த வீதி முன்னர் கல் நிரப்பட்டு தார் ஊற்றிய நிலையில் காணப்பட்டது. ஆனால் தற்போது எல்லாமே அள்ளுப்பட்டு வெறும் செம்பாட்டுக் கிரவல் வீதியாகக் காணப்படுகின்றது.

கிராஞ்சி,வேரவில்,வலைப்பாடு கிராமங்களிலுள்ள வீதியோரங்களின் இரு மருங்கிலும் மக்கள் தற்போது குடியமர்ந்துள்ளனர். வீதியிலிருந்து கிளம்பும் கிரவல் புழுதியினால் இவர்களின் இல்லிடங்கள் பாதிக்கப்படுகின்றன. மக்களும் சுவாசக் கோளாறுகளுக்கு ஆளாகும் நிலையும் தோன்றியுள்ளது. முக்கியமாக வேரவில்லுக்கும் கிராஞ்சிக்கும் இடைப்பட்ட பகுதியிலுள்ள வீதி முற்றாகச் சேதமடைந்து பாதசாரிகள் நடக்கக்கூட முடியாத நிலையில் காணப்படுகின்றது. இந்த நிலை பல வருடங்களாக நீடிக்கின்றது.

இந்தப் பிரதேசத்திலே க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை நடைபெறும் பாடசாலையாக வேரவில் இந்து மகாவித்தியாலயம் உள்ளது. ஆனால் பரீட்சையெழுதச் சொல்லும் மாணவர்கள் பல சிரமங்களுக்கும் ஆளாகின்றனர். இதைப்போன்றே வினாத் தாள்களையும், விடைப் பத்திரங்களையும் எடுத்துச் செல்வோரும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

ஆகவே இனியும் தாமதம் செய்யாது இந்த வீதியை உரிய முறையில் செப்பனிட வேண்டுமென்பதே பாதிக்கப்படும் மக்களின் வேண்டுகோளாகும். (க-496)

# கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளின் க.பொ.த. உயர்தர பரீட்சை முடிவுகள்

கிளிநொச்சி,டிசெ.18

கிளிநொச்சி மத்திய கல்லூரி.

**கணிதப்பிரிவு**

கதிர்காமநாதன் மகிந்தன் - 3ஏ (01), அன்பழகன் கிருஷ்ணானந்தன் - ஏபிசி (02), குலசேகரம் சிந்துஜன் - 2பிசி (03), மகாதேவன் அபிராமி - பி2சி (04), தியாகேசன் றமணன் - பி2சி (06), இராஜேந்திரம் அனித்தா - 3சி (07), சிறிராமசுந்தரன் அருணன் - 3சி (08), உதயகுமார் விஜிகலா - 2சிஎஸ் (09), சோமசுந்தரம் கிருஷ்ணகுமார் - 2சிஎஸ் (10), தெய்வேந்திரன் மிகுந்தன் - 3சி (11), உதயசூரியன் அனுராஜ் - பிசிஎஸ் (12), காத்தலிங்கம் பிறேமசீலன் - பிசிஎஸ் (15), ஆனந்தராசா பிரசன்னா - 2சிஎஸ் (16), தர்மலிங்கம் கெங்கா - 3சி (17), கோபால பிள்ளை தர்ஜன் - 2சிஎஸ் (18), யோகராஜா சோபிதன் - 2சிஎஸ் (20), குணரட்ணம் பிரபாலினி - 2சிஎஸ் (21), சண்முகரட்ணம் சிந்துஜன் - 2சிஎஸ் (22), ஆனந்தராசா நிதர்ஷன் - சி2எஸ் (23), சிறிசண்முகராசா சிவறமணி - 2சிஎஸ் (24), மகேந்திரன் பிருந்தா - 3எஸ் (25).

**உயிரியல் பிரிவு**

கனகராசா சஞ்சீவன் - ஏ2பி (02), சண்முகம் கஜந்தன் - ஏ2பி (03), செல்வரட்ணம் சிவகணேசன் - ஏ2சி (05), ஜெயநாதன் யசோதினி - ஏபிசி (06), பெரியதம்பி பார்த்தீபன் - 2பிசி (07), மோகன்ராஜ் அச்சுதன் - பி2சி (09), திருச்செல்வம் சுபாங்கி - 3சி (10), புவனேந்திரன் அஜந்தன் - 3சி (12), ஞானசேகரம் பிரியங்கா - 3சி (12), தர்மலிங்கம் துஷ்யந்தன் - 2சிஎஸ் (15), தவராசா தவக்குமரன் - 3சி (16), அன்ரனி அமல அமிந்த றொயிஸ்டன் - 3சி (18), ஐங்கரன் பிரணவன் - 2சிஎஸ் (21), தேவராசா டிலீபன் - சி2எஸ் (23), யோகேஸ்வரன் கௌதமன் - சி2எஸ் (24).

**வர்த்தகப் பிரிவு**

ரகுநாதன் செந்தூர்ச்செல்வன் - 3பி (12), ரெங்கையா சுதாகரன் - ஏபிசி (14), பாலசிங்கம் முரளி - ஏ2சி (21), தேவகுமார் சிஷ்யன் - ஏபிஎஸ் (22).

**கலைப்பிரிவு**

மகேந்திரன் சோபிகா - 2ஏபி (08), ஜெயரட்ணம் துளசி - 2ஏபி (09), சிவலிங்கம் சுஜித்தா - 2ஏபி (10), கனகரட்ணம் மயூரன் - ஏ2பி (12), சரவணபவன் பிரகலாதன் - 2ஏபி (13), செல்வராசா சஞ்சீவன் - ஏ2பி (17), தவக்குமார் துஷ்யந்தி - 3பி (26). (க-495)

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



**பிரம்மஸ்ரீ சிவானந்தகிரி நித்தியானந்தக் குருக்கள்**
(பிரதமகுரு, சங்கானை இலுப்பைத் தாழ் குருக்கள், வெல்லில் முருகன், சங்கானை சிலம்புப் புளியடி வைரவர் ஆலயம்)
15.12.2010 புதன்கிழமை இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரின் பிரிவுத் துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

திருமகள் சோதி வீதி,
நவிண்டில்,
கரவெட்டி.

ஸ்ரீ சுந்தர ஐயப்ப ஆஞ்சநேயர் ஆலயம்
ந.சுந்தரேஸ்வர சர்மா குருசாமி
பரிபாலன சபையினர்,
ஊர் மக்கள்.

## கண்ணீர் அஞ்சலி



**சிவஸ்ரீ நித்தியானந்த சிவாச்சாரியாரின்**
திடீர் மறைவு குறித்து பாஸ்கரன் ஆச்சாரியார் குடும்பத்தினரின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாஸ்கரன் சிற்பாலயம்
''கலாபூஷணம்'' விஸ்வப் பிரம்மஸ்ரீ
சு.பாஸ்கரன் ஆச்சாரியார்,
479, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## துயர் பகிர்தல்



எமது கல்லூரியின் விஞ்ஞான ஆசிரியை
திருமதி சுகந்தி முகுந்தன்
அவர்களின் அன்பு மாமனார்
**கணபதிப்பிள்ளை செல்வநாயகம்**
அவர்களின் மறைவுச் செய்தி கேட்டுத் துயர் அடைகின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு குடும்பத்தவரின் துயரிலும் பங்கு கொள்கின்றோம்.

யா/வேலணை
மத்திய கல்லூரி
(107456)
அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலைச் சமூகம்.

## மானிப்பாயில் காணி விற்பனை

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்துக்கு அண்மித்ததாக இணுவில்வீதியின் விசகடி வைத்தியர் வீதியில் வீடு கட்டுவதற்கு ஏற்ற நான்கு பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
கௌரி-0756578036 அல்லது 0716578036

## மணமகள் தேவை

வெளிநாட்டில் குடியுரிமையுள்ள கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு 35 வயதிற்குட்பட்ட மணமகள் தேவை. E.mail மூலம் தொடர்புகொள்ளவும்.

Goldentime 2011@yagoo.ca
T.P: 0016478189248

## தவறிவிட்டது

44,வைரவர் புளியங்குளம், வவுனியா என்னும் முகவரியுடைய செல்வி விக்னேஸ்வரி கந்தையா என்பவரின் தேசிய அ.அ.(367160179V) கடந்த 09.12.2010 அன்று யாழ்.போதனா வைத்தியசாலைக்கும் NSB வங்கிக்கும் இடையில் தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:- செல்வி விக்னேஸ்வரி கந்தையா
23.B, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே:- 0779672816

## சாரதிகள்/நடத்துநர்கள் தேவை

யாழ்-கொழும்புஅதி சொகுசு பஸ் சேவைக்கு சாரதிகள், நடத்துநர்கள் மற்றும் பாரவூர்திச் சாரதிகள், நடத்துநர்கள் தேவை.
(A-9பாதையில் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது). நேர்முகத் தேர்வுக்கு சுய விவரக் கோவையுடன் திங்கட்கிழமை

ஈஸ்வரன் ரான்ஸ் போட் சேர்விஸ்
201 B, டாம் வீதி,
கொழும்பு-12
என்னும் முகவரிக்குச் சமுகம் தரவும்.
தொ.பே:- 0112433889

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி சுத்தம் செய்யப்பட்டது. 1Kg 430/=. வியாபாரிகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். காலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை வியாபாரம் இடம்பெறும்.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்,யாழ்ப்பாணம். 0212226944

## வீடு உடனடியாக விற்பனைக்குண்டு

பருத்தித்துறை கிராமக் கோட்டடியில். பிரதான வீதியில் ஒரு பரப்புக் காணியுடன் சகல வசதிகளையும் கொண்ட வீடு உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P: 0774723419




சீட்டிழுப்பு இலக்கம் 708 திகதி 16-12-2010

வெற்றி எண்கள்

**09 10 32 40 Q**

ஜக்பொட் பரிசு ரூ. **17,604,820/-** வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 17,604,820/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 17 | 2,000/= | 34,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 396 | 1,000/= | 396,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 631 | 1,000/= | 631,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 16107 | 60/= | 966,420/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7643 | 40/= | 305,720/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 190856 | 20/= | 3,817,120/= |
| | | மொத்தம் ரூ. 6,950,260/- | |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகளை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கண்டி | 700629562-1-11 |
| இரத்தினபுரி | 700637673-2-12 |
| அநுராதபுரம் | 700637407-4-04 |
| மொனராகலை | 700621497-4-14 |
| கம்பஹா | 700629275-6-36 |
| காலி | 700635095-5-15 |
| கேகாலை | 700633558-8-28 |
| மாத்தளை | 700626520-5-25 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை **7,350,260/=**

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. **18,121,330/=**

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 டிசம்பர் 20 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே. 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

## மரண அறிவித்தல்

### கந்தையா தர்மலிங்கம்



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் மலேசியாவிலும் கோண்டாவிலிலும், இங்கிலாந்து Chelmsford நகரிலும் வாழ்ந்தவரும் இளைப்பாறிய கண்காணிப்பாளர் (Inspector of School works, Education Department, Sri Lanka) கந்தையா தர்மலிங்கம் (10.12.2010) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வடலியடைப்பைச் சேர்ந்த கந்தையா- வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கோண்டாவிலைச் சேர்ந்த தம்பித்துரை- தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கணேஸ்வரியின் அன்புக் கணவரும் பிரபாலினி (U.K), பிரேமஜித் (U.S.A.), ரஞ்ஜித் (Canada.) ஆகியோரின் பாசமிகு தந்தையும் Dr.லிங்கானந்தன், Dr.வாணி, ஷாமினி ஆகியோரின் மாமனும் முகுந்தன், அபிராமி, சத்தியா, பிரணீதா, பிரசீதா, பிரஷோபன், பிரவீன், அஞ்சனா ஆகியோரின் அன்புப் பேரனும் கிருஷ்ணனின் பூட்டனும் காலஞ்சென்ற நவாலியைச் சேர்ந்த கண்மணியின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான கந்தையா (நவாலி), Dr.சிவலிங்கம், சண்முகராஜா, இரத்தினேஸ்வரி சுப்பிரமணியம் மற்றும் தர்மேஸ்வரி இரத்தினசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.12.2010) ஞாயிற்றுக் கிழமை அன்று காலை 9 மணிக்கு Ravidasia Community Centre, 28 Carlyle Road, Manor Park, London E12 6BN இல் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக City Of London Crematorium, Manor Park London E12 SDQ, மயானத்துக்கு எடுத்துச் சென்று 12 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பிரபாலினி, பிரேமஜித், ரஞ்ஜித்.
T.P.: 01245466363.

(107434)




இல. 156, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(பாரதி சிலைக்கு அருகில்)
நேரம்: காலை 9 மணி தொடக்கம்
மாலை 6 மணிவரை
18.12.2010 - 15.01.2011 வரை.

- ★வெங்கல் கொட்டன்-சாறி
- ★காஞ்சி கொட்டன் -சாறி
- ★போலி கொட்டன் -சாறி
- ★ grape
- ★ Rose Silks....

நேர்த்தியாக சேலை அணியும் பெண்களை மகிழ்விப்பதற்காக குறைந்த விலை 650/- இலிருந்து..

தொ.பே: 0777309983, 0773111716.

## கண்ணீர் அஞ்சலி



**சிவப்பிரம்ம ஸ்ரீசிவ நித்தியானந்த சிவாச்சாரியார்**
(இலுப்பைத்தாழ் முருகமூர்த்தி கோயில், சங்கானை)

அவர்கள் சிவபதமடைந்த செய்திகேட்டு அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் மறைவு சைவ உலகிற்கு பேரிழப்பாகும்.
சிவாச்சாரியார் அவர்களின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தேசபந்து சிவஸ்ரீ. பால. ரவிசங்கர சிவாச்சாரியார் (J.P)
(ஜனாதிபதி, இந்துமத இணைப்பாளர்)
ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தான தர்மகர்த்தா
கிராண்ட்பாஸ் - கொழும்பு - 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விகிதாசார முறையிலேயே உள்ளூராட்சித் தேர்தல்

கொழும்பு, டிசெ.18

அடுத்த ஆண்டு தொடக்கத்தில் உள்ளூராட்சித் தேர்தலை விகிதாரசாரப் பிரதிநிதித்துவ முறையிலேயே நடத்துவதற்கு அரசு திட்டமிட்டிருப்பதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

உள்ளூராட்சிச் சபைகளின் வட்டார எல்லைகளை உடனடியாக மீள்நிர்ணயம் செய்வதில் உள்ள நடைமுறைப் பிரச்சினைகள் காரணமாக இந்த முடிவை அரசு. எடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

எதிர்வரும் ஜனவரி 4ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளது.

இதன்படி வட்டார முறை மற்றும் விகிதாசாரத் தேர்தல் முறை ஆகியன இணைந்த கலப்புமுறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

ஆயினும் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டாலும் அடுத்த ஆண்டு நடக்கவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை பழைய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைப்படியே நடத்த அரசு முடிவு செய்துள்ளது.

உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் எதிர்வரும் மார்ச் மாதத்துடன் முடிவடையவுள்ளது.

எனவே சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் நாடெங்கும் உள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கு ஒரே நாளில் தேர்தலை நடத்தத் திட்டமிட்டுள்ளது. (த)

# வன்னிப் போரினால் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்படும் நிவாரணம் தடைப்படும் நிலை

## ஐ.நா.அமைப்பு எச்சரிக்கை

வன்னியில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் உணவு நிவாரண உதவிகள் தடைப்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக ஐ.நா அமைப்பு எச்சரித்துள்ளது.

இதுதொடர்பாக மனிதாபிமான விவகாரங்களுக்கான ஐ.நா. பணியகம் வெளியிட்டுள்ள தகவல்களின்படி-

விடுதலைப் புலிகளுடனான போர் முடிவுக்கு வந்து பல மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் இடம்பெயர்ந்த பெருமளவிலான மக்கள் அனைத்துலக உதவி நிறுவனங்களிலேயே பெரிதும் தங்கியுள்ளனர்.

குறிப்பாக அத்தியாவசிய உணவுத் தேவைகளுக்காக அனைத்துலக உதவி நிறுவனங்களின் உதவியை இடம்பெயர்ந்த மக்கள் இன்னமும் எதிர்பார்க்கின்றனர்.

இலங்கைக்கான கொடையாளர்களின் நிதியுதவிகள் குறைக்கப்பட்டால் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் உதவி விநியோகங்களை நிறுத்தும் நிலை ஏற்படும்.

கடந்த மாதம் 286.370 பேர் உலக உணவுத்திட்டம் ஊடாக உணவு நிவாரணங்களைப் பெற்றனர்.

கொடையாளர்களின் நிதியுதவிகள் குறைக்கப்பட்டதால், கடந்த மாதமே கோதுமை மற்றும் சீனி போன்றவை பாதியாகக் குறைக்கப்பட்டன.

நிதி நெருடிக்கடிகளால் அடுத்த மாதம் சோளம், சோயா விநியோகமும் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டில் 371,000 பேருக்கு உணவு நிவாரணங்களை வழங்குவதற்கு 24 மில்லியன் டொலர் நிதி தேவைப்படுகிறது.

நிதிப் பற்றாக்குறையினால் அனேகமான உதவி நிறுவனங்கள் உதவிகளை வழங்க முடியாத நிலையை அடைந்துள்ளன.

தற்போதைய நிலையில் எதிர்வரும் மார்ச் மாதம் வரையிலுமே உதவிகளை வழங்கக் கூடியதாக இருக்கும்.

தொடர்ச்சியாக நிவாரணங்களை வழங்குவதற்கு கொடையாளர்களின் உதவி மிகவும் அவசியம். பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கான உதவிகள் முக்கியமானவை.

மீளக்குடியமர்ந்தோரில் 18 வீதமான குடும்பங்களுக்கு பெண்களே தலைமை தாங்குகின்றனர்.

இவர்களுக்கு சிறப்பாக, பயிற்சிக்காக உணவு என்ற திட்டத்தை மனிதாபிமான விவகாரங்களுக்கான ஐ.நா பணியகம் மேற்கொள்ளவுள்ளது.

இந்தஆண்டில் மனிதாபிமான உதவிப் பணிகளுக்காக 170 மில்லியன் டொலர் நிதியுதவி கிடைத்தது என்று ஐ.நாவின் மனிதாபிமான விவகாரங்களுக்கான பணியகம் அறிவித்துள்ளது. (த)

# கலைஞர்களின் உரிமைகளைப் பேண விரைவில் புதிய சட்ட முறைகள்

கொழும்பு, டிசெ.18

கலைஞர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கில் புதிய சட்ட விதிமுறைகளை பின்பற்றுவதான ஊடகத்துறை மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சுக்களின் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்த யோசனையின் பிரகாரம் இலத்திரனியல் ஊடகங்களினூடாக ஒலி, ஒளிபரப்பப்படும் இசை நிகழ்வுக்கான பாடல் வரி எழுதுதல், இசையமைத்தல் மற்றும் பாடுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் கலைஞர்களின் ஒவ்வொரு பாடலுக்கும் வருமானம் வழங்கப்படவுள்ளது.

அந்தவகையில் வானொலியில் ஒலிபரப்பப்படும் பாடலொன்றின் பாடல் வரி, அதன் இசையமைப்பு மற்றும் பாடலைப் பாடுதல் போன்ற நடவடிக்கைகளுக்காக தலா 3 ரூபா வீதம் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை தொலைக் காட்சியொன்றில் ஒளிபரப்பப்படும் பாடலொன்றின் பாடல் வரி, அதன் இசையமைப்பு மற்றும் பாடலைப்பாடுதல் போன்ற நடவடிக்கைகளுக்காக தலா 10 ரூபா வீதம் வழங்கப்படவுள்ளதாகவும் அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் விஷேட செய்தியாளர் மாநாட்டின் போது அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார். (த)

# மீனவர்களின் வலைகளில் கடற் பன்றிகள்

மன்னார்- தலைமன்னார் பிரதான வீதியின் வங்காலைப்பாடு கடற்பகுதியில் மீனவர் ஒருவரின் வலைத்தொகுதியில் சிக்கி உயிரிழந்த நிலையில் கரைக்குகொண்டு வரப்பட்ட இரண்டு கடற்பன்றிகளை மன்னார் பொலிஸார் மீட்டுள்ளதுடன் மீனவரையும் கைதுசெய்துள்ளனர்.

இச்சம்பவம் புதன்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. மேற்படி மீனவர் கடலுக்கு மீன் பிடிப்பதற்காக சென்றபோது அவரது வலைத்தொகுதியில் இறந்த நிலையில் பன்றிகள் சிக்கியுள் ளன. குறித்த மீனவர் பொலிஸாருக்கு தகவலை வழங்காமல் கடற்பன்றிகளை கரைக்குக் கொண்டு வந்துள்ளார். இதனை அவதானித்த பொது மக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து பொலிஸார் சம் பவ இடத்திற்கு விரைந்து காட்டுப்பன்றிகளை மீட்டதுடன் மீனவரையும் கைதுசெய்துள்ளனர். (த)

# டிஜிற்றல் தொழில் நுட்பத்தின் மூலம் விரைவில் தொலைக் காட்சிச் சேவை

## அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.18

இலங்கையின் தொலைக்காட்சி ஒளிபரப்பு சேவைக்கு டிஜிற்றல் தொழில்நுட்பத்தை (DVB-T2) இணைத்துக் கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்துடன் இதற்கான அமைச்சரவை அங்கீகாரமும் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இதற்காக ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் டபிள்யூ. பீ.கனேகல தலைமையில் அரச மற்றும் தனியார் இலத்திரனியல் நிறுவனங்களின் அங்கத்தவர்கள் அடங்கிய குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் விசேட செய்தியாளர் மாநாடு நேற்றுமுன்தினம் முற்பகல் அரசு தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

இன்று புதிய தொழில் நுட்பத்தினுடனான சேவையின் மூலம் தனியொரு அதிர்வலையினூடாக பல அலைவரிசைகளை இயக்க முடியும்.

இதன்மூலம் இலங்கையில் அதிகளவிலான தொலைக்காட்சி அலைவரிசைகளை உருவாக்கிக்கொள்ள முடியும்.

அத்துடன் தொலைக்காட்சி அலை வரிசைகளை அதிகரிப்பதற்கு தடங்கலாக இருந்த தொழில் நுட்ப பிரச்சினைக்கும் முடிவு காணமுடியும் -என்றார். (த)

## பொன்சேகாவின் உரைகளடங்கிய

# வீடியோ நாடாக்கள் விசாரணைக்கு மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியது

கொழும்பு, டிசெ.18

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா பிரசார மேடைகளில் உரையாற்றி, தொலைக்காட்சிச் செய்திகளில் ஒளிபரப்பு செய்யப்பட்ட வீடியோ நாடாக்களை வெள்ளைக்கொடி விவகார வழக் கில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் அனுமதி வழங்கியது.

வெள்ளைக்கொடி விவகார வழக்கு மேல்நீதிமன்ற நீதியரசர்களான தீபாலி விஜேசுந்தர, எச்.என்.பி.பி. வராவெல, சர்பிக் ரஸீக் ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கு விசாரணையின் போது வெள்ளைக்கொடி விவகார வழக்கில் ஜனாதிபதித் தேர்தல் பிரசார மேடைகளில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா உரையாற்றிய முழுமையான வீடியோ ஒளிநாடாக்களையே விசாரணைக்காக எடுத்துக்கொள்ள மேல்நீதிமன்றம் அனுமதி வழங்க வேண்டும் என்றும், செம்மையாக்கப்பட்ட வீடியோ நாடாக்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அனுமதி வழங்க வேண்டாம் எனவும் பிரதிவாதி சட்டத்தரணி நளின் லத்துவஹெட்டி மேல்நீதிமன்றில் கூறினார்.

இதற்கு எதிர்ப்பு வெளியிட்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் புவனேக அலுவிகார, சாட்சிகள் விசேட சட்டமூலத்தின் படி தொலைக்காட்சியில், செய்திகளில் ஒளிபரப்புச் செய்யப்பட்ட, செம்மையாக்கப்பட்ட வீடியோ நாடாக்களை வழக்கு விசாரணைகளுக்கு எடுத்துக் கொள்ள முடியும் என்று மேல் நீதிமன்றில் சுட்டிக்காட்டினார்.

இந்த விடயத்தைக் கவனத்திற்கு எடுத்துக்கொண்ட மேல் நீதிமன்ற மூவர் அடங்கிய நீதியரசர்கள் குழு, பிரதிவாதியின் எதிர்ப்புக்கு ஆட்சேபனை செய்து செம்மையாக்கப்பட்டு ஒளிபரப்புச் செய்யப்பட்ட வீடியோ நாடாக்களை வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அனுமதி வழங்கியது. அத்துடன் வழக்கு விசாரணையை எதிர்வரும் ஜனவரி 6ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது. (சி)

# இலங்கை மத்திய வங்கியில் விமானப் படை ஒத்திகை

கொழும்பு, டிசெ. 18

இலங்கை மத்திய வங்கி மீண்டுமொரு தடவை தாக்கப்பட்டால் அதனை எவ்வாறு முறியடிக்கலாம் என்பது குறித்த ஒத்திகையொன்றில் விமானப்படையினர் நேற்று முன்தினம் ஈடுபட்டனர்.

மீண்டுமொரு தாக்குதல் மேற் கொள்ளப்படும் பட்சத்தில் அதனை எவ்வாறு எதிர்கொள் வது, சேதங்களைக் கட்டுப்படுத் துவது போன்ற விடயங்கள் குறித்து இலங்கை விமானப் படையின் தீயணைப்புப் படைப் பிரிவினர் ஒத்திகை யில் ஈடுபட்டனர்.

விமானப்படைக்குச் சொந்த மான விமானங்கள் மற்றும் தீயணைப்புக் கருவிகளுடன் பெரும் எண்ணிக்கையிலான படைவீரர்கள் இந்த ஒத்தி கையில் ஈடுபட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒத்திகையின் காரணமாக அப்பகுதியெங்கும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்த துடன், அருகில் இருக்கும் ஜனாதிபதி மாளிகையின் பாது காப்பும் அதிகரிக்கப்பட்டிருந்த தாகவும், சோதனை நடவடிக் கைகள் கடுமையாக இருந்த தாகவும் தெரிவிக்கப்பட்டது. (த)

# புலமைப்பரிசில் பரீட்சை மாணவர் கௌரவிப்பு

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை அரியாலை காந்தி சனசமூக நிலையம் பாராட்டி கௌரவிக்கவுள்ளது. மேற்படி கௌரவிப்புவிழா இன்று சனிக்கிழமை சனசமூக நிலைய முன்றலில் மாலை 5 மணிக்கு நடைபெறும். யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராசா [illegible] விருந்தினராக கலந்துகொண்டு மாணவர்களுக்கு பரிசி[illegible] வழங்கிக் கௌரவிப்பார். (201-26)

# கலால் திணைக்களத்தால் மதுபான நிறுவனத்துக்கு 10கோடி ரூபா அபராதம்

கொழும்பு, டிசெ. 18

10 கோடி ரூபா வரி மோசடி யில் ஈடுபட்டது என்ற குற்றச் சாட்டின்பேரில், ஹங்வெல்லயிலுள்ள மதுபான உற்பத்தி நிறுவனமொன்றுக்கு கலால் திணைக்களம் நேற்று 10 கோடி ரூபா அபராதம் விதித்துள்ளது.

வரி அறவிடப்படுவதைக் குறைப்பதற்காக கையிருப்பில் வைத்திருந்த மதுபானத்தில், ஏராளமானவற்றை மறைத்து விட்டு சொற்ப அளவு மதுபானத் தைக் காட்டியதன் காரணமா கவே இந்நிறுவனத்துக்கு இவ் வாறான அபராதம் விதிக்கப் பட்டுள்ளது.

[illegible] வாசியை இந்நிறுவனம் செலுத் தியுள்ளது எனவும், மிகுதித் [illegible] வாரங்கள் வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடர்:**
மனதில் இனம்புரியாத கவலைகள் குடிகொள்ளும் நாள். பல நாள்களாக தள்ளி வைத்த வேலைகளை இன்று திடீரென செய்ய முற்படுவீர்கள். தாய் தொடர்பான விஷயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். தொழில் ரீதியாக உங்களின் செயற்பாட்டை சிலர் விமர்சனம் செய்யலாம். சிக்கனம் அவசியம்.

**இடபர்:**
கலகலப்பான அனுபவங்களால் கவலைகளை மறப்பீர்கள். வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு. அதிக விலை கொடுத்து வாங்க நினைத்த பொருள் ஒன்றை குறைந்த விலைக்கு வாங்குவீர்கள். அயலார் அனுசரணையாக நடந்து கொள்வர். நண்பர்களிடம், சக ஊழியர்களிடம் கடனாக கொடுத்த பணம் வரும்.

**மிதுனர்:**
திட்டமிட்ட வேலை ஒன்றை சரியான நேரத்துக்கு செய்து முடிப்பீர்கள். சவால்களை சந்தித்து வெற்றி பெறுவீர்கள். எங்காவது முக்கிய வேலையாக வெளியில் புறப்படும் நேரத்தில் யாராவது வந்து தொந்தரவு கொடுக்கலாம். பள்ளைகளின் நீண்ட நாள் கோரிக்கை ஒன்றை நிறைவேற்றி வைப்பீர்கள். அனுகூலமான நாள்.

**கடகர்:**
முடிந்து விட்டதாக நினைத்த பிரச்சினை ஒன்று மீண்டும் தலை தூக்கலாம். சில வேலைகள் எளிதில் முடிவடையாமல் இழுத்தடிக்கலாம். உங்களுக்குத் தேவையானதைப் பெற சிலரை நச்சரிப்பீர்கள். உடல் நலம் இல்லாமல் இருக்கும் உறவினர் ஒருவரை பார்க்க நேரிடலாம். உங்களின் இரகசியம் ஒன்றை மற்றவர்களிடம் வெளிப்படுத்துவீர்கள்.

**சிங்கர்:**
தேவையற்ற விடயங்களில் மூக்கை நுழைப்பீர்கள். ஆடம்பரமாக செலவுகளைச் செய்வீர்கள். வழக்கத்துக்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம். குடும்ப பெரியவர்களின் கண்டிப்புக்கு ஆளாகலாம். உறவினர்கள் சிலர் மீது கோபம் கொள்ளலாம். கணவன் மனைவி இடையே வாக்குவாதம், மனஸ்தாபம் ஏற்படலாம்.

**கன்னி:**
புதிய முயற்சிகளில் வெற்றி பெறலாம். தேக ஆரோக்கியம் தெம்பு உற்சாகம் தரும். உறவினர்கள் கேட்ட உதவிகளைச் செய்து அவர்களின் மதிப்பைப் பெறுவீர்கள். பல நாள் கனவு ஒன்று நனவாகலாம். பெண்கள் கூடுதல் வேலைப்பளுவால் அவதிப்படலாம். சகோதரர்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்வது நல்லது.

**துலாமர்:**
தேக ஆரோக்கியம் தெம்பு உற்சாகம் தரும். மற்றவர்களை நம்பி எந்த காரியத்திலும் இறங்க வேண்டாம். மாமன், மைத்துனர்கள் கேட்ட உதவி ஒன்றை செய்வீர்கள். புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். பயணங்களால் ஆதாயம் பெறலாம். தாய் வழியில் உருவான தொல்லைகள் குறையும். மனதில் நிம்மதி குடிகொள்ளும் நாள்.

**விருச்சிகர்:**
பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைத்து பெருமைப்படுவீர்கள். உங்களிடம் பேச விரும்பும் உறவினர் ஒருவரிடம் நீங்கள் பேச விரும்பாமல் தவிர்க்கலாம். கொடுக்கல் வாங்கல்களில் எச்சரிக்கை அவசியம். பெற்றோர் வழியில் உருவான அன்புத் தொல்லை குறையும். மறதியால் சிரமப்படலாம்.

**தனுசு:**
இதோ அதோ என இழுத்துக் கொண்டிருந்த சில வேலைகளை செய்து முடிப்பீர்கள். உறவினர்கள் சிலருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். அரசியல்வாதிகள் புதியவர்களைச் சந்திக்கலாம். உங்களின் ரகசியமான செயற்பாடு ஒன்றை மற்றவர்கள் அறிந்து கொள்ளலாம். நண்பர்களுக்குத் தெரிந்த ஒருவர் உங்களுக்கு அறிமுகமாகலாம்.

**மகரர்:**
வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். உறவினர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். திட்டமிட்ட வேலை ஒன்று முடியாவிட்டாலும், திட்டமிடாத வேலை ஒன்று முடியும். பண விடயங்களில் சிலரிடம் கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பம்பரமாக சுழன்று பணியாற்றும் நாள். பணவரவு உண்டு.

**கும்பர்:**
சிலரிடம் கடன் சொல்லி பொருள்களை வாங்கலாம். கணவன் மனைவி இடையே வாக்குவாதங்கள் ஏற்படலாம். வீட்டுக்குத் தேவையான உணவுகள் வாங்கக் கணிசமான பணத்தை செலவு செய்வீர்கள். உறவினர்களை உபசரிக்கக் கணிசமான பணத்தை செலவு செய்யலாம். திட்டமிட்ட வேலைகளை சோம்பலால் மாற்றுவீர்கள்.

**மீனர்:**
ஆதாயத்தை எதிர்பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள். பெண்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். மாற்று மதத்தினர் வழியில் மனதுக்கு இனிய உதவி கிடைக்கும். எந்த வேலையையும் பிறகு என தள்ளிவைக்காமல் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். பிரிந்திருந்தவர்கள் கூடும் நாள்.

நாட்டின் சகல பிரதேசங்களிலும் ஏற்படும்

# அனர்த்தங்களை அறிவிப்பதற்கு வலையமைப்பு உருவாக்கம்

கொழும்பு, டிசெ. 18

நாட்டின் சகல பிரதேசங்களிலும் ஏற்படும் அனர்த்தங்களையும் அறிவிக்கக்கூடிய வகையிலான, 100 கோபுரங்கள் மற்றும் தீயணைக்கும் 26 பிரிவுகளை உள்ளடக்கிய முழுமையான அனர்த்த வலையமைப்பு ஒன்று உருவாக்கப்படவுள்ளது என அரசு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டின் சகல பிரதேசங்களிலும் ஏற்படும் அனர்த்தங்களையும் அறிவிக்கக்கூடிய வகையிலான, 100 கோபுரங்கள் மற்றும் தீயணைக்கும் 26 பிரிவுகளை உள்ளடக்கிய முழுமையான அனர்த்த வலையமைப்பு ஒன்று உருவாக்கப்படவுள்ளது

இதன் முதல் கட்ட நடவடிக்கையாக 50 கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அதேவேளை, இரண்டாம் கட்ட நடவடிக்கைகளுக்காக அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

இதேவேளை, இந்திய - இலங்கை நாடுகளுக்கிடையிலான பயணிகள் கப்பல் சேவை தொடர்பிலும் அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது.-என்றார். (சி)

## ஒற்றுமை...



ஊக்குவிப்பு: தம்பசிட்டி மெதடிஸ்தமிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் நிற்கின்றனர். (201- 236)

## வசிட்டரின் பெருமை



பரமசிவன் ஒருசமயம் வசிட்டருக்கு விசேஷமான ஆசனம் ஒன்றைக் கொடுத்தார். ''அது சரி! அப்படி என்ன அந்த ஆசனத்தில் விசேஷம்'' என்று எமக்கு கேட்கத் தோன்றுகிறது அல்லவா?

வசிட்டர் ஒரு குறிப்பிட்ட இடத்துக்குப் போகவேண்டும் என்று நினைத்துப் புறப்பட்டால், அவருக்கு முன்னாலேயே அந்த ஆசனம் புறப்பட்டுச் சென்று, ஒரு வசதியான இடமாகப் பார்த்து இருந்து கொள்ளும். பின்பு வசிட்டர் போவார். அங்கே சென்றதும் எங்கே உட்காரலாம் என்ற பிரச்சினை அவருக்கு ஏற்படாது. நேராகத் தனது ஆசனம் இருக்கும் இடத்துக்குச் சென்று அதில் அமர்ந்துகொள்வார்.

இதைப் பார்த்த ஏனைய முனிவர்களுக்குப் பெறாமையாக இருந்தது. எனவே அவர்கள் அனைவரும் ஓர் இடத்தில் கூடி ''என்ன இது? நாமும் இவரைப் போன்ற முனிவர்கள் தானே! இருந்தாலும் எமக்கு இந்த மாதிரி ஓர் ஆசனம் கிடைக்கவில்லையே'' என்று பேசினார்கள்.

அதன் பின்னர் அவர்கள் அனைவரும் பரமசிவனிடம் சென்று ''சுவாமி! நாங்களும் முனிவர்கள்தானே! வசிட்டரைப் போல் நாங்களும் உங்களை நோக்கிக் கடுந்தவம் செய்து கொண்டுதானே இருக்கின்றோம்? அப்படியிருக்கும்போது அவருக்கு மட்டும் ஏன் இந்த விஷேட சலுகை'' என்று வினவினார்கள். அதற்குப் பரமசிவன் ''முனிவர்களே! உங்கள் கேள்விகளுக்கு நான் பதில் சொல்கிறேன். அதற்கு முன்னர் நீங்கள் ஒரு காரியம் செய்யவேண்டும்'' என்றார். ''என்ன செய்ய வேண்டும்? சொல்லுங்கள்'' என்று முனிவர்கள் கேட்டார்கள்.

''நீங்கள் ஒவ்வொருவரும் தனியாகப் போகவேண்டும், உங்களைவிட உயர்ந்தவர் ஒருவரைத் தேடிக் கண்டுபிடிக்கவேண்டும். அவருக்கு அதிதி பூஜை செய்து அவரை ஒரு மண்டலத்துக்குள் என்னிடம் அழைத்து வாருங்கள்'' என்றார் சிவபெருமான்.

''சரி அவ்வளவுதானே! இதென்ன பெரிய காரியம்? அப்படியே செய்கிறோம்'' என்று சொல்லிவிட்டு முனிவர்கள் அங்கிருந்து சென்றார்கள். அதன் பின்னர் சிவபெருமான் நந்திதேவரைக் கூப்பிட்டு வசிட்டரை அழைத்துவரச் சொன்னார். அதன்படி வசிட்டர் வந்து சிவபெருமானை வணங்கி நின்றார்.

அவரிடம் சிவபெருமான், ''வசிட்டரே! இன்றிலிருந்து ஒரு மண்டல காலத்துக்குள் உங்களை விடத் தாழ்ந்தவர் ஒருவரைத்தேடிக் கண்டுபிடித்து அவருக்கு அதிதி பூஜைசெய்து அவரை என்னிடம் அழைத்து வாருங்கள்!'' என்றார்.

ஒரு மண்டல காலம் கழிந்தது. முனிவர்களெல்லாம் திரும்பி வந்து சிவபெருமானை வணங்கினர். ''சுவாமி! எவ்வளவோ தேடிப் பார்த்தோம். எங்களை விட உயர்ந்தவர்கள் யாருமே கிடைக்கவில்லை'' என்றார்கள்.

அதேசமயம் வசிட்டர் அங்குவந்து சேர்ந்தார். ''சுவாமி! எவ்வளவோ தேடிப் பார்த்தேன் என்னை விடத் தாழ்ந்தவர் யாருமே கிடைக்கவில்லை?'' என் மனைவி எனக்கு அடங்கியவள்தானே. அவளுக்காவது அதிதி பூஜை செய்து அழைத்து வரலாமா? என்று யோசித்தேன். ஆனால் என்மனம் இதற்கு இடம்கொடுக்கவில்லை. ஏனெனில் அவளது பவித்திரத்துக்கு முன்னால் நான் எந்தளவுக்கு என்று யோசித்துப் பார்த்தேன். எனவே அந்த எண்ணத்தையும் கைவிட வேண்டியதாயிற்று'' என்று மிகவும் மனவருத்தத்துடன் கூறினார்.

இதைக் கேட்ட ஏனைய முனிவர்களுக்கு வெட்கமாகி விட்டது. உலகில் நம்மைவிட மேலானவர் யாரும் கிடையாதென்று நாம் நினைத்தோம். ஆனால் வசிட்டரோ தன்னை விட உலகில் தாழ்ந்தவர்கள் யாரும் இல்லை என்று நினைக்கின்றார்! என்று நினைத்தபோது முனிவர்களுக்கு வசிட்டரின் பெருமை புரிந்தது.

''பரமசிவன் ஏன் அந்த ஆனசத்தை வசிட்டருக்கு மட்டும் கொடுத்தார்?'' என்ற கேள்விக்கான பதிலும் முனிவர்களுக்குக் கிடைத்துவிட்டது.

இதிலிருந்து நாம் புரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால் ''எப்போதும் உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் அதைப் பற்றிப் பெருமைப்படுவதில்லை. ஆனால் தமது தகுதியை அறியாதவர்கள் தம்மை பெரிதாகவே நினைத்துக்கொண்டிருப்பார்கள்'' இந்த அறியாமையிலிருந்து விடுபடுதல் அவசியமாகும்.

கோ.சுவாமிநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித்துவமான தமிழ் இனம்

இலங்கையைப் பொறுத்த வரையில் இந்த நாட்டில் தமிழ் தேசிய இனம் மற்றும் சிங்கள தேசிய இனம் என்று இரண்டு தேசிய இனங்கள் (Two Nations) இருப்பதைக் குறிப்பிட்டு இரு தேசிய இனங்கள் ஒரு நாடு Two Nations One Country என்ற கருத்தைத் தெரிவித்துக் கடந்த ஜூலை மாத நடுப் பகுதியில் ஒரு கட்டுரையை எழுதியிருந்தேன்.

அந்தக் கட்டுரையின் இறுதிப் பகுதியில் One Nation One Country "ஒரு நாடு ஒரே மக்கள்" என்ற சுலோகம் திரும்பிய இடமெல்லாம் காட்சியளிக்கின்றமை பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். இந்தக் கருத்து கடந்த நவம்பர் மாதம் பத்தொன்பதாம் திகதி தமது இரண்டாவது பதவிப் பிரமாணத்தின் போதும் ஜனாதிபதியால் தெரிவிக்கப்பட்டதையும் காணக்கூடியதாகவிருந்தது. இந்தக் கருத்தை உணர்ந்துகொண்டே தமிழரசுக் கட்சியும், அதன் தலைமையும் செயற்பட்டதை இளைய சந்ததியினருக்கு தெரியப்படுத்த வேண்டிய தேவை இருப்பது உணரப்படுகிறது. இந்தக் கருத்து தமிழினத்தின் தனித்துவமான வரலாற்று இருப்பையே கேள்விக்குறியாக்குகிறது என்பதை எவரும் கேள்விக்குட்படுத்த முடியாது.

இதை முன்கூட்டியே தமிழரசுக் கட்சித் தலைமை உணர்ந்திருந்ததை இரண்டு ஆவணங்களிலிருந்து காணலாம்.

முதலாவதாக தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் சர்வதேச ஜூரர்கள் ஆணைக் குழுவுக்கு எழுதிய 04.09.1973 ஆம் திகதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"இலங்கைத் தமிழர்கள் மொழியால், மதத்தால், கலாசாரத்தால், வரலாறு மற்றும் பாரம்பரியத்தால் முழுமையாக வேறுபட்ட இலங்கையின் தனியான பிரதேசத்தில் வசிக்கின்ற ஒரு தனித்துவமான தேசிய இனமாகும். இலங்கையில் பிரிட்டிஷ் ஆட்சியின் ஆரம்ப காலத்தில் கிளகோன் குறிப்பு இப்படிக் கூறுகிறது. "இரண்டு தேசிய இனங்கள் தீவின் உரிமையை தமக்கிடையே பிரித்திருந்தன. முதலாவது வளவை ஆற்றிலிருந்து சிலாபம் வரையான தெற்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் சிங்களவர்கள் வசித்து வந்த அதேநேரம் இரண்டாவதாக வடக்கு மற்றும் கிழக்கு மாவட்டங்களை மலபார் (தமிழர்கள்) உரிமையாகக் கொண்டிருந்தனர்.

இந்த இரண்டு தேசிய இனங்களும் தமது சமயம், மொழி மற்றும் பழக்கவழக்கங்களில் முழுமையாக வேறுபட்டவர்கள். மொழியால் தமிழர்களோடு ஒன்றாகிய தமிழ்பேசும் முஸ்லிம்களில் பெரும் பகுதியினர் பாரம்பரிய தமிழ்ப் பிரதேசத்திலேயே வசிக்கின்றனர்".

மேலும் "ஒரு தனித்துவ தேசிய இனமான தமிழர்கள் சிறுபான்மையினர் என வகைப்படுத்தப்பட்டுள்ளனர் என்பதைக் காணலாம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறுபான்மையினருக்கு எதிரான, பாகுபாடான சட்டங்களும், நிர்வாக நடவடிக்கைகளும் என்ற உப தலைப்பின் கீழ் பின்வருமாறு கூறப்படுகிறது:

ஒவ்வொரு அரசாங்கமும் இரு தேசிய இன நாடான இலங்கையை, ஒரு மொழி - சிங்கள மொழி, ஒருமதம்- புத்தமதம், ஒரே தேசிய இனம் சிங்கள தேசிய இனம் என்ற ஒரு தேசிய அரசாக மாற்றுவதற்கான நோக்கத்தைக் கொண்ட ஒரே விதமான கொள்கையையே பின்பற்றி வருகின்றது.

சிங்களக் குடியேற்றம் தொடர்பாக பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

"அரச ஆதரவு குடியேற்றங்கள் தமிழர்களின் தேர்தல் மற்றும் அரசியல் பலத்தை மேலும் குறைப்பது மட்டுமன்றி அவர்களது பாரம்பரிய தாயகத்தை அழித்தொழிக்கும் நோக்கம் கொண்டதாகும்.

இரண்டாவதாக தமிழரசுக் கட்சியின் சிந்தனைச் சிற்பி என வர்ணிக்கப்பட்ட அமரர் எஸ்.கதிரவேற்பிள்ளை (நா.உ) எழுதிய 'முரண்பாடு அல்ல சக வாழ்வு' என்ற சிறிய கைநூலிலும் இரு தேசிய இனங்கள் என்ற விடயத்தை 1799 இன் கிளெஹோன் குறிப்பை மேற் கோள் காட்டி இரு தேசிய இனங்கள் என்பதை வலியுறுத்தியுள்ளார்.

மேலும் இணைப்பாட்சி முறைமையை வலியுறுத்திய அவர் சுருக்கமாகக் கூறின் சிங்களவர்களின் குறிக் கோளான ஒரு நாடு, ஒரு தேசிய இனம், ஒரு மொழி என்பது பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

இவற்றிலிருந்து இலங்கைத் தமிழரசுக் கட்சியானது தமிழினத்தின், தனித்துவமான இனம், மொழி, மதம், கலாசாரம், தாயகம், சுயநிர்ணய உரிமை, சமஷ்டி முறைத்தன்னாட்சி என்ற இலட்சியங்களையும், இவற்றை மறுதலிக்கும் நடவடிக்கைகளுக்கும், அரச ஆதரவு சிங்கள குடியேற்றங்களுக்கு எதிராகக் குரல் கொடுப்பதும், செயற்படுவதுமே இலட்சியமாக வரித்துக் கொண்டு உருவாக்கப்பட்டு கடந்த அறுபத்தொரு வருடங்களாக நிலைத்து நிற்கிறது என்பது தெளிவாகும்.

தமிழர் ஐக்கிய முன்னணி உருவாக்கத்துடன் அல்லது தந்தை செல்வா தமிழ் மக்களை இனிக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று கூறிய கூற்றுடன் தமிழரசுக்கட்சியின் செயற்பாடுகள் முடிவுக்கு வந்துவிட்டன என்று கூறும் ஒரு சிலர் ஒரு புறமும், தந்தை செல்வா போன்றவர்களின் கருத்துக்களை தெரிந்து கொண்டாலே எதிர்காலத்தில் தமிழினம் தனது தனித்துவத்தைப் புரிந்துகொள்ளும் என்று கூறுபவர்கள் அநேகரும் எம்மத்தியில் உள்ளனர்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தமிழரசுக் கட்சியின் அபிலாசைகள், இலட்சியங்கள் ஏதாவது ஒன்றாவது இன்றைய சமகாலத்தில் வலுவிழந்திருக்கிறதா என்று கேட் டால் அவை வலுவிழக்கவில்லை என்று மட்டுமல்ல அவை இப்பொழுது மேலும் வலுவடைந்திருக்கின்றன என்றே எவரும் கூறுவர்.

ஆகவே தமிழரசுக் கட்சியின் கொள்கைகள் தொடர்ந்து தமிழ் மக்களின் அரசியல், சமூக, பொருளாதார கொள்கைகள், கோட்பாடுகள், இலட்சியங்கள் ஆகியவற்றை வழி நடத்துகின்றன என்பதைக் கருத்தில் கொண்டு இனங்கள் கட்சி நலனுக்கு அப்பாலே தமிழின நலன் சார்ந்தது என்பதையும் கருத்திற் கொண்டு, தமிழினத்தின் தனித்துவத்தையும், தன்மானத்தையும் காத்து ஐக்கிய இலங்கைக்குள்ளான ஒரு தன்னாட்சி அமைப்பை உருவாக்க உலகிலுள்ள எல்லா ஜனநாயக அரசியல் வழி முறைகளிலும் செயற்பட வேண்டிய கால கட்டத்தில் நாம் இருக்கின்றோம் என்பதை வலியுறுத்தலாம்.

ஒவ்வொரு மனிதனும் தனது பெயர்மூலம் தன்னை அடையாளப்படுத்துவதுபோல் ஓர் இனம் தனது தனித்துவத்தை அதன் மொழி, மத, கலாசார வரலாற்று விழுமியங்களுடன் தனது பாரம்பரிய வாழ்விடத்தையும் பேணுவதன் மூலமே அதன் தனித்துவத்தைப் பேண முடியும்.

> **தமிழினத்தின் விடுதலை இலட்சியங்களை அடைவதற்கு அகிம்சை வழியிலும், ஆயுதப் போராட்ட வழியிலும் முயன்றிருக்கிறோம். இவை இரண்டும் செயற்பாட்டு வழவங்களே. இவை மாறலாம். ஆனால் இலட்சியங்கள் மாறமுடியாது. யுத்தத்தின் முடிவு இலட்சியங்களின் முடிவு அல்ல.**

தமிழினத்தின் விடுதலை இலட்சியங்களை அடைவதற்கு அகிம்சை வழியிலும், ஆயுதப் போராட்ட வழியிலும் முயன்றிருக்கிறோம். இவை இரண்டும் செயற்பாட்டு வடிவங்களே. இவை மாறலாம். ஆனால் இலட்சியங்கள் மாறமுடியாது. யுத்தத்தின் முடிவு இலட்சியங்களின் முடிவு அல்ல. இன்றைய உலக மாற்றங்களைக் கருத்தில் எடுத்துக் கொண்டு எமது இலட் சியம் நோக்கிய ஜனநாயக வழிமுறைகளில் செயற்படுவது அவசியமாகிறது. ஒரு வேளை இவை குறுகிய எதிர்காலத்தில் சாத்தியமாகாவிடினும், எதிர்காலத்தில் நிச்சயமாகச் சாத்தியமாகும். விடுதலை நோக்கிய தமிழினத்தின் அஞ்சலோட்டத் தீபத்தை ஏந்திய நகர்வு அறுபது வருடங்களாகத் தொடர்ந்ததுபோல மேலும் தொடரவேண்டும். இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு கிட்டும் வரை அது தொடரும்.

சீ.வீ.கே.சிவஞானம்
துணைச் செயலாளர்,
இலங்கைத் தமிழரசுக் கட்சி.

ஓர் அமைதி மாற்றம் (Silent Change) இடம்பெறும் என்ற திடசங்கற்ப நம்பிக்கையோடு நாம் நகரவேண்டும். ★

# ஆசிரியர்களின் கரங்களில் தங்கியுள்ள சிறுவர் கல்வி

கல்விக்கான உரிமை என்பது எமது புலத்துச் சிறார்களுக்கான மிக முக்கிய உரிமையாக கருதப்படுகின்றது. அந்த உரிமைக்குரிய மதிப்பளிக்கப்பட்டு எமது சமுதாயம் வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்ற சீரிய நோக்கோடு அனைவரும் செயற்படுதல் எமக்கேயான காலத்தின் கட்டளையாகும்.

போட்டி, தனிமனித வளர்ச்சி, இலாபம் என்பன போன்ற இரண்டாம் தர மதிப்பீடுகளை வளர்க்கும் காலனியாதிக்கக் கல்விமுறையே இன்று பரவலாக இங்குள்ளது. இது சமூகக் கரிசனை, பங்கேற்பு, கூட்டு வாழ்க்கை, பண்புவளர்த்தல் என்னும் மதிப்பீடுகளுக்கு மதிப்புத் தராமையால், வாழும் சமூகத்திலிருந்து சிறார்கள் அந்நியப்பட்டுவிடும் நிலையே காணப்படுகின்றது. இதன் விளைவாக அவர்கள் சார்ந்த நிலம், பேசும்மொழி, உறவினர் என்பன கூட அந்நியமாகும் அபாயமுண்டு! இத்தகைய விளைவின் நீட்சியாகவே நமது உயர் பட்டதாரிகள் பலர் அந்நியநாட்டில் பணியேற்கப் படையெடுக்கின்றனர். இது எமது கல்வி அமைப்பில் ஏற்பட்டிருக்கும் மிகப்பெரிய சோக நிலையாக உள்ளது.

இத்தகைய நிலையினை மாற்றி எமது தேசத்துச் சிறார்களின் கல்வி வளர்ச்சியை எமது தேசத்திற்கே பயன்படக் கூடிய வகையில் கட்டியெழுப்புவதுடன், எமது சிறார்கள் ஒவ்வொருவரினதும் உரிமைக்கும் மதிப்பளித்து அவர்களின் வாழ்வுக்கு வழியமைத்துக் கொடுக்க வேண்டிய யதார்த்த நிலையை எமது சமூகம் புரிந்து கொள்ளுதல் அவசியம். எத்தகைய செயற்பாடுகள் ஊடாக எமது சிறார்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்தப் போகின்றோம் என்கின்ற விழிப்புணர்வு உடையவர்களாக இருப்பதோடு மட்டுமன்றி அதற்கான முயற்சியை மேற்கொள்வதும் இன்றியமையாததாகும்.

**சிறுவர் உரிமைக்கல்வியும், ஆசிரியரும்**

அறிவைப் புகட்டுவது[illegible] டும் ஆசிரியரின் பணி[illegible] சிந்தனை வித்துக்களை இளம் இதயங்களில் ஊன்றி, வளர்த்தலே இவர்கள் பணி. இவர்கள் மாணவர் அணியின் தளபதிகள் அல்லர்; வாழ்வின் பொருள் தேடும் பயணத்தில் மாணவரின் சக பயணிகள்;

இவர்கள் பணி கேள்வி எழுப்பும் மனோபாவத்தை சிதைத்து விடாது உண்மை தேடும் மனோபாவத்தை ஊக்குவித்தலே ஆகும்.

சிறார்களுக்கு கல்வி போதிக்கும் ஆசிரியர் ஒருவர் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் என்பது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம். சிறுவர்களுக்கு கல்வி மூலம் தன்னம்பிக்கையை வளர்த்து, அவர்களைப் பொறுப்புமிக்க, சமூக அக்கறையுடைய பிரஜைகளாக ஆக்க வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களுக்கு உண்டு. எனவே அத்தகைய ஆசிரியர்கள் குறித்த சில பண்புகள், திறன்கள் உடையவராக விளங்க வேண்டும்.

அவையாவன-

**நம்பிக்கை**

மனித உறவு என்பது ஏற்ச[illegible] அதனைக் கண்டறிய வேண்டும், உரமூட்ட வேண்டும், வளர்த்தெடுக்க வேண்டும், மேம்படுத்த வேண்டும், ஆழப்படுத்த வேண்டும். இத்தகைய அணுகுமுறைகளுக்கு நம்பிக்கையூட்டும் நடத்தைகளே அடிப்படையானவை. இந்த வகையில் ஓர் ஆசிரியரின் பொறுப்பு என்பது சிறுவர்களிடத்தின் தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் என்பதுடன் மட்டும் நின்றுவிடுவதாக அமையாது, தன்னுடைய நிலை பற்றிய நம்பிக்கையையும் சிறுவர்களுக்கு உணர்த்துவதாகவும் அமைய வேண்டும். ஆசிரியர்களிடம் மாணவர்களுக்கு உள்ள நம்பிக்கை காரணமாக மனித வாழ்வில் பல பிரச்சினைகள் பற்றி அவர்களுக்கு எழும் வினாக்களுக்கு உரிய விடைகளை ஆசிரியரிடம் இருந்தே பெறக் கூடும். அத்தகைய நிலையில் கல்வி பற்றிய விளக்கம் மட்டும் அன்றி சமூகம் பற்றிய விளக்கத்தையும் கொடுத்து அவர்களது சிந்தனைத் திறனை தூண்டி படைப்பாற்றலை மேம்படுத்தக்கூடியவர்களாக ஆசிரியர்கள் விளங்கவேண்டும்.

**எளிமை**

சிறுவர்களுக்கு கல்வி புகட்டும் ஆசிரியர், குழந்தைகளின் உலகத்தை புரிந்து கொள்ளக் கூடியவராக இருக்க வேண்டும். அதற்கு அவர் குழந்தைகளை ஒத்த மனத்தை உடையவராக மாறினால் மட்டுமே சிறுவர்களின் உலகத்துக்குள் நுழைய முடியும். எனவே ஆசிரியர் குழந்தையைப்போன்று எளியவராக மாற வேண்டியது அவசியமானதாகும். குழந்தைகளின் உலகை அவர் அறிந்து கொள்ளுதல், உணர்வுகளை அறிதல், ஏக்கங்களை அறிதல், மாண்பை மதித்தல், அவர்களது எல்லைகளை ஏற்றுக்கொள்ளல், வாழ்வின் அர்த்தத்தைக் கண்டறியும் பயணத்தில் அவர்களோடு துணையாக இருத்தல் என்பன இதனூடாகச் சாத்தியமாகும்.

வைரவப்பிள்ளை பாலமதி

**உற்று நோக்கல்**

நேரடி வாழ்கை அனுபவத்தினூடாகவும், தகவல் தொடர்பு சாதனங்களின் வழியாகவும்

(22 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் மனங்களைக் கவர்ந்த அரச அதிபர்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் எழுபதாம் ஆண்டு முதல் இன்றுவரை அரச அதிபர்களாக இருந்து மக்களின் மனங்களைக் கவர்ந்துள்ள சில அரசாங்க அதிபர்களின் சேவைகள், நடவடிக்கைகள், செயற்பாடுகள் என்பன இன்றும் மக்களின் மனங்களில் நிலைத்து நிற்கின்றன. உண்மையில் அரசாங்க அதிபர்கள், அரசசேவையாளர்கள் யாவரும் மக்களுக்குச் சேவை புரிவதற்கே தம்மை ஈடுபடுத்திக் கொள்கின்றனர். ஆனாலும் சில அரச அதிபர்களின் செயற்பாடுகள் எளிதில் மறக்க முடியாதனவாகவும் நின்று நிலைப்பனவாகவும் பாராட்டத் தக்கனவாகவும் விளங்குவதைத்காணக்கூடியதாக உள்ளன. எனவே அத்தகையவர்கள் மக்களின் மனங்களைக் கவர்ந்தவர்களாக என்றும் பேசப்படுகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் அரச அதிபர்களாக சேவைகள் பல புரிந்தோர்களின் செயற்பாடுகள், அர்ப்பணிப்புக்கள் பற்றி மக்களின் உள்ளங்களில் நிலைத்து நின்றவை பற்றி அவர்கள் கூறுவன இங்கு கூறப்பட்டுள்ளன. 16.09.1970 முதல்31.05.1975 வரையான காலப் பகுதியில் கடமைபுரிந்த திரு எம்.ரி. விமல் அமரசேகரா என்பவர் மிக மிக எளிமையானவர். எல் லோருடனும் இனிமையாகப் பழகி மக்களைக் கவர்ந்தார். சிறந்த நிர் வாகம் செய்து பற்பல அபிவிருத்தி வேலைத் திட்டங்களை நிறைவு செய்தார். அதனால் அவரை, அவருடன் சேவைகள் ஆற்றிய பலரும் பயன் அடைந்த பொது மக்களும் பாராட்டுகின்றனர்.

அரசாங்க அதிபரான திரு திஸ்ஸ தெவேந்திரா என்பவர் 1.6.1975 முதல்31.12.1975 வரை குறுகிய காலம் சேவை புரிந்தார். 01.01.1976 முதல் 31.12.1977 வரையான காலப் பகுதியில் திரு.எல் விஜயபாலா என்பவர் நிர்வாகத்தினை சீராக அமைத்து கடமை புரிந்தார் 01.01.1978 முதல் 01.05.1978 வரையில் திரு ஏ. ஜோசேப் அரச அதிகராக கடமைகளை மட்டும் செய்தார்.

01.05.1978 - 01.05.1979 வரையான காலப்பகுதியில் 'லயனல் பெர்னாண்டோ' அரச அதிபராகச் சிறந்த நிர்வாகத்துடன் எவ்வித பாகுபாடும் காட்டாது, துணிவுடன் யாழ். மக்களுக்கு வேண்டிய சேவைகள் புரிந்துள்ளமை மக்களினால் இன்றும் நினைவு கூரத்தக்கனவாக உள்ளன. மக்களின் மனதில் இடம்பெற்ற காரணத்தினால் அவரது தயார் தென்னிலங்கையில் காலஞ்சென்றபோது இங்கிருந்து பலர் மரணச் சடங்கில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

01.06.1979 - 30.06.1979 வரை டி.எம். ஆரியரெத்னா அரச அதிபாராக இருந்தார். 30.06.1979 - 13.07.1981 வரை யோகேந்திரா துரைச்சாமி அரசாங்க அதிபராச் சிறப்பாகச் சேவை புரிந்தார். மக்களுடன் நெருங்கிப் பழகித் தொடர்புகள் கொள்ளாதபோதும் தமது கடமைகளைத் தவறாது சரிவரச் செய்தமையால் பாராட்டப்பட்டார்.

தேவநேசன் நேசையா அரச அதிபரான 14.07. 1981 - 13.07.1984 வரையான காலப் பகுதியில் மக்களின் தேவைகளை இனங்கண்டு; தனது சக அதிகாரிகளின் ஒத்துழைப்பையும் பெற்று, விரைந்து நடவடிக்கை எடுத்துச் சிறப்பாகச் சேவை புரிந்தமை யாவராலும் மறக்க இயலாதவை. மக்களின் உள்ளங்களில் இடம் பிடித்துப் பெருமையாக இவர் பேசப்படுகிறவர். அதுபோன்று எம்.பஞ்சலிங்கம் அரச அதிபராக இருந்த 14.07.1984 - 01.05.1989 வரையான காலம் மிகவும் நெருக்கடி மிகுந்த காலமாக இருந்தது. அவர் மிகவும் கண்டிப்புடனும், துணி வுடனும் சிறப்பாகச் சேவையாற்றியமை பாராட்டக் கூடியவை. இந்திய அமைதிப் படை இருந்த நெருக்கடி மிக்க சூழ் நிலை. 1988ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலை யாழ்.மாவட்டத்தில் பல எதிர்ப்புகளுக்கும் மத்தியில் துணிவுடன் நடத்தி, அதனால் அவருக்கு ஏற்பட்ட துயரங்களும் மறக்க இயலாதவை.

அன்ரன் அல்பிரட் 17.05.1989 - 31.08.1989 வரை மூன்று மாத காலமும் எஸ்.தர்மபாலன் 01.09.1989 - 23.11.1989 வரையான மூன்று மாத காலமும் அரச அதிபர்களாக இருந்தனர்.

க.மாணிக்கவாசகர் 24.11.1989 - 06.03.1990 வரையான காலப்பகுதியிலும் பின்னர் 16.05.1991 - 17.11.1994 வரையான காலப்பகுதியிலும் அரச அதிபராக இருந்தபோது மிகக் கூரிய சிந்தனையுடன் ஆழ்ந்து யோசித்துச் சிறந்த முறையில் நிர்வாகம் நடத்திப் பொது மக்களின் அன்பினைப் பெற்றார். பொதுமக்களுடனும், தமது சக உத்தியோகத்தர்களுடனும் நன்கு நெருக்கமாகப் பழகிச் சிறப்பாக நிர்வாகம் செய்தவராவார். பற்பல அபிவிருத்தி நடவடிக்கைகள், புனர்வாழ்வுத் திட்டங்கள் என்பன ஏற்படுத்தப்பட்டன. இவரது காலப் பகுதியில் நாட்டில் மிக மிக நெருக்கடி, கொடுமைகள் என்பன நிகழ்ந்துள்ளது. இருந்த போதும் எல்லாவற்றையும் ஏற்றுச் சகலரையும் மதித்து சிறப்பாகக் கடமைகள் செய்து பாராட்டப்பட்டவர்.

இ.குமாரசாமி சர்மா
ஒய்வுபெற்ற உதவிப் பணிப்பாளர்

கே.பொன்னம்பலம் 18.11.1994 - 09.11.1995 வரையிலும் அரச அதிபராக இருந்தார். இவர் பொதுமக்களுடன் நேரடியாக அதிகம் தொடர்புகள் கொள்ளாத போதிலும் தமது உத்தியோகத்தர்களுடன் கலந்தாலோசித்துப் பொது மக்களின் தேவைகளை இனங்கண்டு அவற்றை மிக அமைதியாகச் செய்தவர்.

செ.பத்மநாதன் 10.11.1996 - 29.06.1197 வரையும் பின்னர் 07.02.2002 - 31.12.2004 வரையும் அரச அதிபராகச் சேவை புரிந்தவர். சிறந்த நிர்வாகக் கட்டமைப்புடன், சிறப்பான சேவை ஆற்றியவர். மிகவும் கண்டிப்பானவர். எவரும் அருகில் செல்லப் பயப்படுவார்கள். ஆனால் அவர் மிகமிகக் கட்டுப்பாட்டுடன் சிறந்த முறையில் சிறந்த தரம்மிக்க நிர்வாகம் புரிந்தார். பொது மக்களின் தேவைகளை இனம்கண்டு தானும் தமது சகல உத்தியோகத்தர்களும் சிறப்பாகச் சேவை புரியவும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பதற்கு இணங்கச் சிறப்பாகச் சேவைகள் புரியத் தன்னாலான சகல உதவிகளையும் புரிந்து மக்களினதும், உத்தியோகத்தர்களினதும் நன்மதிப்பைப் பெற்று நின்று, நிலைத்து நிற்கும் பெரும் புகழினைப் பெற்றவராவார். அபிவிருத்தித் திட்டங்கள், புனரமைப்பு வேலைகள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாக மேற்கொள்ள நடவடிக்கைகள் பல செய்தார். அதனால் அவரும் மக்களின் மனங்களைக் கவர்ந்த அரசாங்க அதிபர் வரிசையில் போற்றப்படுகிறார்.

க.சண்முகநாதன் 30.06.1997 - 06.10.2002 வரையான காலப்பகுதியில் அரசாங்க அதிபராக இருந்தார். சண்முகநாதன், அவருடன் சேவை புரிந்த அனைவரோடும் அன்பாகப் பழகி அவர்களுக்கு வேண்டிய சகல உதவிகளையும் இயன்றளவு புரிந்து, அவர்களை ஊக்குவித்து பொதுமக்களுக்கான சேவைகளைச் செம்மையாக நிறைவேற்ற ஆவன புரிந்தமை சிறப்பானதாகும். அவர், தான் அரச அதிபர் என இனங்காட்டாது சாதாரண உத்தியோகத்தர் போன்று எல்லோருடனும் நெருக்கமாகப் பேசிப் பழகினார். அவரை யாரும் எப்போதும், எங்கும் கண்டு பேசக்கூடியவராக இருந்தமை சிறப்பானதாகும். இவரது காலத்தில் பல அபிவிருத்தித் திட்டச் செயற்பாடுகள், புனரமைப்புப் பணிகள் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டன.

க.கணேஸ் 01.01.2005 - 30.06.2010 வரையான காலத்தில் சிறப்பான சேவைகள் பல புரிந்தமை அனைவரும் அறிந்தவை. மக்களினால் அவர் பாராட்டப்பட்டு வந்தமை பத்திரிகை வாயிலாகத் தினம் தினம் வெளி வந்தமை குறிப்பிடத்தக்க விடயம்.

இன்றைய அரச அதிபர் இமெல்டா சுகுமார் ஜூலை 2010 தொடக்கம் முதல்பெண் அரச அதிபராக யாழ். மாவட்டத்தில் செயலாற்றுவது சிறப்பானது. இவர் மிகவும் துணிவுடன் யாழ்.மாவட்டத்தை அபிவிருத்தி செய்ய அரும்பாடுபட்டு வருகின்றமையும் அவருக்கு அரசின் செல்வாக்கு இருப்பதும் எமது மக்களுக்கு அரிய சந்தர்ப்பமாக உள்ளன. அவர் தன்னாலான நல்ல சேவைகளைத் திறமையுடன் ஆற்றுவதற்கு அவருக்கு எல்லாவித நலன்களும் கிடைக்க இறைவனை வேண்டி நிற்கின்றனர். இத்தகைய அரிய சேவைகளை மக்களுக்குப் புரிந்தவர்கள் மக்களின் மனங்களைக் கவர்ந்த அரச அதிபர்களாவர்.

# எங்கட காசில எங்களுக்கு விழா

''அம்மா நாளைக்குப் பள்ளிக்கூடத்தில் 'மீற்றிங் காம்' உங்களைக் கட்டாயம் 'மெடம்' வரச்சொன்னவா..'' என்று கூறியபடி கடிதத்தைக் கொடுத்தாள் மகள்.

''பிள்ளை ஸ்கொலசிப் பாஸ் பண்ணினது தானே, அதுதான் மெடம் வரச்சொல்லியிருக்கிறா..'' என்று தனக்குள்ளே நினைத்தபடி கடிதத்தைப் பிரித்துப் படித்தாள் தாய்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோர்களுக்கான அவசர கலந்துரையாடல் என்று தலைப்பிட்டு அந்தக் கடிதம் வரையப்பட்டிருந்தது.




கடிதத்தில் அறிவிக்கப்பட்ட திகதிக்கு அந்தத் தாயும் கூட்டத்துக்குச் சென்றிருந்தார்.

அங்கு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோர்கள் மட்டுமல்லாது பரீட்சையில் 100இற்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் பெற்றோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

எங்கட ஸ்கூல்ல இந்தமுறை கூடுதலான பிள்ளையள் 'ஸ்கொலர்சிப்ல' பாஸ் பண்ணியிருக்கினம். அதனால பெரியளவிலான கௌரவிப்பு விழாவொன்றை நடத்தவுள்ளோம். அதுக்கு ஒவ்வொரு பெற்றோரும் 2500ரூபா தரவேணும் என்று அந்தக் கூட்டத்தில் பாடசாலை அதிபர் அறிவித்தார்.

எங்கட பிள்ளையள் ஸ்கொலர்சிப்ல பாஸ் பண்ணிட்டுதுகள். அதுக்குக் கௌரவிப்பு விழா செய்யப் போகிறீங்கள் எண்டு நினைக்கும் போது மனதில பெரிய சந்தோஷம்தான். ஆனால் நீங்கள் கேட்கிற இவ்வளவு காசு எங்களால குடுக்கமுடியாது... என்று சில பெற்றோர்கள் தமது இயலாமையை வெளிக்காட்டினார்கள்.

இப்படிச் சொல்லாதீர்கள். ஒரு தரம்தானே, நீங்கள் பங்களிப்புச் செய்ய வேண்டும் என்று அதிபர் மீண்டும் அழுத்தினார்.

''இதுக்கு மிஞ்சியும் மாட்டன் என்று சொன்னால் பிள்ளைகளின்ர கௌரவம்தான் போயிடும். எங்காவது கடனைப்பட்டாவது கட்டுவோம் என்று தங்களைத் தாங்களே தேற்றிக் கொண்டனர் பெற்றோர்கள்.

தமது பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காகவே உதட்டளவில் சம்மதித்தனர். ஆனாலும் அந்தப் பணத்தைத் புரட்டுவதற்கு அவர்கள்பட்டபாடு அவர்களுக்கும் ஆண்டவனுக்கும்தான் தெரியும்.

இப்படியான சம்பவங்கள் பல பாடசாலைகளில் ஒன்றில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் தற்போது புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களைக் கௌரவிப்பது கட்டாயமானதொன்றாகிவிட்டது. இவ்வாறான கௌரவிப்புகளும் ஒன்றாக அடையாளப் பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. கௌரவிப்புகளின் தொகை பெருகிவிட்டது.

மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைகின்ற போது அவர்களைக் கௌரவித்துப் பாராட்டுவதென்பது நல்லதொரு விடயம் தான்.

ஆனால் அந்தக் கௌரவிப்பு அந்தப் பாடசாலைச் சமூகத்தால் செய்யப்பட்டால் ஆரோக்கியமாகவும், ஊக்கமளிப்பதாகவும் இருக்கும். அதைவிடுத்து தமக்குரிய மாலையைத் தாமே வாங்குவது போன்ற சங்கடமும் சுமையும் மாணவர்களுக்கு ஏற்படுத்தப்படக்கூடாது.

மாணவர்களைப் பாராட்டி ஊக்கமளிக்கத் துடிக்கும் உள்ளங்களே! உங்களை வரவேற்கிறோம். ஆனால் அந்த ஊக்கம் பிள்ளை களின் மனங்களில் தாக்கத்தையும், அவர்களின் பெற்றோர்களின் மனங்களில் ஏக்கத்தையும் ஏற்படுத்தும் நிலைக்குச் சென்றுவிடக்கூடாது.

கவிநேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைகளின் உறைவிடம் கலாபவனம்

கலை வரலாறு என்பது மறு தலையாக சமூக வரலாறாகின்றது. கலைகளும், கலைகளை வளர்க்கும் றுவனங்களும் பண்பாட்டை வெளியீடு செய்யும் குறிகாட்டிகளாகவும், சமூகத்தினை எடுத்துணர்த்தும் உயிர்ப்பு மையங்களாகவும் தொழிற்படுகின்றன. கலைப்படைப்பானது உண்மையான கலைப் பெறுமானங்களைக் ாண்டிருக்குமானால் உலகம் பொதுவானதாக விளங்கும். உடல் மொழியின் அசைவினைக் கொண்ட ஸ்திரியமான பரதக்கலை இந்தியாவில் தோற்றம் பெற்று உலகம் பூராகவும் இன, மத,மொழி வேறுபாடின்றி பாபித்திருப்பதனைக் காணலாம்.

இந்தியா, இலங்கை புவியியல் காரணிகளால் தென்னிந்திய சாஸ்திரிய ஆடல்வடிவமான பரதநாட்டியக்கலை த்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பரவலாக்கப்பட்டதனை வரலாறுகளினூடாக அறியலாம். யாழ்ப்பாணத்தில் ட்சி புரிந்த தமிழ் மன்னர்கள் ஆடற்கலையை ஆதரித்தனர்; என்பதை "வையா பாடல், கைலாயமாலை ல்களின்டாக அறிய முடிகின்றது. கோயில்களை மையமாகக் கொண்டே இந்துக் கலைகள் அனைத்தும் ார்ந்தன. காலனித்துவ ஆட்சியில் குறிப்பாக போர்த்துக்கேயருடைய ஆட்சியில் இந்துக்கோயில் ளை இடித்ததுடன், தமது கிறிஸ்தவ மதத்தினையும் மதம்சார் கலைகளையும் பரப்பினர். னால் கோயில்களோடு வளர்ந்த பரதக்கலை நலிவடைந்தன. பிரித்தானியரின் ஆட்சியில் மதச் ந்திரம் அளிக்கப்பட்ட போது யாழ்ப்பாண,தமிழக மக்களுக்கிடையிலான அரசியல், சமய, பண்பாட்டுக் கோட்டு கலாசாரங்களிடையே ஊடாட்டங்கள் நிகழ்ந்தன. இந்திய ச் செட்டிமார்களுடைய பொருளாதார ரீதியாலான தொடர்புகள், ழ்ப்பாணத்தில் கோயில்கள் கட்டப்பட்டதுடன் கோயில் சார் சை நடன நாடகக் கலைகளும், கலைஞர்களுக்குமான ஊடாட் தினை ஏற்படுத்தியவர்களில் முக்கிய இடத்தினை வகிக் றன.



வண்ணார் பண்ணைச் சிவன் கோயில், இணுவில், நல்லூர், விட்டபுரம், அளவெட்டிப் பகுதிகளில் தேவரடியார் தமது லச்சேவைகளை வழங்கியுள்ளனர். 1900 களில் யாழ்ப் ணத்தில் சின்னமேளக் கச்சேரிகள் பிரபல்யமடைந்திருந்தன. ஆரம்ப காலத்தில் பக்தியுடன் புனிதமான ஒரு தெய்வக் லயாக, தொண்டாக, பூசையின் ஒரு பகுதிக் கிரிகை இடம்பெற்ற தேவரடியாரது நாட்டியமானது பின் மயப்படுத்தப்பட்டு பொழுதுபோக்கிற்குரியதாக ி யது. இச்செற்பாட்டினை மாற்றி செஞ்நெறிகலை வமாக மாற்றியதில் ஈ. கிருஷ்ணையர், ஸ்ரீமதி.ருக் ிதேவி அருண்டேல் ஆகியோரது பணி முக்கியமா ாகும். தமிழகம் போல் ஈழத்திலும் பரதக்கலையின் மலர்ச்சியில் M.S பரம், கலைப்புலவர் நவரத்தினம், கத்தி, V.R இராசநாயகம், கலையரசு சொர்ணலிங்கம், லச்செல்வன் ஏரம்பு.சுப்பையா ஆகியோரது செயற் கள் குறிப்பிடத்தக்கன.

சமூக வரலாற்றை எழுதுவதற்கும் மனிதர்கள் பற்றிய புரிதல்களுக்கும் கலை இலக்கியப் பண்பாடு டர்பான நடவடிக்கைகள் பகிரப்படுவதற்கும் நிறுவனங்கள் துணை நின்றன. யாழ்ப்பாணப் பரதக்கலைப் ண்ாமத்தில் ஏரம்பு சுப்பையாவால் ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனமான "கலாபவனம்" முக்கிய இடத்தைப் றுகின்றது. ஏரம்பு சுப்பையா இணுவிலைச் சேர்ந்த புகழ் பூத்த அண்ணாவியார். ஏரம்புவிற்கும் தங்க துவுக்கும் மகனாக 1922 ஆம் ஆண்டு தை மாதம் 13 ஆம் திகதி பிறந்தார். 19ஆம் நூற்றாண்டளவில் பெண்கள் டையில் நடிக்கவோ, ஆடவோ முன்வராத காலகட்டத்தில் பெண்வேடம் தரித்து நடித்தார். யாழ்ப்பாணத்தில் பெற்ற இந்தியக் கலைஞர்களின் அவைக்காற்றுகையின் விழிப்புணர்வால் 1940களில் ஏரம்பு சுப்பையா ர்கள் இந்தியா சென்று காரைக்குடி இராமசனசபாவில் நடிகராயினார். இந்தியாவில் திருச்செந்தூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் பரதத்தையும், கலாநிதி குருஜி கோபிநாத் அவர்களின், சென்னை நடனநிகேதனில் கதகளியினையும், தென்னிந்திய கிராமிய நடனங்களையும் கற்றார். சாஸ்திரிய பரதநாட்டியம், சதிர், சின்னமேளம், தேவரடியாள் ஆட்டம் எனக் கருதிய யாழ்ப்பாண மக்கள் மத்தியில் பரதக்கலை ஓர் உன்னதமான கலைவடிவம் என்பதை அறிவுறுத்தி கலைஞர்களை உருவாக்குவதற்கும், கலைஞர் பரம்பரையொன்றை உருவாக்குவதற்கும் அயராது உழைத்தவர் ஏரம்பு சுப்பையா அவர்கள்.




யாழப்பாணத்தில் கலைகள் வளரும் கொக்குவிலில் காங்கேசன்துறை வீதிக்கு மேற்கு ஆடிய பாதம் வீதியில் 1956 ஆம் ஆண்டு திரு.க.தி.சம்பந்தனின் பெயர் சூட்டலுடன் "கலாபவனம்" ஏரம்பு சுப்பையாவினால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு இல்லத்தில் நடன வகுப்புக்களை நடாத்தி வந்தார்.

அன்றைய காலகட்டத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள படித்த குடும்பத்தைச் சேர்ந்த இளம் பெண்கள் பரதம் பயில த்தளமிட்டார். பரதம் பயிலும் மாணவர் தொகை அதிகரித்ததன் காரணமாக 1958 ஆம் ஆண்டு கலாபவனத்தின் தர கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டு 1960.06.06 அன்று முதல் நாள் வகுப்பு கலாபவனத்தில் ங்கேறி பொன்விழாப் பயணத்தில் காலடியெடுத்து வைத்துள்ளது.

கலைகளின் உறைவிடமான "கலாபவனம்" யாழ்ப்பாணத்தில் ஸ்தாபிக்கப்பட்ட முதல் தனியார் வனமாகும். ஆரம்ப காலத்தில் கலாபவனத்தின் தலைவராக திரு.க.தி.சம்பந்தனும் காரியதரிசியாக ராசநாயகமும், செயலாளராக திரு.க. இராமநாதனும், தனாதிகாரியாக ந. நடராஜாவும் விளங்கினார்கள். பவனத்தில் பந்தணை நல்லூர் பணி பரதம், கதகளி, மோகினியாட்டம், கிராமிய நடனம், வாய்ப்பாட்டிசை, தங்கம் என்பன போதிக்கப்பட்டன. சமகாலத்தில் பரதமே பயில் நிலையிலுள்ளன. ஏரம்பு சுப்பையா அவர் கலாபவனத்தின் பரதாசான். புதல்விகள் சாந்தினி சிவனேசன், திருமதி கிருத்திகாயினி ஜெகதீஸ்வரன், திரு மதி தினி ஸ்ரீகாந்தன் தந்தையாரின் பணியினை மேற்கொண்டு வந்தனர். சமகாலத்தில் சிரேஷ்ட புதல்வியான தினி சிவனேசனும் புதல்வி தேவந்தி சிவனேசனும் கலாபவனத்தை வழி நடத்திச் செல்கின்றனர்.

கலைப்படைப்புகளின் பாணியைத் தீர்மானிப்பதில் காலம், இடம், பண்பாடு என்பன முக்கியம் பெறுகின்றன. பவனத்தில் பந்தனை நல்லூர்ப் பாணி பின்பற்றப்பட்டாலும் அங்க சுத்தம், லயப் பிடிப்பு,ஸ்நானங்களின் லகள், அழுத்தமான அடவுப்பிரயோகம் என்பவற்றினூடு தமக்கான ஓர் பாணியை கலாபவனம் டயாளப்படுத்தி நிற்கின்றது. உருப்படிகள் பூரணத்துவம் அடையும் வரை இடையறாத பயிற்சி, ரமண்டிப்பயிற்சிகள், கை, பாதம், கண், தலை என்பவற்றுக்கான விசேட பயிற்சிகள், நுணுக்கமான கற்பித்தல் யாகம் என்பன கற்பித்தலின் தனித்துவமான அடையாளங்களாகும். பரத அடவுகளிலிருந்து உருப்படிகள் சிறந்தமுறையில் பயிற்சியளிக்கப்படுகின்றது. கலாபவனத்தில் பரத நாட்டியக் கச்சேரி, அரங்கேற்ற நடன வுகள்,பரீட்சையை மையப்படுத்தி பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. பரதநாட்டிய மார்க்கம், கருத்தியல் ான படைப்புக்கள் நடன நாடகங்கள், பரத நாட்டிய அறிமுறைகள் சாஸ்திர நூல்கள் வரலாறுகள் என்பனவும் வொங்க பயிற்சிகளும் ஜதிப் பயிற்சிகளும் கற்பிக்கப்பட்டு வருகின்றன.

சாஸ்திரிய நடன அவைக்காற்றுகைக் குறுந்தட்டுக்கள் மூலம் நடனம் சார் விளக்கங்கள் அளிக்கப்படுவதுடன் றசார் கலைஞர்களின் விரிவுரைகளும் இடம்பெறுகின்றன.

(தொடரும்)

கலாவித்தகர் செ.கண்ணன்

# கவனிப்பாரற்று....



அடடா மழைடா
அடை மழைடா - என
ஆசையாய் ரசிப்பது எப்போது?
"நிசா" வந்து சென்றாள்
வெள்ளம் புகுந்தது பலருக்கு - ஆனால்
நித்தமும் வெள்ளத்தில்
மிதப்பவர்கள் நாங்கள்!
வாய்க்கால் இல்லை என்று
வாய் வலிக்கக் கதைத்தும்
வாய்க்கவில்லை எமக்கு
வாய்க்கால் ஒன்று....!
காடு என்று நினைத்து
கவனிக்க மறந்ததேனோ?
பெயரில்தான் காடு - ஆனால்
பெயரளவில்
கந்தோர்கள் கொண்டு
கச்சேரிக்கண்மையிலே
கச்சிதமாய் நம்வீதி...!
அழகு மட்டுமல்ல
ஆர்ப்பரிக்கும் மழை வந்தால்
அசிங்கமும் கூடத்தான்...!
பனையால் விழுந்தவனை
மாடேறி மிதித்த கதையாய்
பழைய பூங்கா வெள்ளம் கூட
பாய்ந்தோடி வரும்
ஏற்கனவே வெள்ளம் நிற்கும்
எம்வீதி தேடித்தான்...!
ஏறிய படிகளும்
எழுதிய கடிதங்களும்
ஏளனமாய் பார்க்கின்றன
இன்னும் இல்லையா
விமோசனம் என்று....!
விடிவுதர வேண்டியவர்கள்
விளங்காதது போல் இருந்தால்
எப்போதுதான் எமக்கு
விமோசனம்....!

*காட்டுக் கந்தோர் ஒழுங்கையின் குறிப்பிட்ட சில பகுதிகளில் ஒவ்வொரு மழைக்காலங்களிலும் மழைநீர் தேங்கி நிற்பதால் அப்பகுதியில் வாழும் மக்கள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தகுந்த முறையில் வடிகாலமைப்புச் செய்வதன்மூலம் இப்பகுதி மக்களின் அசௌகரியத்தைப் போக்க உரியவர்கள் விரைந்து நடவடிக்கை எடுப்பார்களா?*

தி.கௌசி
காட்டுக்கந்தோர் ஒழுங்கை.

# அறியாமை

வானத்தின் நீட்சியொன்று
முடிவிலியாய்....
கவிழ்ந்தே செல்கிறது
கனதூரம்
பார்வைகளின் எல்லைக்குள் - அவை
அகப்பட்டுக் கொள்கிறதே
வானின் எல்லையாய்...
பாவம் விழிகள்
பயணம் போகாததால்
பரந்த வானத்தை
எல்லைக்குள்
அடைக்க
எத்தனிக்கிறதே.....

பொன்.சுகந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ். மணிக்கூட்டுக் கோபுரத்தின் எதிரே மருதமரத்தில் தனது கூட்டினுள் சிட்டுக்குருவி நுழையும் போது சரியாக 6 மணி, இருளாகிவிட்டது. கூட்டினுள் இருந்தபடியே தனது லொறிப் பயணத்தை மீட்டுப் பார்க்கிறார்....! அன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு மட்டக்களப்புச் சந்தையில் லொறி நிற்பாட்டப்பட்டது. சாரதியும் அவருடன் பயணித்த இருவரும் லொறியை விட்டிறங்கித் தேநீர்க் கடை ஒன்றினுள் நுழைகின்றனர். லொறியை ஒருமுறை வட்டமடித்த சிட்டுக்குருவியார் நேரே சந்தையை நோக்கிப் பறந்து சந்தையினுள் தொங்கவிடப் பட்டிருந்த வாழைக் குலை ஒன்றின் மீது அமர்ந்து லொறியை உற்று நோக்கியவாறு சந்தையை மிக உன்னிப்பாக அவதானிக்கிறார்...!

''எங்கை அண்ணாச்சி போறியள்: உங்களைக் கண்டு கனகாலமாச்சுது'' எப்படிப் பிள்ளையள் சுகமாயிருக்கினமே என்று வாழைக்குலையின் அருகில் நின்ற ஒரு பெரியவர் அங்கு வந்த ஒருவரைக் கேட்க... ''ஓம்... ஓம்... போடியார், என்டை ரண்டாவது மகன் லண்டனாலை வந்திருக்கிறான். அவனுக்கேதும் கறிபுளி பார்க்கலாம் எண்டு வந்தனான்'' என்றார்.

''....கையிலை பேப்பர் வச்சிருக்கிறியள் அதை ஒருக்காத் தாருங்கோவன் பாப்பம்'' என்று போடியார் கேட்டதும், ''இந்தாருங்கோ பேப்பரைப் படியுங்கோ. நான் அதிலை போய்ப் பார்த்து மரக்கறியை அதை இதை வாங்கிக்கொண்டு வாறன். பிறகு கதைப்போம்'' என்று அவர் உள்ளே நுழைகின்றார். போடியாரும் பத்திரிகையைப் பிடித்தவாறு நிற்கிறார்.

சந்தையில் மக்கள் கூட்டம் கூட்டமாக ஆங்காங்கே நகர்வதும், சந்தைக் காட்சிகளும் சிட்டுக் குருவியாருக்கு மிக்க மகிழ்ச்சியூட்டுவதாக இருந்தது.

....பெரிய போடியார் பத்திரிகை படித்து முடிக்கவும். சரியாக அவரது நண் பரும் பொருள்களை வாங்கிக் கொண்டு அவ்விடத்திற்குத் திரும்பவும் வந்து விட்டார்.

''அண்ணாச்சி..! பேப்பர் பாத்திட்டியளே?'' ''... ஓம்... ஓம்.'' ''என்னவாம் மகன்? லண்டனிலை என்ன புதிணமாம்?''

''அவன் அங்கை ஒருத்தரோடையும் சேருகிறதில்லை, தானும் தன்பாடும்.'' ''பிள்ளை சுகமாயிருக்கிறாவோ, என்ன மாதிரி? யாழ்ப்பாணத்துக் காணிகள்'' என்று பெரிய போடியார் துருவித் துருவிக் கேட்டார்.

''.... அதெல்லாம் அப்பிடி அப்பிடியே தான் போடியார், இப்ப நீங்கள் இன்றைய பேப்பரிலை என்ன புதினம் என்று சொல்லுங்கோவன்'' என்று அவர் கேட்க.... 'தமிழ்க் கட்சிகள் எல்லாம் ஒன்று கூடு தாம். ஏதோ செய்யப் போகினம் போலை தான் தெரியுது.

மாமாங்கப் பிள்ளையார் சாட்சியாக நான் சொல்லுறன் முந்தி இருந்த அரசியல்வாதிகள் எல்லாரும் தமிழ் மக்களை நல்லா ஏமாத்திப் போட்டினம். கடவுளே இனியெண்டாலும் ஏதோ இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு கிடைக்க வேணும்.

இது சரிவரும் எண் டால் நாங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து பிள்ளையாருக்கு ஒரு பெரிய பொங் கல் பூசை செய்ய வேணும்... நீ என்ன சொல்லுகிறாய்? என்றார் போடியார். ஓம்.. ஓம் போடியார் அது சரி தான். இன்னமும், ஒன்று கூடாத குடும்பங்கள் எத்தனையோ இருக்கு அங்கை ஒன்று இஞ்சை ஒன்று, வெளிநாட்டில் ஒன்றாக இருக்குது... பாருங்கோ உங்களுக்குத் தெரியும் இந்தத் 'தீர்வுக் கனிக்கு' எத்தனை எத்தனையோ பேர் எட்டி எட்டி பார்த்தவையள். இதைச் சிலர் 'எட்டாத பழம். அது புளிக்கும்' என்றும் விட்டிட்டினம். பழுத்து விழுந்தால் அது கனிந்த பழ மாகவே இருக்க வேணும் என்பது தான் என்டை விருப்பம்: வெம்பி விழக் கூடாது'' என்றார் அவர். ஒன்று பட்டால் உண்டு வாழ்வு எண்டாலும் தந்தை செல்வா காலத்திலைகூட இந்த ஒற்றுமை இருக்க வில்லை. அந்தக் காலத்திலை ஒன்று பொசிற்றிவ், ஒன்று நெக்கற்றிவ் ஆகத்தான் இருந்தது'' என்று கூறிக் கொண்டு போடியார் அவ்விடத்தை விட்டு அகன்று செல்கிறார்.

....இடை விடாது லொறியையே பார்த்தபடி குருவியாரும் சந்தையைச் சுற்றி வட்டமடித்து நோட்டமடித்துத் திரும்பவும் அந்த வாழைக் குலையை நோக்கிப் பறக்கும் போது லொறியினுள் சாரதியும் மற்றைய இருவரும் ஏறுகின்றனர். வெங்காயப் பிடிகள் இறக்கப்பட்டிருந் ததை அவதானித்த சிட்டுக் குருவியார் லொறியின் உட்புகுந்து நெஸ்ப்பிறேப் பெட்டிகளின் இடையே ஓர் இடைவெளியில் அமர்ந்து பயணிக்கின்றார்....! லொறியும் வேகமாகத் தொடர்ந்து ஒரு மணித் தியாலத்துக்கு மேல்ஓடி கொக்கட்டிச் சோலையைச் சென்றடைந்து. அங்கே கடை யொன்றில் சில பொருள்களை இறக்கி விட்டு முதலைக்குடாசென்று அலயடிவேம்பிற்கும் செல்லும்போது இரவாகி விட்டது. சிட்டுக்குருவியார் உள்ளே இருந்து பார்க்கின்றார்...

வெளியே அவ் வீதிவழியே துவிச்சக்கர வண்டியிலும் மோட்டார் சைக்கிள், ஆட்டோக்களிலும் மக்கள் பயணிக்கின்றனர். கடையின் முன்னால் நிற்பாட்டப்பட்டிருந்த லொறியின் உள்ளே இருந்த சிட்டுக்குருவியார் எப்போ கூடு திரும்பலாம் எனும் ஆழ்ந்த சிந்தனையில் உறங்கிவிட்டார்.

அற்புதமான பயணங்கள்...! காலை விடிந்தது. கதிரவன் தனது ஒளிக் கிரணங்களைப் பரப்பிக் கிழக்கு வானில் மேலெழும்போது காலை 6.30 மணி நீண்ட நாள் ஏக்கத்தில் சிட்டுக் குருவியாரும் லொறியின் நகர்வை எதிர் பார்த்து ஏக்கத்தில் இருந்தபோது சாரதியும் மற்றைய ஒருவரும் வந்து லொறியில் அமர்ந்த சிறிது நேரத்தில், லொறி தனது பயணத்தை ஆரம்பிக்கிறது. சிட்டுக் குருவியாருக்கு ஒரே புளுகம். சாரதியின் பின் புறமாகவுள்ள சிறிய ஜன்னல் அருகே வைத்திருந்த ஒரு சிறு பெட்டியினுள் இருந்து பயணிக்கின்றார்.

சாரதியும், அவர் அருகிருந்தவரும் சம்பாசித்தவாறு பயணத்தைத் தொடர்கின்றனர்...! ''எப்படி இருந்த கொக்கட்டிச் சோலை இப்ப எப்படி இருக்கு.... பார்த்தியளே?'' என்று சாரதி சொல்ல மற்றையவர், எல்லாம் இந்தப் பிரச்சினையாலை வந்த வினைதான். எப்படியிருந்தாலும் 'மட்டக்களப்பு மான்மீயம்', 'யாழ்ப்பாண வைபவ மாலை', 'இலங்கை வரலாறு' என்றெல்லாம் தனித்தனி வரலாறுகள் இருக்கு. காலத்திற்கேற்ற மாற்றங்கள், மாற்றங்களுக்கேற்பக் கலை கலாசாரங்களும் கொஞ்சம் கொஞ்சம் மாறிக் கொண்டு தான் போகுது. இது அவரவர் சிந்திக்க வேண்டிய விடயம். அவரவருக்கும் பாரம்பரியம் ஒன்றிருக்கு.''- என்றார்.

சுவாமி விபுலானந்தர், ஆறுமுக நாவலர் வாழ்ந்த நாள்கள், அவர்களின் சமூகத் தொண்டுகள் எவ்வாறிருந் தன...? ஆலயம், வழிபாடுகள் எதற்காக மேற்கொள்ளப்படுகின்றன போன்ற விடயங்களைப் பற்றி இருவரும் ஏதேதோ கதைத்தவாறே பயணம் தொடர்ந்தது...! பாரிய அழுத்தங்களின் மத்தியில் சிட்டுக் குருவியார் ஒருவாறு கச்சேரியை வந்தடைந்து, கச்சேரிக்கு அப்பால் லொறி நிறுத்தப்பட்டதும் ஒருவாறு பறந்து, பறந்து தனது கூட்டிற்கு வந்து விட்டார்... கூட்டினுள் இருந்தபடியே சிட்டுக் குருவியார் இவ்வாறு தனது லொறிப் பயணத்தை மீட்டுப் பார்த்தபடி உறங்கி விட்டார்! மெல்ல மெல்ல இருள் கலைந்து சூரியனின் ஒளிக்கற்றைகள் மணிக் கூட்டுக் கோபுரத்தின் உச்சியைப் பிரகாசிக்கச் செய்கின்றன. சிட்டுக் குருவியார் துயில் நீங்கிச் சுற்றுச் சூழலை ஒரு முறை வட்ட மடித்துப் பார்க்கிறார் நேரம் காலை 7மணி நேரே சிவன் கோயிலை நோக்கிப் பறக்கின்றார்...!

**காரை ஆனந்தன்**

# நடன நிகழ்வுகளில் கிடைக்கும் பணத்தை ஏழை மாணவருக்கு வழங்குவேன்

**நாட்டிய மயில் - 2010 இல் விருது பெற்ற செல்வி பவித்திரா தயாபரனுடனான நேர்காணல்**



ஈழலங்கா போரம் நிறுவனத்தால் நாட்டிய மயிலுக்கான போட்டி யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடை பெற்றது. அதில் பவித்திரா தயாபரனுக்கு ''நாட்டிய மயில்'' எனும் விருது வழங்கப்பட்டது. விருது பெற்ற பின்னர் அவரின் மன எண்ணங்கள்

கே: உங்களைப்பற்றி கூறுங்கள்?

ப: எனது குடும்பம் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தது. தந்தை கட்டட ஒப்பந்தக்காரர். தாய் மற்றும் சகோதர சகோதரிகள் என எனது குடும்பத்தில் 6 பேர். அதில் நான் கடைசிப் பெண்பிள்ளை.

நான் எனது ஆரம்பக்கல்வியினை (தரம் 1 முதல் ஐந்து வரை) மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையிலும், இடைநிலைக் கல்வியினை மானிப்பாய் மகளிர் கல்லூரியிலும் கற்றேன். ஜீ.சி.ஈ உயர்தரத்தில் கலைப்பிரிவைத் தேர்ந்தெடுத்து அதில் நடனத்தை ஒரு பாடமாக கற்று யாழ். பல்கலைக் கழகத்திற்குத் தெரிவானேன்.

நான் தற்போது யாழ். பல்கலைக் கழக நுண்கலைப்பீட நான்காம் வருட மாணவியாக கல்விகற்று வருகின்றேன்.

கே: பரத நாட்டியத்தைத் தேர்ந்தெடுத்ததற்கு காரணம் என்ன?

ப:எனக்கு நடனக்கலையின் மீது சிறுவயதிலிருந்தே இனம் புரியாத ஓர் ஆர்வம் உண்டு. திரைப்படங்களில் வரும் நடனக் காட்சிகள், பாடசாலையில் நடன ஆசிரியர்கள் என்று பார்க்கும் போதும் என்னை இக்கலை ஆர்வம் பற்றிக்கொண்டது.

என்னைவிட பெற்றோருக்கே மிகுந்த ஆர்வமும் ஈடுபாடும் இருந்தது. எனது குடும்பத்தில் எவருமே நடனம் பயில வில்லை. அவர்களின் ஆர்வத்தினால் நான் நடனக்கலையினை முழுமூச்சாகப் பயின்றேன்.

கே: பரதத்தை சிறுவயதிலிருந்தே கற்கிறீர்களா?

ப: ஆம், எனக்கு ஐந்து வயதிருக்கும் போதே எனது தாய், திருமதி செல்வாம்பிகை வீரசிங்கன் ஆசிரியரிடம் என்னை மாணவியாக சேர்த்தார். அவரிடமேதான் நடனத்தை ஆரம்பத்திலிருந்து கற்றேன். தற்போது செல்லத்துரை ஸ்ரீ கண்ணனிடம் நடனம் கற்று வருகிறேன்.

எனது ஏழு வயதினிலேதான் நான் முதன் முதலாக பாடசாலை நிகழ்ச்சியின் போது மேடை ஏறினேன். அதன் பின்னர் பாடசாலை நிகழ்வுகள், பல்கலைக்கழக நிகழ்வுகளிலும் பங்கு பற்றி வருகிறேன்.

பாடசாலை உயர்தரத்தில் பயிலும் போது எனது ஆசிரியைகளான திருமதி விக்னராஜா, பத்மஸ்ரீ ஆகியோர் என்னை நன்றாக வழிநடத்தினர். அதன் பயனே நான் பல்கலைக்கழக நுண்கலைக்குத் தெரிவானது.

கே: வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சையில் எத்தனை ஆண்டு வரை தோற்றியுள்ளீர்கள்?

ப: தரம் 1 முதல் ஆசிரியர் தரம் (அவை காட்டுகை) தோற்றி சித்தி பெற்றேன். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இடம்பெற்ற ஆசிரியர் தரப் பரீட்சையில் சித்தி பெற்றமைக்காக 2008 ஆம் ஆண்டு ''கலாவித்தகர்'' பட்டத்தினையும் பெற்றுள்ளேன்.

கே: யாழ்ப்பாணத்தில் நடைபெறும் நடன அரங்கேற்றங்களுக்குச் செல்வதுண்டா?

ப: ஆம், நான் முதன் முதலாக 2002 ஆம் ஆண்டு தான் அரங்கேற்றத்திற்கு சென்றிருந்தேன்.

அண்மையில் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற அரங்கேற்றம் ஒன்றுக்குச் சென்றிருந்தேன். இவற்றைப் பார்க்கும் போது அரங்கேற்றம் செய்யும் எண்ணமும் ஆசையும் ஏற்பட்டது தான். ஆனால் அதற்கான குடும்ப சூழ்நிலை எம்மிடம் இல்லை.

அரங்கேற்றம் என்பது எங்களை நடன உலகிற்கு அறிமுகப்படுத்துவதே ஆகும். நான் இன்று நாட்டிய மயில் மூலம் உலகம் முழுவதும் பிரபல்யமாகி விட்டேன்.

அதனால் அரங்கேற்றம் செய்யும் எண்ணம் தற்போது இல்லை. அரங்கேற்றத்திற்குச் செலவிடும் பணத்தினை, எனது மேற்படிப்புக்காக இந்தியா சென்று கல்வியைத் தொடரலாம் என்று நினைக்கின்றேன்.

கே: நாட்டிய மயில் நிகழ்ச்சியில் எவ்வாறு தோற்றியிருந்தீர்கள்?

ப:பத்திரிகையில் விளம்பரத்தினைப் பார்த்தே விண்ணப்பம் செய்தேன். அதில் தெரிவாகிய பின்னர் முதற்கட்ட தேர்வில் 11 பேர் தெரிவானோம். அதற்கான பரீட்சை யாழ்.இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் ஆறுபேர் தெரிவானோம்.

அதன் இரண்டாம் கட்டப் பரீட்சை கோப்பாய் கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்று அதில் மூன்று பேர் தெரிவானோம். இறுதிக்கட்டத் தெரிவு யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலே நடைபெற்றது.

***செல்வி: வாணி***

கே: நாட்டிய மயிலுக்கும் வேறு நிகழ்ச்சிக்கும் தோற்றியதில் உள்ள வேறுபாடு என்ன?

ப: இது ஒரு போட்டி நிகழ்ச்சி, நாட்டிய மயிலுக்கு இம்முறை தான் தோற்றியுள்ளேன். பாடசாலை, பல்கலைக்கழகம் யாவற்றிலும் பங்குபற்றும் போது குழுவாகவே பங்குபற்றியுள்ளேன். இதில் போட்டிக்காக பங்குபற்றும் போது பதட்டமாகவேதான் இருந்தது.

எனது பெற்றோர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள் அனைவருமே எனக்குத் துணையாக இருந்தார்கள்.

இப்போட்டியில் தமிழ் பதவர்ணம் தெரிவுசெய்ய வேண்டும். 20 தொடக்கம் 25 வரையான நிமிடங்கள் வரை நடனத்திற்கான நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது.

பக்க வாத்தியக் கலைஞர்களை நாங்கள் ஒழுங்கு செய்ய வேண்டும். இது தான் போட்டியின் விதிமுறைகள்.

இவற்றைத்தான் வேறுநிகழ்ச்சிக்கும் நாட்டியமயிலுக்கும் இடையிலுள்ள வேறுபாடாக உணர்ந்தேன்.

(22 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை வெள்ளம் வழிந்தோட வெட்டிய வாய்க்காலினால் மேட்டு நிலப் பயிர்ச் செய்கையாளர் பெரும் பாதிப்பு

தென்மராட்சி, டிசெ.18

மழை வெள்ளம் வழிந்தோட வெட்டப்பட்ட வாய்க்காலினால் நாற்பதுக்கும் மேற்பட்ட மேட்டு நிலப்பபயிர்ச் செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மட்டுவில், சந்திரபுரம், உப்புருவில் குளம் மழைக்கு முன்னர் புனரமைக்கப்பட்ட போது வெள்ளம் வழிந்தோடும் வகையில் வாய்க்காலும் புனரமைக்கப்பட்டது. வாய்க்கால் செல்லும் வழியில் வாகனங்கள் செல்லும் பாதையும் இருந்தது. வாய்க்கால் புனரமைக்கப்பட்ட வேளையில் பாதை இருந்த பகுதியும் ஆழமாக்கப்பட்டது.

இதனால் நூற்றுக்கணக்கான ஏக்கர் நெல் வயல்களுக்கு வாகனங்களில் விவசாயப் பொருள்கள் எதுவும் கொண்டு செல்ல முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. வாகனங்களில் கொண்டு வரப்படும் விவசாயப் பொருள்களை சுமார் ஒரு மைல் தூரத்துக்குத் தூக்கிச் செல்ல வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

தற்போது அப்பகுதி மேட்டு நிலத்தில் கத்தரிக்கன்றுகள் நடுகை செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இங்கு விளைவிக்கப்படும் கத்தரிக்காய் குடாநாட்டின் பல சந்தைகளுக்கு எடுத்து செல்லப்படுவது குறிப்பிடத்தக்கது.

ஆழமாக்கப்பட்ட பாதையில் மதகு அமைக்கப்படுமென உரிய அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்ட போதிலும் மதகு இது வரை அமைக்கப்படவில்லை. இந்த மேட்டு நிலத்துக்குச் செல்லக் கூடிய வேறு பாதையும் இல்லை. மதகு அமைப்பதின் அவசியத்தைச் சுட்டிக்காட்டிய விவசாயிகள் விரைவில் மதகினை அமைத்து உதவுமாறு உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-207)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## உதவி...



ஊக்குவிப்பு: சமூக சேவைகள் அமைச்சு ஒதுக்கிய நிதியில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட கதிரைகள், தையல் இயந்திரங்கள் கொக்குவில் பிடாரி அம்பாள் கோயில் சனசமூக நிலையம் இந்து இளைஞர் மன்றம், கோண்டாவில் வளர் பிறை மாதர் அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டன.
நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அவற்றை வழங்குகிறார். (7)

## வாதரவத்தை ஊடான இ.போ.ச. சேவை நிறுத்தப்பட்டதால் மக்கள் சிரமத்தில்

நாவற்குழி, டிசெ.18

சாவகச்சேரி, சங்கத்தானை வழித் தடத்தில் ஈடுபடும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்கள் கடந்த 3 மாதகாலமாக வாதரவத்தை ஊடான சேவையை வழங்குவதில்லையென இந்தப் பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். இந்த வருட ஆரம்பத்தில் இக் கிராமம் ஊடாக ஆரம்பிக்கப்பட்ட பஸ் சேவையே தற்போது நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் இந்தப்பிரதேச மக்கள் சுமார் 2 கிலோ மீற்றர் தூரம் வரையும் நடந்து அல்லது அதிக கட்டணம் கொடுத்து வேறு வாகனங்களில் பயணம் செய்தே பஸ் சேவையைப் பெற வேண்டியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. புத்தூர் - மீசாலை வீதியூடாக நாளாந்தம் செல்லும் பஸ்கள் வாதரவத்தை ஊடாக வந்து செல்வது சுலபமானது என்றும் உரிய அதிகாரிகள் இது குறித்து அக்கறையற்றிருப்பதாகவும் இப் பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-121)

## அச்சுவேலி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் மக்கள்

அச்சுவேலி, டிசெ.18



அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் அச்சுவேலி - சங்கானை வீதி சந்தியில் நடத்தப்பட்டு வரும் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மழைக்கு கூட ஒதுங்குவதற்கு இடம் இல்லை என பாவனையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நிரப்பும் போது வெட்ட வெளியில் வெய்யிலில் நின்றே நிரப்ப வேண்டி இருக்கின்றது. அங்கு கடமை புரியும் பணியாளர்கள் வெய்யிலின் போது நிழல் மரவள்ளி மரத்தின் கீழ் ஒதுங்கி நின்றே எரிபொருள் நிரப்பும் பணியை மேற்கொள்கின்றனர்.

மழை நேரத்தில் வாகனங்கள் மற்றும் அதை செலுத்துவோர் மழையில் நனைந்த நிலையிலே எரிபொருளை நிரப்ப வேண்டி இருப்பதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது. வலிகாமம் இடப்பெயர்வை அடுத்து மீளக்குடியமர்ந்த காலம் தொடக்கம் இந்த அவல நிலையிலேயே எரிபொருள் நிரப்பும் நிலையம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இது தொடர்பாகப் பலநோக்கு கூட்டுறவுச் சங்க நிர்வாகமும் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் அக்கறை இல்லாமல் இருப்பது தொடர்பாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ம-11)

## 'சிதம்பர தரிசனம்' இறுவட்டு வெளியீடு

காரைநகர் கிழவன் காடு கலா மன்றத்தின் தயாரிப்பிலான 'சிதம்பர தரிசனம்' இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மேற்படி மன்றத் தலைவர் ந.சோதிநாதன் தலைமையில் காரைநகர் ஈழத்துச் சிதம்பர வசந்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்லைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், வாழ் நாள் பேராசிரியருமான பொ. பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், காரைநகர் உதவி அரச அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் ஆகியோர் கலந்து கொள்வர்.

நூலின் வெளியீட்டுரையை சங்கீத வித்துவான் பொன். ஸ்ரீராமதேவன் நிகழ்த்துவார். முதற்பிரதியை வயலின் வித்துவான் உ.இராதாகிருஷ்ணன் வழங்க கிழவன்காடு கலாமன்ற உறுப்பினர் சண்முகம் சிவஞானம் பெற்றுக்கொள்வார். தொடர்ந்து கலைஞர்கள் கௌரவிப்பு, சிறப்புப் பிரதிகள் வழங்கல் என்பன இடம்பெறும்.

கௌரவிக்கப்படும் கலைஞர்களின் விவரம் வருமாறு:-

ஸ்ரீ கோபால கிருஷ்ண பாரதியார் கீர்த்தனைகள் - பாடியவர் யாழ். பல்கலைக்கழக இசைத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் காரை. பரமேஸ்வரி கணேசன், வயலின் - இசைக்கலைமாணி கே.குகபரன், மிருதங்கம் - இசைக்கலைமாணி பி.றமணன், தவில் - லயஞான சொரூபன் பி. நர்மதன், கெஞ்சிரா - லயஞானபாலன் எஸ். செந்தில்நாதன், முகர்சிங் கலாவித்தகர் கே.நந்தகுமார், ஒலிப்பதிவு - ஸப்தமி கலையத்தைச் சேர்ந்த கே.சத்தியன் ஆகியோரே கௌரவிக்கப்படவுள்ளனர். (201)

## தடுக்கி விழுந்த குழந்தையின் கண்ணைப் பதம் பார்த்த ஆணி

தடுக்கி விழுந்த ஒரு வயது குழந்தையின் கண்ணுக்குள் பலகையில் பொருத்தியிருந்த ஆணி குத்தி காயப்படுத்தியது. இந்தச் சம்பவம் கடந்த புதன் கிழமை பளை நகரப் பகுதியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ஒரு வயதான சுதாகரன் கௌசிகன் என்னும் குழந்தையின் கண்ணில் ஆணி ஏறி காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிசிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ம-207)

## அச்சுவேலி வைத்தியசாலை வீதியோரம் கழிவுகள் கொட்டப்படுவதாக விசனம்

அச்சுவேலி, டிசெ.12



அச்சுவேலி பிரதேச வைத்தியசாலைக்கு முன்பாகச் செல்லும் ஆஸ்பத்திரி வீதியோரத்தில் பிரசவ விடுதிக்கு அருகாமையில் கழிவுப் பொருள்கள் பொதுமக்களால் கொட்டப்படுவதால் அப்பகுதிகளில் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குப்பை, பொலித்தீன், இறந்த மிருகங்கள் உள்ளிட்ட கழிவுப் பொருள்கள் வைத்தியசாலை வீதியோரத்தில் பெருமளவில் கொட்டப்படுவதால் பிரசவ விடுதியில் தங்கியிருக்கும் கர்ப்பிணித் தாய்மாரும் அப்பகுதியில் குடியிருக்கும் பொது மக்களும் பெருமளவில் சிரமங்களுக்கு உள்ளாவதாகக் கூறப்படுகின்றது.

வீதியோரத்தில் பற்றை வளர்ந்து காடாகக் காணப்படுவதும் அதனுடன் சேர்ந்து பொது மக்கள் கழிவுப் பொருள்களை கொட்டுவதும் நுளம்புப் பெருக்கத்துக்குச் சாதகமாக இருப்பதோடு பொதுச் சுகாதாரத்துக்கு கேடு விளைவிப்பதாக உள்ளது. இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தவில்லை எனவும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சுகாதார சீர்கேடு தொடர்பாக அருகில் இருக்கும் குடும்பங்கள் பிரதேச சபையின் உப அலுவலகத்தில் முறையீடு செய்ததோடு காணி உரிமையாளர்களின் கவனத்துக்கு கொண்டு வந்த போதிலும் இதுவரை பயன் ஏதும் கிடைக்கவில்லை. நாளாந்தம் கழிவுகள் பெருமளவில் கொட்டப்படுவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது. [illegible]

## வீடமைக்க நிதியுதவி

யாழ்ப்பாணம்,டிசெ.18

காக்கைதீவு ஜே -133 கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட ஆறு பயனாளிகளுக்கு யு.என்.டி.பி. நிறுவனத்தின் நிதியுதவியுடன் நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

சம்பந்தர் யோகேந்திரன், மூர்த்தி சுரேஸ்குமார், முத்துலிங்கம் யோகேஸ்வரன் தங்கவேலு மாணிக்கராசா, ஆறுமுகம் கோவிந்த ராசா ஆகிய ஆறு பயனாளிகளுக்கு இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது. (204-313)

## ஆக்கத்திறன் போட்டியில் வெற்றியீட்டியோருக்கு பரிசில் வழங்கல்

பருத்தித்துறை, டிசெ. 18

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சினால் அரச ஊழியர்களுக்கிடையே நடத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான விருது, பரிசில் மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 23 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு கொழும்பு தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர் டி.பி.எக்கநாயக்கா தலைமையில் நடைபெறவுள்ளது. [illegible]

## மணிவாசகர் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு

காரைநகர் மணிவாசகர் சபையின் ஏற்பாட்டில் ஈழத்துச் சிதம்பர ஆலய வசந்த மண்டபத்தில் 56 ஆவது ஆண்டு மணிவாசகர் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் "சைவத்திருமுறைகளின் பெருமை" என்னும் தலைப்பில் சிவத்திரு முருகு இராமலிங்கமும் "கயிலை மாமலை மேவிய கடலே" என்னும் தலைப்பில் சிவத்திரு க.பாலசுப்பிரமணியமும் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளனர்.

இந் நிகழ்வில் பண்ணிசை, மனனம், பேச்சுப் போட்டிகளில் முதல் ஐந்த இடங்களில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்படும். (204-313)

## இராமாவில் நலன்புரி நிலையத்திலுள்ள பரீட்சார்த்திகளுக்கு இலவச பஸ் சேவை

பருத்தித்துறை, டிசெ.18

கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மாணவர்கள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஜி.சீ.ஈ. சாதாரண தர பரீட்சைக்கு வடமராட்சியிலுள்ள பரீட்சை நிலையங்களுக்குச் சென்று தோற்றுவதற்காக விசேட இலவச போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இந்தப் பரீட்சைக்கு மேற்படி நலன்புரி நிலையத்திலிருந்து 26 மாணவர்கள் தோற்றுகின்றனர். இவர்களுக்கான பரீட்சை நிலையங்கள் வடமராட்சியிலுள்ள தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, அம்பன் அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ளன. அந்தப் பாடசாலைகளின் மூலம் மேற்படி மாணவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்தனர்.

இந்த மாணவர்களின் போக்குவரத்துச் சிரமம் குறித்து வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, தென்மராட்சி பிரதேச செயலர் ஊடாக யாழ் அரசாங்க அதிபரின் கவனத்தின் கீழ்க் கொண்டுவந்ததையடுத்து இவர்களுக்கான இலவச போக்குவரத்துச் சேவை இ.போ.ச கோண்டாவில் சபையினால் தினமும் நடத்தப்பட்டு வருகின்றது. (201-190)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிட்டனில் உயர்கல்வி பெற யாழ்ப்பாணத்தில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,டிசெ.18

பிரிட்டனில் உயர் கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்களின் நலன் கருதி கொழும்பு IBT நிறுவனத்தினால் யாழ்.நகரில் இன்று சனிக்கிழமை பிரித்தானியாவில் உயர்கல்வித் தொடர்பான இலவசக் கருத்தரங்கொன்று நடத்தப் படவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் மாணவர்கள் தெரிவுசெய்யக் கூடிய பாடநெறிகள், விசாவினை இலகுவில் பெற்றுக்கொள்ளக்கூடிய நடைமுறைகள் மற்றும் பிரித்தானிய கல்லூரிகளுக்கான அனுமதிகள் தொடர்பான விரிவான விளக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

பிரிட்டன் உயர்கல்வியில் ஆர்வமுடைய மாணவர்கள் இக்கருத்தரங்கில் கலந்துகொள்ளமுடியும். 0777113777 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுசெய்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)


### கணினி விற்பனைக்கு

P-IV, 1.7GHZ முழுமையான கணினி ஒரு வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு. விலை 15,750/= மற்றும் கணினி சம்பந்தமான Printer, UPS, Dongle, Pendrive, I-3 LapTop, I-3 Desktop, Dualcore கணினிகள் என்பனவும் மலிவு விலையில் 3 வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: Sky Computer System
162, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(டேவிட் பீரிஸ் முன்பாக) 021 222 1417.
(573431)



# 10 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



விக்னேஸ்வரன்-கலாவிநாயகி தம்பதியினரின் செல்வப் புதல்வன் **செல்வன் விதுஜன்** 16.12.2000 தனது பத்தாவது பிறந்தநாளை இன்று 18.12.2010 சனிக்கிழமை Germany யில் உள்ள Burger House hall Wei Lerbach என்னும் மண்டபத்தில் வெகு விமர்சையாக கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அத்தான் அஜந்தன், அக்காமார் றதீபா, கோபிகா, தர்ஷனா, மருமகன் திவிசன், அப்பம்மா, அப்பப்பா, அம்மம்மாமார், அம்மப்பாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், அக்காமார், அண்ணாமார், தம்பிமார், தங்கைமார், மச்சாள்மார், மச்சான்மார் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் கதிர்காமக்கந்தன் அருள் பெற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

செல்வன் விதுஜன்

தகவல்:
அம்மப்பா
நடராசா குடும்பம்.
பெருமாள் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

(107433)


## பெண்கள் மேம்பாட்டு கருத்தரங்கு நாளை

யாழ்ப்பாணம்,டிசெ.18

பெண்களின் திறன்களை மேம்பாடு செய்வது தொடர்பான கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.ப.நோ.கூ.சங்கத்தில் இடம்பெறவுள்ளது.

மகளிர் அபிவிருத்தி நிலையத் தலைவி திருமதி சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் மகளிர் அபிவிருத்தி நிறுவனப் பிரதிநிதிகள் கலந்து கொள்வர். (204-313)

## சைக்கிள் மோதி விழுந்தவர் காயம்

வடமராட்சி, டிசெ.18

கரவெட்டி விக்கினேஸ்வரா வீதியில் சைக்கிளும், சைக்கிளும் மோதிக் கொண்டதில் ஒரு சைக்கிளில் பயணம் செய்தவர் காயமடைந்தார்.

நெல்லியடி, மகாத்மா வீதியைச் சேர்ந்த இ.தேவதாஸ் என்பவரே காயமடைந்தவராவார்.

கடந்த திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் காயமடைந்தவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார். (204-236)


### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No. 1 பிறிமா புறொயிலர் குஞ்சுகள் நியாயமான விலையில் 23.12.2010 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவு செய்யவும்.
(பின்பு 100 வீதம் இறைச்சிக் கோழிகள் திருப்பி வாங்கப்படும்)

நல்லூர் பாம் சென்ரர்.
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6944



# பணிநிலை வேண்டுகை

யாழ்.நகரில் பிரபலமான நிறுவனம் ஒன்றின் விருந்தினர் விடுதிக்கு பின்வரும் பதவிகள் வெற்றிடமாக உள்ளன.

விடுதிக் காப்பாளர்

தகைமை:
★ ஆங்கில, சிங்கள அறிவு
★ இரண்டு வருடத்திற்கு குறையாத முன்அனுபவம்

பாதுகாப்பு உத்தியோகத்தர்

அரச, தனியார் நிறுவனங்களின் பாதுகாப்புச் சேவையில் இருந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 21.12.2010 செவ்வாய்க்கிழமை 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரில் வரவும்.

தொ.பே: 021 567 7602



# MBBS / MD

Lugansk State Medical University
UKRAINE உக்கிரேன் - EAST EUROPE
Recognized by SRI LANKA MEDICAL COUNCIL

With A/Ls ⟶ 6 Years

Minimum : 2C + 1S in Biology, Chemistry and Physics

எமது நிறுவனத்தின் மூலம் அனுப்பப்பட்ட St. Patrick's, St. John's College, Holy Family Convent, Jaffna College, St. Mary's College (Trinco), St. Michael's (Batticaloa) மற்றும் வவுனியா, முல்லைத்தீவு, நுவரெலியா, மாத்தளை மாணவர்கள் தற்பொழுது Ukraine ல் கல்வி கற்கின்றனர்.

www.lugmedi.com

Tel : (தமிழில்) 0777 767 818 / 0776 209887
SIC Center, 734, Hospital Road, Jaffna



# மாணவர்களே..! பெற்றோர்களே..!

## A/L இற்குப்பின் அடுத்தது என்ன....?

அனுமதி இலவசம்
தொடர்புகளுக்கு-
0214922800
0771944886

## மாபெரும் தொழில்சார் வழிகாட்டல் கருத்தரங்கு

கருத்துரை வழங்குவோர்:
நாட்டின் முன்னணி கல்வி, தொழில்சார் வல்லுனர்கள்

இடம்:
"யாழ், மத்தியகல்லூரி, பிரதான மண்டபம்."

காலம்:
20.12.2010 (திங்கள்) - பௌர்ணமி தினத்தன்று

நேரம்:
காலை 9.00 - 12.30 மணிவரை

அனுசரணை:

O/L , A/L மாணவர்களுக்கு
மாலை 3.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை



# மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



MR.S.THEVARAJAH
Administrative Officer
திரு.சி.தேவராஜா
நிர்வாக உத்தியோகத்தர்

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றி அகவை அறுபதில் ஓய்வுபெறும்

**உயர்திரு.சி.தேவராசா**

அவர்கள் பண்டாரவளை, மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, பருத்தித்துறை, தென்மராட்சி ஆகிய பிரதேச செயலகங்களில் எழுதுநர், கிளைத் தலைவர், பிரதம எழுதுநர், நிதிஉதவியாளர், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர் போன்ற அரச சேவைகளுக்கு அழகு சேர்க்கும் உன்னத பதவிகளை வகித்துக் கறைபடியாத கரங்களுடன் இன்று (18.12.2010) ஓய்வுபெறுகின்றார்.

உங்கள் சேவை மூலம்
எங்களுக்குப் பெருமை சேர்த்தீர்கள்!
நீங்கள் வகித்த பதவியும் பெருமையடைந்தது!
உங்கள்சேவை பற்றிப் பலர் கூறக் கேட்டு
எங்கள் நெஞ்சம் நிறைந்து நிற்கின்றது!
உள்ளத்தால் உயர்ந்தவராய்
நிறைவான சேவையில் மிளிர்ந்தவராய்
இல்லத்துக்கு இனிய தலைவனாய் நிமிர்ந்து நிற்கும்
நல்வழிகாட்டியே-மங்காப் புகழுடன்
உங்கள் வாழ்வு என்றும் நிலைத்து நிற்கட்டும்!
ஆண்டவன் அருளாசியும், எங்களின் வாழ்த்துக்களும்
அதற்கு உறுதுணையாகட்டும்!

மனைவி, [illegible], மூத்தமகன் [illegible] (லண்டன்), இளையமகன் [illegible] ([illegible]), மகள் [illegible], மருமகன் [illegible] ([illegible]), மருமகள் [illegible] (லண்டன்), பேரன் [illegible] (லண்டன்), பேர்த்தி [illegible].

கடற்கரை வீதி,
[illegible]துறை.

(105463)


noolaham.org | aavanaham.org

# மழையின்மையால் அம்பாறை மாவட்ட விவசாயிகள் கவலை

அம்பாறை, டிசெ.18

அம்பாறை மாவட்டத்தின் சில பகுதிகளில் கடந்த சில வாரங்களாக மழை பெய்யவில்லை. இதனால் மேட்டு நில வேளாண்மைச் செய்கை பாதிப்படைந்துள்ளது என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மழையை நம்பி மேற்கொள்ளப்பட்ட நூற்றுக்கணக்கான ஏக்கர் நெற் பயிர்ச்செய்கை கருகி அழியும் அபாயம் உருவாகியுள்ளது. இதனால் பாரிய நஷ்டம் விளையக்கூடும் என விவசாயிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இறக்காமம், வாங்காமம், குடிவில், ஹிங்குரானை, நல்லதண்ணிமலை ஆகிய பகுதிகளில் வேளாண்மைக்குத் தேவையான மழை பெய்யவில்லை.

இதனால் வயல்களில் ஆங்காங்கே பயிர்கள் கருகியுள்ளன. மழைதொடர்ந்தும் பெய்யாவிட்டால் பயிர்கள் அழிந்துவிடும் என்றும் அவர்கள் கவலை தெரிவிக்கிறார்கள்.

இதேவேளை, சோளம், கத்தரி, வெண்டி ஆகியவற்றைப் பயிரிடுவோரும் மழை இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.




மழையின்மையால் எதிர்பார்க்கும் அறுவடையை அடைய முடியாது போகலாம் என்றும் இவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

அம்பாறை மாவட்டத்தில் குறிப்பாக இறக்காமம் பிரதேசத்தில் கடந்த மூன்று வாரங்களாக விவசாயத்துக்குத் தேவையான மழை பெய்யவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ளி)

## மூதூர் வைத்தியசாலைக்கு புதிய அம்புலன்ஸ்

மூதூர், டிசெ.18

மூதூர் தள வைத்தியசாலைக்குப் புதிய அம்புலன்ஸ் வாகனம் ஒன்று, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைரினால் வழங்கப்பட்டுள்ளது. மூதூர் தள வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் எம்.ஏ.எம். சுக்ரி தலைமையில் இடம்பெற்ற பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்ட நிகழ்வில் சுகாதார அமைச்சர் எம்.எஸ். சுபைர் இதனை ஒப்படைத்தார்.

மூதூர் தள வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்படவிருக்கும் மூன்று மாடி நிர்வாகக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டல், வைத்தியர் விடுதி திறப்பு, மரநடுகை ஆகியவை உள்ளிட்ட பல நிகழ்வுகள் இதில் இடம்பெற்றன.

கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான ஆரியவதி கலப்பதி, அபுல்பைதா ராசீக் பரீத், பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் திருமதி ஈ.ஜி.ஞானகுணாளன் ஆகியோர் உட்படப் பல உயர் அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டனர். (எ- 229)

## பண்டிகைக்கால வர்த்தகம் திருமலையில்

நத்தார், புதுவருடப் பண்டிகைகளையொட்டி திருகோணமலையில் நடைபாதை வியாபாரம் களைகட்ட ஆரம்பித்துள்ளது. கடந்த இரு வாரங்களுக்கும் மேலாக திருகோணமலையில் நிலவிவந்த சீரற்ற காலநிலை மாறி தற்போது இயல்புநிலை திரும்பியுள்ளது.

தென்னிலங்கையிலிருந்து திருகோணமலைக்கு வியாபாரிகள் படையெடுத்திருக்கிறார்கள். தற்காலிக வீதியோர வியாபார ஸ்தலங்களை அமைத்து இவர்கள் தமது வர்த்தகத்தில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறார்கள். மொரட்டுவையிலிருந்து கொண்டு வரப்பட்ட பல்வேறுபட்ட தளபாட வகைகளும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. (ளி)

## திருமலை மாவட்டத்தில் சிறுவர் பாதுகாப்பு உரிமை மீறல்

### பிரதேச செயலாளர் தகவல்

திருகோணமலை, டிசெ.18

திருகோணமலையில் சுற்றுலாத்துறை வளர்ச்சியடைந்து வரும் நிலையில் சிறுவர் துஷ்பிரயோகங்களும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இம்மாவட்டத்தில் தற்சமயம் சிறுவர் பாதுகாப்பு உரிமை மீறல்கள் அதிக மாகியுள்ளன. இந் நிலையில் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களின் செயற்பாடுகள் அவசியமாகும் எனத் திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் திருமதி.ஜலதீபன் தெரிவித்தார்.

திருகோணமலை மாதுமையம்பாள் வித்தியாலயத்தில் சனிக்கிழமை இடம்பெற்ற மனித உரிமைகள் தின நிகழ்வில் கலந்து கொண்டு, மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

சிறுவர் உரிமைச் செயற்பாடுகளை நீங்கள் தொடர்ந்து முன்னெடுங்கள். அதனை எவரேனும் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டால் உடன் எமது செயலகத்தை நாடுங்கள். நான் அதற்கான ஏற்பாடுகளையும், உதவிகளையும் செய்து தருவேன் என உறுதியளித்தார். (ளி)

## வாழைச்சேனை சந்தையில் கொள்ளை சந்தேகநபர் பொலிஸாரினால் கைது

மட்டக்களப்பு, டிசெ.18

மட்டக்களப்பு வாழைச்சேனையில் பொதுச் சந்தைப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் நான்கு கடந்த வாரம் உடைக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டமை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொது மக்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட மேற்படி சந்தேக நபரிடம் தொடர்ந்தும் விசாரணை கள் நடத்தப்பட்டு வருகின்றன என்றும் பொலிஸார் மேலும் கூறினர். (ளி)

## சமாதானம் ஏற்பட மனமாற்றம் அவசியம்

### கிழக்கு மாகாண பிரதம செயலாளர் உரை

திருகோணமலை, டிசெ.18

ஒற்றுமையைத் தொலைத்துவிட்ட நாம் சமாதானத்தைத் தேடிக்கொண்டிருக்கின்றோம். 30 வருட கால யுத்தத்தில் இருந்த நாங்கள் இப்போது சமாதானம் பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றோம். இது எப்போது கிடைக்கும் என்று எம்மால் உறுதியாகக் கூறிவிட முடியாது. சமாதானம் ஏற்பட மனங்களில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்று கிழக்கு மாகாண பிரதம செயலாளர் வே.பொ. பாலசிங்கம் தெரிவித்தார்.

திருகோணமலை வலயக் கல்வி அலுவலகம் நடத்திய சமாதான கலாசார விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் சி.தண்டாயு தபாணி, ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அதிபர் மா.இராசரெத்தினம், மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் அ.விஜயானந்தமூர்த்தி, திருகோணமலை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எவ்.ஜி. லூயிஸ், சிரேஷ்ட ஊடகவியலாளர் சி.குருநாதன் ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். இதன்போது 'நித்திலம்' என்னும் சஞ்சிகையும் வெளியிடப்பட்டது. (ளி)

## ஆபாசக்காட்சிகளைப் பதிவிறக்கம் செய்த நான்கு பேருக்கு கண்டி நீதிமன்றம் அபராதம்

கண்டி, டிசெ.18

இணையத்தளங்களில் ஆபாசக் காட்சிகளைப் பதிவிறக்கம் செய்து வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கண்டி நகரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட நால்வருக்கு தலா 2,500 ரூபா வீதம் 10,000 ரூபா அபராதமாக விதிக்கப்பட்டது.

ஆபாச இணைய தளங்களிலிருந்து காட்சிகளைப் பதிவிறக்கம் செய்தல், பதி வேற்றம் செய்தல் போன்றவற்றைக் கண்காணிக்கவென கண்டியில் விசேட பொலிஸ் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினர் கண்டி நகரப் பகுதியில் உள்ள கணினி திருத்துமிடங்கள் மற்றும் கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையங்கள், பழுது பார்க்குமிடங்கள் என்பவற்றை முற்றுகையிட்டு சோதனைகளை மேற்கொண்டு வந்தனர்.




மேற்படி சோதனை நடவடிக்கையின்போது ஆபாசக் காட்சிகளைப் பதிவிறக்கம் செய்து வைத்திருந்த மேற்படி நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ளி)

## பிரஜாசக்தி நிலையங்களின் பேரில் பணமோசடி; நோர்வூட்டில் முகவர் நிலையத்தில் மூவர் கைது

மஸ்கெலியா, டிச.18

சௌமியமூர்த்தி தொண்டமான் நிதியத்தினூடாக இயங்கி வரும் பிரஜாசக்தி நிலையங்களில் வேலைவாய்ப்பு பெற்றுத் தரப்படும் எனக்கூறிப் பலரிடம் பணமோசடி செய்துவந்தனர் என்ற சந்தேகத்தில் நோர்வூட் பொலிஸாரால் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரஜாசக்தி நிறுவன அதிகாரி தெரிவித்த முறைப்பாட்டுக்கமையவே சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்விவகாரம் தொடர்பில் மேலும்தெரியவந்தவைவருமாறு:-

சந்தேகநபர்கள் கடந்த ஏழாம் திகதி நோர்வூட் நகரில் மேற்படி நிறுவனத்தின் பெயரில் காரியாலயம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர். இங்கு, இலங்கையில் பிரசித்தி பெற்ற தொலைக்காட்சி நிறுவனங்கள் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் போன்ற பெரிய நிறுவனங்களில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தரப்படும் எனக் கூறி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் புகைப் படங்களுடனானபிரசுரங்களையும் அச்சிட்டு விநியோகித்துள்ளனர்.

அதில், குறிப்பிட்ட நிறுவனங்களில் தொழில்பயிற்சி பெறும் பொருட்டு கட்டணம் அறவிடப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்ததுடன் பலரிடம் பயிற்சிக்கு எனக்கூறி 5,000 ரூபா முதல் 25,000 ரூபாவரை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான முறைப்பாடு கிடைத்தவுடன் பொலிஸார் புதன்கிழமை மாலை நோர்வூட் நகரில் திறக்கப்பட்ட காரியாலயத்தை முற்றுகையிட்டு சந்தேகநபர்கள் மூவரையும் கைதுசெய்தனர்.

சந்தேகநபர்கள் ஹற்றன் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படவுள்ளனர் - என நோர்வூட் பொலிஸ் நிலைய அதிகாரி தெரிவித்தார்.

## ஹற்றன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் தமிழ்மொழிமூல முன்பள்ளி டிப்ளோமா பாடநெறி

ஹற்றன், டிசெ.18

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான திறந்த பல்கலைக்கழக கல்விப்பீடத்தின் முன்பள்ளி ஆசிரியர் பயிற்சிப் பாடநெறியின் ஆரம்ப வைபவம் ஹற்றன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் நாளை நடைபெறவுள்ளது.

இவ்வைபவத்தில் பிரதம அதிதிகளாக கொழும்பு சமூக, விஞ்ஞானபீடத் தலைவர் கலாநிதி சந்திரபோஸ், திறந்த பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் தனராஜ், சிரேஷ்ட விரிவுரையாளரும், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகக் கல்விப்பீடத்தின் முன்பிள்ளைப் பருவமற்றும்ஆரம்ப கல்வித்துறையின் தலைவர் முகுந்தன், பிரிடோ நிறுவனத்தின் தலைவர் மைக்கல் ஜோக்கிம், வெளிக்கள இணைப்பாளர் சந்திரசேகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்ச்சித் தொடர்பாளராக சிரேஷ்ட விரிவுரையாளர் முகுந்தன் செயற்படவுள்ளார்.

இது தொடர்பில் பிரிடோ நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

பெருந்தோட்டப் பகுதிகளில் கடந்த ஒரு தசாப்த காலத்துக்கும் மேலாக முன்பள்ளிகள் நடத்தப்பட்டு வந்திருந்தாலும், முன்பள்ளி ஆசிரியர்களுக்கென தமிழ் மொழியில் கற்கை ஆரம்பிக்கப் படுவது இதுவே முதன்முறையாகும்.

மேற்படி கற்கையைப் பெருந்தோட்டத்தில் பணியாற்றுகின்ற முன்பள்ளி ஆசிரியர்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடன், இப் பயிற்சி நெறியை தமிழ் மொழியில் - மலையக திறந்த பல்கலைக்கழக கற்கை நிலையங்களில் ஆரம்பிக்கவேண்டும் என்ற கோரிக்கையை பிரிடோ நிறுவனம்வலியுறுத்தி வந்துள்ளது.

இதன் விளைவாக எதிர்காலத்தில் பெருந்தோட்டப் பகுதியில் பணியாற்றும் முன்பள்ளி ஆசிரியர்களின் கற்பித்தல் தரத்தை அதிகரிப் பதற்கும், அவர்களுக்கு அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வது மலையகச் சமூகத்தின் பொறுப்பாகும். இப்பயிற்சி நெறியின் மூலமாக பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள அனைத்து ஆசிரியர்களும், எதிர்காலத்தில் முன்பள்ளி ஆசிரியர்களாக தொழில் பெற விரும்புகின்றவர்களும், பயன்பெற முடியும்.

எதிர்காலத்தில் திறந்த பல்கலைக்கழகத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்படும் போது விழிப்புடன் செயற்பட்டு பயனடைவது அவசியம் என்பதை பிரிடோ நிறுவனம் வலியுறுத்துகின்றது.

- இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ளி)

## சிவனொளிபாதமலையின் படிக்கட்டுகள் புனரமைப்பு

நுவரெலியா மாவட்ட அரச அதிபர் டி.பி.ஜி. குமாரசிறியின் பணிப்புரையின் கீழ் சிவனொளி பாதமலைக்குச் செல்லும் படிக்கட்டுகளைச் செப்பனிடும் பணிகள் கடந்த ஆறுமாதங்களாக சிவில் பாதுகாப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

படிகளைச் செப்பனிடும் வேலைகள் கடந்த 14 ஆம் திகதியுடன் நிறைவு பெற்றுள்ளன.

இந்தப் பணியில் சிரத்தையுடன் ஈடுபட்டவர்களை, சியத்தலகங்குல பிரிவு கிராம சேவையாளர் மற்றும் நல்லதண்ணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் இணைந்து பாராட்டியதுடன், அவர்களுக்கு விசேடமாக விருந்துபசாரம் ஒன்றையும் நடத்தினர். சிவனொளிபாத மலைக்கு செல்லும் படிகள் செப்பனிடப்பட்டுள்ளதால் யாத்திரிகர்கள் இலகுவாக் மலை ஏறமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் திருமுகம்

## வடமராட்சி மக்களுக்கு விடிவே கிடையாதா?

தீர்க்க தரிசனமற்ற முறையில் திட்டமிடப்பட்ட நெடுஞ்சாலைகளை அகலிக்கும் திட்டங்களினால் யாருக்கும் என்ன பயன்?

ஏறக்குறைய நூறு வருடங்கள் பழைமையான பருத்தித்துறை- யாழ்ப்பாணம் நெடுஞ்சாலையை (மந்திகை- நெல்லியடி-ஆவரங்கால் ஊடாக) அகலமாக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு முழுமையாக நிறைவேற்றப்படாமல் அரைகுறையாகவே முடித்துவைக்க முடிவெடுக்கப்பட்டதாக அறிந்து மன வருத்தம் அடைந்தேன். இந்த நடவடிக்கையானது முக்கியமாக வடமராட்சி மக்களை வெகுவாகவே பாதிப்படையச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

அபிவிருத்திக்காக அகலமாக்கல் என்ற போர்வையில் வெட்டவெளிகளையும், தோட்டவெளிகளையும் ஊடறுக்கும் வீதிகளை முன்னுரிமை அடிப்படையில் அகலமாக்க முற்பட்டமை தீர்க்கதரிசனமற்ற முடிவாகவே கருதவேண்டியுள்ளது.

இந்த மாதிரியான பெரும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது நகர மத்தியில்(Town) ஊடறுக்கும் சாலைகளை பருத்தித்துறைப் பக்கமிருந்தும்- யாழ்ப்பாணப் பக்கமிருந்தும் ஒரே சமயத்தில் அகலமாக்குதலை ஆரம்பித்து இருபக்கங்களில் இருந்தும் வேலைகளை முன்னேற்றம் பெறச் செய்து பணிகளை இடைநடுவில் சந்திக்கச் செய்து முழுமைபெறச் செய்தலே நடைமுறையிலுள்ள வழக்கமென நம்புகிறேன். இதனால் முக்கியமான நகரங்கள் பயன் பெறும். நிதி நெருக்கடி,பொருள்கள் பற்றாக்குறை ஏற்பட நேர்ந்தாலும் மிகுதி வேலைகளை இரண்டாம் கட்டமாக நிறைவேற்ற வாய்ப்புண்டு. முக்கியமாக வல்லைவெளிகள், தோட்ட வெளிகளை ஊடறுக்கும் வீதிகளை இரண்டாவது கட்டத்தில் முன்னெடுத்திருக்கலாம்.

அதிவிஷேசமாக பருத்தித்துறை- மந்திகை வரையிலான வீதியில் (3கீ.மீ) தொழில் ஸ்தாபன உரிமையாளர்கள், வீட்டுச் சொந்தக்காரர்கள், வீதிப் பாவனையாளர்கள், பாரவூர்திப் பாவனையாளர்கள், விலை மதிக்க முடியாத தங்களுடைய சொந்தக் காணிகளை அகலமாக்கும் தேசிய திட்டத்துக்காகத் தியாகம் செய்தவர்கள் வெகுவாகவே குழப்பமடைந்திருக்கிறார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக பருத்தித்துறை நகரில் புதிய விற்பனை அங்காடிகள், புதிய பொதுச்சந்தை, நவீன துறைமுகம், மீன்பிடித்துறைமுகம் முதலான வசதிகள் செய்யப்பட இருக்கின்றன. இதற்கேற்ற முறையில் நெடுஞ்சாலைகள்,வீதிகள் அகலமாக்கப்படாமல் தவிர்க்கப்பட்டால், நகர அபிவிருத்திக்காகத் திட்டமிடப்பட்ட இலக்குகளை சீக்கிரமாக அடைய முடியாமல் போக இடமுண்டு. தற்சமயம் சிதிலமடைந்த இடிபாடுகள் மத்தியில் பருத்தித்துறை நகரம் பொலிவிழந்து யுத்த பூமிபோல் காட்சியளிக்கிறது. அகலிக்கும் பணிகளை திடீரென்று இடைநிறுத்தியதனால் வந்த வினைதான் இது.

இந்த அவலங்களைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் மேலான கவனத்திற்கு கொண்டு வந்து அவர்களின் துரித நடவடிக்கைக்காக மிகவும் தாழ்மையுடன் சமர்ப்பணம் செய்கிறோம்.

*வே.கஜதரன், பருத்தித்துறை*

## சமுர்த்தி நிவாரணமும் மக்களும்

சமுர்த்தி நிவாரணம் பெறுபவர்களில் நானும் ஒருவன். ஆகையால் கடந்த 08.12.2010 அன்று நிவாரணம் பெறும் நோக்குடன் தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை (E-1) இற்குச் சென்றேன். அங்குள்ள முகாமையாளரால் கடந்த ஒக்டோபர், நவம்பர் மாத நிவாரணம் 30.11.2010 அன்றுடன் கொடுத்து முடிக்கப்பட்டதாகவும் ஒன்றும் செய்ய முடியாது என்றும் கூறினார். உடனடியாக பொதுமுகாமையாளருடன் தொடர்பு கொண்டபோது தன்னால் இயன்றவரை முயற்சி செய்து சரிவராது போகவே அவரும் கைவிரித்தார். பின்பு சமுர்த்தி உத்தியோகத்தரிடம் தொடர்புகொண்ட போது சாவகச்சேரியில் உள்ள பிரதேச செயலகத்திற்குச் சென்று இதுபற்றிக் கூறிக் கதைக்குமாறு மிக அன்பாகவும் பண்பாகவும் அறிவுரை கூறினார். அதற்கமைய சாவகச்சேரியில் உள்ள பிரதேச செயலகம் நோக்கி ஓடினேன். அங்குள்ள சமுர்த்தி உத்தியோகத்தரிடம் இதுபற்றி கூறிய போது தமக்குரிய மிடுக்கான குணத்துடன் எமக்கு கூட்டம் இருக்கு. இப்ப கதைக்க இயலாதென்றும் கூறப் பட்டது. சமுர்த்தி அதிகாரிகள் தான் நினைத்த நேரங்களில் நிவாரணத்தை திடீர் திடீரென்று வழங்குவதால் என் போன்ற பாமரர்களுக்குத் தெரிவதற்கு வாய்ப்பு இல்லை. ஆகவே இனியாவது சமுர்த்தி நிவாரணம் வழங்கும் போது ஒரு முன்னறிவித்தலைப் பத்திரிகை வாயிலாகவோ அல்லது ஒரு குறிப்பிட்ட மாதத்தில் குறிப்பிட்ட திகதியிலோ இதை வழங்கினால் மக்களுக்குத் தெரிய வாய்ப்பு இருக்கும் அல்லவா? சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதைச் செய்வார்களா? அவர்களுக்கு இது சமர்ப்பணம்.

*பாதிக்கப்பட்டவன்*

## கல்வி உயர் அதிகாரிகளுக்கு ஒரு விண்ணப்பம்

வன்னிப் பகுதி, தீவக வலயங்கள் போன்ற கஷ்ட, அதிகஷ்டப் பிரதேசங்களில் கணித, விஞ்ஞான, ஆங்கில பாட ஆசிரிய வெற்றிடங்கள் இருப்பதாகப் பத்திரிகை வாயிலாகவும் குறித்த பிரதேசங்களில் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் மூலமாகவும் நாம் அறியக் கூடியதாக இருக்கின்றது.

எனவே தயவு செய்து ஒவ்வொரு பாடசாலைக்குமான ஆசிரிய ஆளணி வெற்றிடங்களை ஆராய்ந்து போட்டிப் பரீட்சை ஒன்றினை வைத்து அல்லது மிக விரைவில் அதாவது எதிர்வரும் 2011 முற்பகுதிக்குள் வடமாகாண சபையின் பொதுச் சேவைப் பதவி வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை நியமனம் செய்வதற்கான போட்டிப் பரீட்சையின் முடிவுகளைப் பயன்படுத்தியும் பல்கலைக்கழகத்தினை விட்டு வெளியேறிய காலத்தின் அடிப்படையிலும் நியமனம் வழங்க வழிவகை செய்யுமாறு மிகவும் தயவுடன் வேண்டுகின்றோம்.

**வேலையில்லாத வி[illegible]தாரிகள்**

## மங்கள விடியல்

பொங்கர வணிந்த புண்ணிய மூர்த்தி
மங்கையர்க் கருளும் மார்கழித் திங்களில்
செகமது குளிர்ந்து சில்லென இருக்கும்
புகாரது பரவி புகைனயாய்த் தோன்றும்
சேவல் கூவ கீழ்வானம் சிவந்து ஒளிரும்
ஆவின் கன்றுகள் ஆசையாய் அழைக்கும்
காலை வேளை காகங்கள் கரைய
வேளைக் கெழுந்து நன்னீர் ஆடுவர்
பூதி யணிந்து ஆனந்தம் அடைவர்
வீதி வழியாய் ஆதியைப் பாடுவர்
விண்ணில் தாரகை மின்னி ஒளிக்க
சின்னங்கள் சிலம்ப சிவனை நினைப்பவர்
மணியொலிக்க சித்தம்ம கிழ்ந்துசிவனை ஓதுவர்
கண்ணீர் மல்கிக் கசிந்து உருகுவார்
உன்கையில் பிள்ளை உனக்கே அடைக்கல
மென்றே யாவரும் மகேசனை தொழுவார்
அழகிய கலசத்தில் அன்பால் கொண்டு
பலவித மலர்களும் பழங்களும் கொண்டு
மங்கள வாத்தியம் மனதைக் கரைக்க
சங்கம் முழங்க வேதம் ஒலிக்க
தோத்திரப் பாடல் தொலைவில் கேட்க
சாத்திரம் சொன்ன சாந்திகள் நடக்க
பக்திப் பாடல் பரவசம் ஊட்ட
பக்கம் எல்லாம் பக்தர்கள் பரபரக்க
ஓமப் புகையொடு தூபமும் மணக்கும்
சாமம் விரும்பும் சங்கரன் கோவிலேகி
கன்னியர் எல்லாம் நற் கணவரை வேண்டி
உன்னடியார் எம் கணவர் ஆவாரென வேண்டும்
பங்கஜம் மலரும் பகலவன் எழுந்திடும்
மங்கள விடியல் மார்கழி நோன்பிலே

*பா.பாலச்சந்திரன், மயிலணி.*

## ஊருக்காக உழைத்தவர்



சமூகக் கரிசனையுள்ள மக்களின் சிந்தனையும் செயற்பாடும் அவர்களை வேறுபடுத்தி ஊருக்காக, நாட்டுக்காக உழைத்த உத்தமர் என வகைப்படுத்தி இனங்காட்டி உள்ளமை பிரதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் வரலாற்றுப் பதிவாக உள்ளன.

இந்த வகையில் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் சைவ சமய மேம்பாட்டிற்கும் கலை, கலாசார வளர்ச்சிக்கும் தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்துச் செயற்பட்டவர்களின் வரிசையில் காலஞ்சென்ற கணவதிப்பிள்ளை கயிலாயநாதனும் இடம் பெறுகின்றார்.

இவர் மலேசியா நாட்டில் 'ஈபோ' என்னும் இடத்தில் கணவதிப்பிள்ளை - நாகம்மா தம்பதியினருக்கு 1922 ஆம் வருடம் 4ஆம் மாதம் 8 ஆம் திகதி புத்திரனாகத் தோன்றினார். அவர் சிறுவயதிலிருக்கும் பொழுதே அவரின் தந்தை, தாயுடன் வட்டுக்கோட்டைக்கு வந்தார். அவரின் குழந்தைப் பருவ வளர்ச்சியில், சமயாசார சீலனாகவும், கல்விமானாகவும் விளங்கினார்.

இவர் வட்டு. கார்த்திகேய வித்தியாசாலையிலும், யாழ்ப்பாணக் கல்லூரியிலும், பின் அவரின் தாய் மாமனின் உதவியுடன் கோலாம்பூரிலும் கல்வி கற்றார். கேம்பிறிட்ஜ் சீனியர் பரீட்சையில் சித்தியடைந்த பின் வட்டுக்கோட்டைக்கு மீண்டும் வந்தார். அவரின் அறிவு,கலை, பண்பாட்டை வளர்க்க வேண்டும் என்னும் மன உந்துதலால் சில ஆண்டுகள் செய்த அரச சேவையைத் துறந்து உயர் கல்விக்காக இந்தியா சென்றார். அங்கு அவர் பெற்ற கல்வி B.A பட்டத்தை அவருக்குப் பெற்றுக்கொடுத்தது. அவர் இந்தியாவில் கல்வி கற்றுக் கொண்டிருந்த வேளை டாக்டர் மு.வரதராசன், கீ.வா.ஜெகநாதன் போன்றோரின் தொடர்பு தமிழ்மொழி, கலை, கலாசாரம் போன்ற துறைகளில் உயர்தர ஆளுமையைப் பெற அவருக்கு உதவின.

### நீத்தார் நயப்புரை

அவர் தன் துறைசார்ந்த தொழிலாக ஆசிரியத் தொழிலை விருப்புடன் 1949இல் ஏற்றார். ஆசிரியத் தொழிலில் உபஅதிபராகவும் அதிபராகவும் வட்டு. இந்துக்கல்லூரி, யாழ்ரன் கல்லூரி, மானிப்பாய் மெமோரியல் கல்லூரி ஆகியவற்றில் சேவை செய்தார். இவரின் சிறந்த பணியைக்கண்டு கல்வி நிர்வாகம் இவரை 1976இல் பலாலி அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு ஆங்கில விரிவுரையாளராக நியமித்தது.

ஏககாலத்தில் 1962ஆம் ஆண்டு அவரின் ஊராகிய வட்டுக்கோட்டையில் 'கலாநிலையம்' என்னும் நிறுவனத்தை நிறுவிப் பண்ணிசை, சங்கீதம், நடனம் முதலிய வகுப்புக்களை பல அறிஞர்களைத் தருவித்து நடத்தினார். 1977இல் விரிவுரையாளர் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பின் கலாநிலையத்தைச் செவ்வனே நடத்தி 1988இல் வெள்ளிவிழாவை மிகவும் விமரிசையாகக் கொண்டாடினார். 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்ற நம்பிக்கையோடு பல நூல்களை எழுதியும், நூல்களுக்கு ஆய்வுரை எழுதியும் பணி செய்தார். அவரால் ஆக்கி வெளியிடப்பட்ட 'தமிழ்மொழி விளக்கம்' என்னும் நூல் மிகவும் பிரபலமான பாடவிதான நூலாக அமைந்தது.

இவரின் சமூக உணர்வுகளைத் தூண்டும் கருவியாக இவர் மாணவ காலத்திலும் இளைஞர் பருவத்திலும் அங்கம் வகித்து செயற்பட்ட வட்டு. இளைஞர் உடல், உளவிருத்திச் சங்கம் அமைந்தது. இந்தச் சங்கம் க.கயிலாயநாதனை மட்டுமல்ல ஏழைகளின் பங்காளனாகவும் இந்த நாட்டு உழைக்கும் மக்களின் தோழனாகவும் செயற்பட்டு தொழிலாளர்களின் நலனுக்கான போராட்டத்தில் உயிர் தியாகம் செய்த வே.கந்தசாமியையும் சமூக உணர்வு படைத்த பலரையும் சமூகத்துக்கு வழங்கிய நீண்ட வரலாற்றை உடையது.

*சி.இராமச்சந்திரா மூளாய், வட்டுக்கோட்டை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணங்களை வெளியிடும் பணி தொடரும் என அசேஞ்ச் கூறுகிறார்

லண்டன், டிச. 18-

பாலியல் முறைப்பாட்டில் சிக்கி பிணையில் வெளிவந்துள்ள 'விக்கி லீக்ஸ்' இணையதள நிறுவுநர் ஜூலியன் அசேஞ்ச் (வயது-39), ஆவணங்களை வெளியிடும் தனது பணி மேலும் தொடரும் என்று அறிவித்துள்ளார். ''நீதி முழுமையாகக் கிடைக்காவிட்டாலும் நான் நிரபராதி என்பதை உலகிற்கு நிரூபிப்பேன்'' என்றும் கூறினார்.

சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த பெண்கள் கொடுத்த பாலியல் முறைப்பாடு தொடர்பாக லண்டனில் கடந்த வாரம் கைதுசெய்யப்பட்டிருந்தார் அசேஞ்ச்.

அமெரிக்காவின் இராணுவம், வெளிநாட்டுத் தூதரகங்கள் ஆகியவற்றின் இரகசியங்களை 'விக்கி லீக்ஸ்' இணையதளம் வெளியிட்டுப் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதைத் தொடர்ந்து அசேஞ்ச் மீது நடவடிக்கை எடுக்க அமெரிக்க அரசு ஏற்பாடு செய்தது.

*நண்பர்கள் பலர் பிணை வழங்கி இருக்கிறார்கள் என்பதால் அசேஞ்ச் தப்பிச் செல்வதற்கு இடம் இல்லை என்றார் அவருக்குப் பிணை வழங்கிய நீதிபதி.*

அதன் பின்னர் அவர் லண்டனில் வைத்துக் கைது செய்யப்பட்டார். தன்னை பிணையில் விடுவிக்கும்படி லண்டனிலுள்ள வெஸ்ட் மினிஸ்டர் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் அசேஞ்ச் மனு செய்திருந்தார். அங்கு அவருக்கு பிணை வழங்கப்பட்டது. இதை எதிர்த்து சுவீடன் சார்பில் பிரிட்டிஷ் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. எனவே, அவர் உடனடியாக வெளிவர முடியாத நிலை இருந்தது. இதற்கிடையே இந்த மேன்முறையீட்டு மனு மீதான விசாரணை உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

எதிர்த் தரப்பில் ஆஜரான சுவீடன் சட்டத்தரணிகள் பிணை வழங்க எதிர்ப்புத் தெரிவித்தனர். அவருக்குப் பிணை வழங்கினால் தலை மறைவாகி விடுவார் என வாதாடினர். இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி டன்கன் ஆன்ஸ்லே 'விக்கிலீக்ஸ்' நிறுவுநர் அசேஞ்சுக்கு பிணை வழங்கி தீர்ப்பளித்தார்.

ஒரு கோடியே 70 இலட்சம் ரூபா பிணைத் தொகை செலுத்த வேண்டும். நீதிமன்றம் அருகேயுள்ள பொலிஸ் நிலையத்தில் தினமும் கையெழுத்திட வேண்டும் என்றும் நிபந்தனை விதித்தார்.

நீதிபதி ஆன்ஸ்லே அளித்த தீர்ப்பில், அசேஞ்ச்வின் கடவுச் சீட்டு ஏற்கனவே பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இவருக்கு அவரது நெருங்கிய நண்பர்கள் பலர் பிணை அளித்துள்ளனர். அமெரிக்க அரசின் இரகசியங்களை தனது இணையத் தளத்தில் வெளியிட்டு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள இவர் வேறு நாட்டுக்குத் தப்பிச் செல்ல முடியாது. ணவே பிணை வழங்குகிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

அசேஞ்ச் தற்போது லண்டனில் தனது நண்பரும் பிரபல பத்திரிகையாளருமான வாகன் ஸ்மித் என்பவரின் 650 ஏக்கர் எஸ்டேட் பங்களாவில் தங்கியுள்ளார்.

## ஆப்கானில் குண்டு வெடிப்பு 14 பேர் பலி!

காபூல், டிச. 18

மேற்கு ஆப்கானிஸ்தானில் வீதியோரத்தில் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டில் மினி பஸ் சிக்கி வெடித்துத் சிதறியது. இதில் பஸ்ஸில் சென்ற 14 பேர் உயிரிழந்தனர். படுகாயமடைந்த 4 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அங்குள்ள ஹீரட் மாகாணம் குஷ்க் குக்னா பகுதியில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. இது குறித்து பொலிஸார் கூறியவை வருமாறு:-

நாசவேலையை நிகழ்த்த வேண்டும் என்ற நோக்கத்துடன் பயங்கரவாதிகள் வீதியோரத்தில் வெடிகுண்டை மறைத்து வைத்துள்ளனர். இதில் அந்த வழியால் சென்ற மினிபஸ் சிக்கி வெடித்துச் சிதறியது.

பஸ் பல அடி தூரத்துக்கு தூக்கி வீசப்பட்டு, சுக்கு நூறுகச் சிதறிவிட்டது. பஸ்ஸில் சென்ற 14 பேரில் ஒருவர் கூட உயிர் தப்பவில்லை. இவர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தைத் சேர்ந்தவர்கள்.

இதில் மூன்று சிறுவர்களும் அடங்குவர். ஒருவரது உடல் கூட முழுமையாகக் கிடைக்கவில்லை. வீதியில் சென்ற 4 பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர். அவர்களது நிலைமையும் மோசமாகவே உள்ளது.

மினி பஸ்ஸுக்கு அருகில் சென்ற வாகனங்களும் பாதிப்புக்கு உள்ளாகின. அப்பகுதியில் சென்ற கார் உள்ளிட்ட வாகனங்களின் கண்ணாடிகள் உடைந்ததில் அதில் சென்றவர்களுக்குக் காயம் ஏற்பட்டது. சம்பவ இடத்தில் பொலிஸாரும், இராணுவத்தினரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

அப்பகுதியில் பயங்கரவாதிகளைத் தேடும் பணியும் நடைபெற்று வருகிறது.

இந்தச் சம்பவம் நிகழ்ந்த வீதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மேலும் 2 குண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை உடனடியாக செயல் இழக்கச் செய்யப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உலக அரங்கில்

## ஸ்பெக்ரம் ஊழல் விவகாரத்தில் தமிழ் மையத்துக்கு தொடர்பில்லை

### ஜெகத்கஸ்பார் தெரிவிப்பு

கொழும்பு, டிச. 18

''ஒரு கோடியே 76 இலட்சம் ரூபா 2 ஜி ஸ்பெக்ட்ரம் ஊழலுக்கும் தமிழ் மையத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. சந்தேகத்தின்பேரிலேயே சி.பி.ஐ. சோதனை நடந்துள்ளது. சி.பி.ஐ. தேடுதலைப் பயன்படுத்தி சோ, சுப்பிரமணியசுவாமி ஆகியோர் 2 ஜி அலைக்கற்றைப் பணம் தமிழ் மையம் வழியாக விடுதலைப் புலிகளுக்குச் சென்றிருக்கலாம் என்பது போலப் பேசி வருகிறார்கள். நாம் விடுதலைப் புலிகளுக்கு ஒருபோதும் நிதி வழங்கியதில்லை'' - இவ்வாறு அருட்தந்தை ஜெகத்கஸ்பார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-


ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டு விவகாரத்தில் ஊழலே நடைபெறவில்லை என்றோ ராசா குற்றமற்றவர் என்றோ நான் கூறவில்லை. அதைக் கூறுவதற்கான உரிமையோ அதிகாரமோ எனக்கு இல்லை. ஊழல் நடந்திருக்கிறது என முறைப்பாடு எழுந்திருக்கும் நிலையில், அது பற்றி முறையான விசாரணை நடத்தப்பட வேண்டுமே தவிர, விசாரணைக்கு முன்பாகவே ராசாவை குற்றவாளியைப் போல சித்திரிக்கும் ஊடகங்களின் போக்கைத்தான் நான் எதிர்த்தேன்.

தமிழ் மையம் அலுவலகத்தில் கடந்த புதனன்று சி.பி.ஐ. தேடுதல் நடத்தியது. 2 ஜி அலைக்கற்றைச் சர்ச்சைகளுக்கும் தமிழ் மையத்திற்கும், அதன் நிர்வாக அறங்காவலரான எனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. எங்கள் மீது அத்தகைய ஐயப்பாடுகளை எழுப்புவது அபாண்டமானது.

தமிழ் மையத்தின் வரவு-செலவு கணக்குகள் உரிய முறையில் தணிக்கை செய்யப்பட்டவை. எங்களது கணக்குகள் நேர்மையானவை, வெளிப்படையானவை. அரசியல்வாதிகளோடு இணைந்து செயற்படுகின்ற ஒரே காரணத்திற்காக சந்தேகப்படுவது அநீதியானது.

கனிமொழியுடன் நல்ல காரியங்களுக்காக இணைந்து இயங்குவதை மதிக்கிறோம். தி.மு.க. ஆட்சிக்கு வருவதற்கு முன்னரே அவர் தமிழ் மையத்தில் அறங்காவலராக இணைந்தவர்.

- இவ்வாறு தெரிவித்தார் அருட் தந்தை ஜெகத் கஸ்பார்.



பிணையில் விடுதலையாகி வந்துள்ள விக்கி லீக்ஸ் நிறுவுனர் யூலியன் அசேஞ்ச், லண்டனில் தனது நண்பரும் பிரபல பத்திரிகையாளருமான வாகன்ஸ் மித் என்பவரின் 60 ஏக்கர் எஸ்டேட் பங்களாவில் தங்கியிருக்கிறார்.

## இந்தியத் தலைவர்களுக்கு புலிகளால் ஆபத்தில்லை

### பொய்ப் பிரசாரம் என்கின்றனர் சீமான், நெடுமாறன்

சென்னை, டிச. 18

பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்ட இந்தியத் தலைவர்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருக்கின்றனர் எனக் கூறப்படுவது பொய்ப் பிரசாரம் - என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன், நாம் தமிழர் இயக்கத் தலைவர் சீமான் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து நெடுமாறன் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பிரதமர் மன்மோகன் சிங், முதல்வர் கருணாநிதி, மத்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் ஆகியோர் மீது தாக்குதல் நடத்த விடுதலைப் புலிகள் திட்டமிட்டிருக்கின்றனர் என்று தமிழக பொலிஸ் மா அதிபர் லத்திகா சரண் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடந்த போரில் விடுதலைப் புலிகள் இயக்கம் முற்றிலுமாக அழிக்கப்பட்டு விட்டது என இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளிப்படையாக அறிவித்தார். அதன் பின் திருப்பதி, டில்லி ஆகிய இடங்களுக்கு இந்திய [illegible] விருந்தினராக மஹிந்த [illegible] சென்றிருக்கிறார்.

லண்டனுக்கு மஹிந்த ராஜபக்ஷ சென்றபோது, அவருக்கு எதிராக பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் ஒன்றுகூடி எதிர்ப்புத் தெரிவித்தனர். அதேபோல் கோவை, பெங்களூர் ஆகிய இடங்களுக்கு வருகை தந்த இலங்கை அமைச்சர்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

தமிழர்களிடையே வளர்ந்து வரும் இத்தகைய எழுச்சியை [illegible] அலைக்கற்றை ஊழல் பிரச்சினையைத் திசைதிருப்புவதற்காகவும் இத்தகைய பொய்ப் பிரசாரத்தை இந்திய, தமிழக அரசுகள் மேற்கொண்டுள்ளன. இதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் விடுத்துள்ள அறிக்கை தெரிவிப்பதாவது:-

காங்கிரஸ் கட்சியினரை மகிழ்ச்சியூட்டவும், ஸ்பெக்ட் ரம் அலைக்கற்றை ஊழல் பிரச்சினையில் இருந்து மக்களைத் திசை திருப்பவும், பிரதமர் மன் மோகன் சிங்கையும், முதல்வர் கருணாநிதியையும் கொல்ல விடுதலைப் புலிகள் திட்டமிட்டிருக்கின்றனர் என காவல் துறை அறிவித்துள்ளது.

ஒட்டுமொத்த தமிழர்கள் மத்தியிலும் தி.மு.க. மீதும், கருணாநிதியின் மீதும் ஏற்பட்டுள்ள அதிருப்தியைத் திசை திருப்பவே இவ்வாறு அறிவித்துள்ளனர். விடுதலைப் புலிகளால் இவர்களின் உயிருக்கு ஆபத்தில்லை - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகளால் இந்தியத் தலைவர்களுக்கு ஆபத்து என மத்திய புலனாய்வு அமைப்புக்கள் தம்மை எச்சரித்திருப்பதாக லத்திகா சரன் கூறியிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவற்குழிக் களஞ்சியத்துக்கு அருகில் நீர்தேங்கியுள்ளதால் மக்கள் அதிருப்தி

யாழ்ப்பாணம்,டிசெ.18

நாவற்குழி அரச உணவுக் களஞ்சியத்துக்கு அருகிலுள்ள நீர் தேங்கியுள்ள குட்டை நீண்ட காலமாக மூடப்படாதிருக்கின்றமை குறித்துப் பொது மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

உணவுக் களஞ்சியத்தின் சுற்றுச் சுவர்க்கருகில் ஏ-9 பிரதான வீதியோரமாக உள்ள நீர் தேங்கியுள்ள குட்டையில் பொலித் தீன் பைகள் மற்றும் கழிவுப் பொருள்கள் நிறைந்து காணப்படுகின்றன.

அந்த நீரின் மேல் பாசி படர்ந்தும் காணப்படுகிறது. அசைவற்றுத் தேங்கியுள்ள இந்த நீரில் டெங்கு நோயைப் பரப்பக்கூடிய நுளம்பு இனங்களின் பெருக்கத்துக்குச் சாதகமான சூழல் காணப்படுவதாகவும் பொதுமக்கள் குறை கூறுகின்றனர்.

டெங்கு நோயை ஒழிப்போம் எனக் கூறி மாவட்ட மட்டத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பாக அதிக கவனம் எடுத்து நீர் தேங்கியுள்ள குட்டையை மண்போட்டு நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ம-14)

# யாழ். பிரதேச சமுர்த்தி வங்கியின் கட்டடம் திறந்துவைப்பு

யாழப்பாணம் டிசெ 18

பிரதேச செலயத்தின் சமுர்த்தி வங்கிக்கான கட்டடம் பண்ணையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டடம் கடந்த வாரம் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. பல லட்கம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்த கட்டடம் யாழ்.ரெலிக்கெம் நிறுவனத்திற்கு அருகில் அமைந்துள்ளது. (ம-26)

# ஆசிரியர்களின் கரங்களில்...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அன்றாட வாழ்வில் நிகழும் விடயங்களை அவதானிப்பதுடன், போதிய தகவல்களைத் திரட்டி மாணவர்களுக்கு ஆசிரியர்கள் வழங்க வேண்டும். சிறுவர்களை அவர்களது இலக்கை நோக்கி நடை பயில வைப்பதுடன் யதார்த்த வாழ்வைப் புரிந்துகொள்ளும் புத்திசாலிகளாக மாற்றுவதும் சிறுவர் கல்வியை வளர்க்கும் ஆசிரியருக்கே உரிய தனித்துவமான திறனாகும்.

### பகுப்பாய்வு

தகவல் மற்றும் அனுபவங்கள் மூலம் பெறப்பட்டவைகளிலிருந்து விளைவுகளையும் பாதிப்புக்களையும் கண்டறியவும், அவற்றுக்கிடையில் நிலவும் உறவுகளை அறியவும், தோற்றங்களிலிருந்து வேறுபடுத்திப் பார்க்கவும், அவை தொடர்பான அறிவை வளர்க்கவும்கூடிய பகுப்பாய்வுத் திறனை ஆசிரியர் கொண்டிருக்க வேண்டும். இதன் மூலம் இத்தகைய பகுப்பாய்வுத் திறனை ஆசிரியர்கள் சிறுவர்களிடத்தே வளர்க்க வேண்டியதும் அவசியமானதாகும்.

### படைப்பாற்றல்

ஆர்வமூட்டவும், நிலையான உற்சாக மூட்டவும், மனித உரிமைவடிவங்களைப் பற்றிப் போதிக்கவும், ஆசிரியர் போதிய படைப்பாற்றல் கொண்டவராக இருத்தல் வேண்டும். மாணவர்களின் பின்னணியையும் திறனையும் சார்ந்து பாடத்திட்டத்தின் பொருளையும் வழிமுறைகளையும் தேர்வு செய்து கதைகள், நிகழ்வுகள், சம்பவங்கள், மேற்கோள்கள், கவிதைகள், சிறுசம்பவ விளக்கங்கள், வாழ்க்கை வரலாற்றுச் சித்திரங்கள் என்பவற்றின் ஊடாக விளக்கம் அளித்து மாணவரின் படைப்பாற்றலை வளப்படுத்துதல் ஆசிரியருக்கு அவசியமானதாகும்.

### தெளிவான பேச்சு

சிறுவர்களுக்கு கல்வி போதிக்கும் ஆசிரியர், தனது உணர்வுகளையும், எண்ணங்களையும் வெளிப்படுத்தவும், தகவல்களையும் அதன் மதிப்பீட்டையும் தெரியப்படுத்தவும் தெளிவான பேச்சாற்றல் உடையவாராக இருத்தல் வேண்டும். அதாவது ஒருவரை ஆளுமை வழியாகத் தொடர்பு கொள்ளத் தெரிந்தவராக இருக்க வேண்டும். இது சிறுவர்களின் கல்வியாற்றலையும், பேச்சாற்றலையும் மேம்படுத்த ஆசிரியருக்கு தேவையான அவசியத்திறன் ஆகும்.

### கலை உணர்வு

சிறுவர் உரிமை விழிப்புணர்வு என்பது வெறும் அறிவு சார்ந்த ஒன் றல்ல. இது கலை நயம் மிக்க பணி. சிற்பி ஒருவன் கலை நயத்துடன் கல்லில் உயிர்த்துடிப்புள்ள சிலையைச் செதுக்குவது போன்ற பணியாகும். சிறுவர்களுக்கு கல்வி பற்றிய உரிமையை உணர்த்தி, சமூகத்திற்கு பொறுப்பு வாய்ந்த பிரஜைகளை பிரகடனப்படுத்தும் பெறுமதி வாய்ந்த கலைப்பணி. இதில் ஈடுபடும் ஆசிரியர்கள் கலை உணர்வு மிக்கவர்களாக இருத்தல் பணி சிறக்க ஏற்புடையதாகும்.

இத்தகைய அடிப்படைப் பண்புகளைத் தம்மிடத்தே வளர்த்துக் கொள்வதற்கு ஆசிரியர்கள் முன்வரவேண்டும். அவ்வாறு நிகழும் பட்சத்தில் மிகச் செழுமையான-ஆளுமை மிக்க- இளைய சமுதாயத்தை எம் மண்ணில் நாம் உருவாக்கிக் கொள்ளமுடியும்.

சிறுவர் கல்வியை மேம்படுத்துவோம். வளமான சமுதாயத்தை உருவாக்குவோம்.

# நடன நிகழ்வுகளில்...

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கே: நீங்கள் நாட்டிய மயிலில் வெற்றி பெற்றதும் என்ன நினைத்தீர்கள்?

ப: எனது பெற்றோரையும், குருவை யும் தான் முதலில் நினைத்தேன். அவரிகளின் வழிகாட்டல், ஆர்வம், ஊக்கம் தான் நான் வெற்றிபெறக்காரணம். என்னோடு இணைந்த பக்கவாத்தியக் கலைஞர்கள் அனைவருமே சிறப்பாகச் செய்தனர். ஈ-யூலங்கா நிறுவனத்தினரின் ஏற்பாட்டிலே தான் இன்று நாட்டியமயில் விருது பெற்றேன். அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

இந்நிறுவனத்தினர் எம்மிடம் கட்டணங்கள் எதுவுமே அறவிடவில்லை. எம்மோடு போட்டிக்குத் தோற்றிய மேலும் இருவர் என்னை விட சளைத்தவர்களும் அல்ல. அவர்களுடன் நான் ஒரு சில புள்ளிகளிலே தான் வெற்றி பெற்றேன்.

கே: உங்களைப் போன்ற மாணவர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

ப: யாழ் மண்ணில் பிறந்த ஒவ்வொருவருக்கும் அடையாளமாக இருப்பது கலையே. சிறுவயதிலிருந்தே ஒவ்வொருவரும் தமக்குரிய கலைகளைப் படிக்க வேண்டும். கட்டாயம் ஒரு கலையைக் கற்றறிதல் அவசியமாகும்.

வெற்றிதோல்வி என்பன சமமானது. எம் திறமையை வெளிப்படுத்த உதவுவது போட்டி நிகழ்வுகளே. அதில் வெற்றி பெறவேண்டும் என்பது இல்லை. அதில் கலந்து கொள்வதே அவர்களின் திறமையை வெளிப்படுத்தும்.

எனது எதிர்காலத்தில் நல்ல நடன ஆசிரியை ஆகவும், வழிகாட்டியாகவும் திகழ வேண்டும் என்பதே எனது ஆசை. எனது கைகளினாலும் பல மாணவர்களை உருவாக்க வேண்டும். எனது நடனநிகழ்ச்சிகள் மூலம் கிடைக்கும் பணத்தினை ஏழை மாணவர்களின் கல்விக்கு உதவுவதும் எனது விரும்பமாகும்.

## துயர் பகிர்கின்றோம்



கலாநிதி சிவாகம கிரியாரத்தினம் வேதசிவாகம ஞானபானு
சிவாகம ஞானபாஸ்கரன் ஈசான சிவாச்சாரியார்
பிரம்மஸ்ரீ சிவநித்தியானந்த சிவாச்சாரியார்
[யாழ்.மாவட்ட சர்வதேச இந்துமத குருபீடாதிபதி]
(முன்னாள் பிரதம குரு கல்வளைப் பிள்ளையார் கோயில், சண்டிலிப்பாய்)

எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஆலயத் திருப்பணிகளை சிவாகம நெறிப்படி செய்து அறநெறியை மக்கள் உள்ளத்தில் புன்சிரிப்புடன் இன்சொலால் புகுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்திய எங்கள் கிரியாரத்தினக் குருக்களின் அமரத்துவ நிலையை அறிந்து உள்ளம் மீளாத் துயரடைகின்றது. அவரது ஆன்மா சாந்தியடைய இறையை இறைஞ்சு வதோடு அன்னாரை இழந்து துயருறும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தர்மகர்த்தா சபை,
கல்வளைப் பிள்ளையார் கோயில், சண்டிலிப்பாய்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில்: 01.04.1954
விண்ணில்: 18.11.2010

அமரர்
சற்குணவதி (ரோசா) வரதராசன்



கடந்த 18.11.2010 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி இன்று (18.12.2010) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அன்னாரின் மரணச்செய்தி அறிந்து சகல வழிகளிலும் உதவி செய்த உறவினர்கள் நண்பர்களுக்கும் நேரிலும் தொலைபேசி மூலமும் பல்வேறு வழிகளிலும் எங்கள் துயரில் பங்குகொண்ட அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்

குடும்பத்தினர்
தொ.பே: 021 222 9423

இல.21, தாளையடி லேன்,
திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.


மிக விரைவில்
சாவகச்சேரி நகரிலும்
GATEWAY
CfiCT
மற்றும்
ICDL International Computer Driving Licence
சர்வதேசத் தராதரப் பத்திரப் பரீட்சை நிலையம்
IT ISLAND - GATEWAY CENTRE
New Market Building,
Chavakachcheri
021 227 0323


## வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 848 திகதி: 16.12.2010

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இல: |
|---|---|---|---|---|---|
| J | 09 | 40 | 43 | 58 | 06 |

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 10,297,237.50 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 1,000,000.00 | 01 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 06 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 323 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 15279 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 215950 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாயின் | 20.00 | 32255 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ.
8,738,000.00

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை
10,620,822.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663
அவசர தேவைக்கு: 2473360, 2433631
இணையம்: www.nlb.lk

## கலைஞர்களுக்கு மனமுவந்த வாழ்த்து



நாகசுர மேதை வி.கே.பஞ்சமூர்த்தி
இசைஞான மணி எஸ்.சோமலிங்கம்

கலாபூஷணம்
கௌரவப்பட்டம் பெறும் கலைஞர்களை மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

கலாபூஷணம்
கே.ஆர்.சுந்தரமூர்த்தி.
(நாகசுர வித்துவான்)
இணுவில் மேற்கு, இணுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைக்கு ஆள்கள் தேவை

மாங்கோஸ் சைவ உணவகத்திற்கு கீழ்வரும் பதவிகளுக்கு ஆள்கள் தேவைப்படுகின்றனர்

- ★ சமையல் உதவியாளர்
- ★ உணவு பரிமாறுபவர்கள்
- ★ குளிர்பானம் தயாரிப்பாளர்
- ★ சுத்திகரிப்பாளர் (ஆண்கள் மட்டும்)

359/3, கோயில் வீதி, நல்லூர்.
0777661083, 021 222 8294 (107500)

## தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வ-து

### வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்

எமது சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 2010.12.19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அனைத்துப் பொதுச்சபைப் பிரதிநிதிகளுக்கும் அதிகாரக் கடிதமும், அறிவித்தலும் உரிய காலத்தில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இந்த அறிவித்தல் கிடைக்கப்பெறாதவர்கள், இந்த அறிவித்தலை தனித்தனி அறிவித்தலாக ஏற்று நடைபெறவுள்ள வருடாந்தக் கூட்டத்திற்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

செயலாளர்,
தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்
தெல்லிப்பழை.
(பி-573205)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாண மாவட்டச் செயலக நிதிக் கிளையில் கடமையாற்றும் பொது முகாமைத்துவ உதவியாளர் திருமதி கனகாம்பிகை பஞ்சாட்சரம் அவர்களின் பாசமிகு துணைவர்

**செல்லத்துரை பஞ்சாட்சரம்**

(ஆசிரியர், யா/அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயம்)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நல்லூர் கழகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

## மந்துவில் கொலைச் சம்பவம்; இருவருக்கு விளக்க மறியல்

மந்துவில் மேற்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கோடரி வெட்டுச் சம்பவத்தில் வயோதிபர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக இருவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பிரஸ்தாப இரு நபர்களும் சாவகச்சேரி பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை முன் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

இருவரையும் எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். காணித்தகராறு தொடர்பாக இடம்பெற்ற வாக்குவாதம் கைகலப்பாக மாறி கோடரி வெட்டில் முடிந்தது. இந்தச் சம்பவத்தில் வேலு சின்னத்தம்பி (வயது 60) என்பவரே கொலையுண்டவர் ஆவார். (ஒ-ஐ-207)

## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு 'ஏ' நடத்தும் இரசாயனவியல் ஆசிரியர்களுக்கான ஆய்வுகூடப் பரிசோதனைகள் பற்றிய பயிற்சிப்பட்டறை நாளையும், நாளை மறுநாளும் யாழ்.பல்கலைக்கழக இரசாயனவியல் துறையில் நடைபெறவுள்ளது.

மேற்படி பயிற்சிப் பட்டறைக்கு தமது பாடசாலை அதிபர்களினூடாக விண்ணப்பங்களை அனுப்பிய இரசாயனவியல் ஆசிரியர்களை அன்று காலை 8.30 மணிக்கு முன்னர் சமுகமளிக்குமாறு யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு 'ஏ' செயலாளர் கலாநிதி கு.வேலாயுதமூர்த்தி கேட்டுக் கொள்கிறார். (ஐ-15)

## சாயி நிலையத்தில் போயா தின நிகழ்வு

யாழ்ப்பாணம் சத்திய சாயி சேவா நிலையத்தில் போயாதின ஆன்மீக நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை அதிகாலை 4.45 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகும். காலை 8.45 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகி பஜனை, சிறப்புச் சொற்பொழிவு, மங்களாராத்தி என்பன இடம்பெற்று மதியபோசனத்துடன் நிகழ்வுகள் நிறைவடையவுள்ளன. (201)

## துயர் பகிர்கின்றோம்

பிரம்மஸ்ரீ சிவானந்த கிரி

**நித்தியானந்தக் குருக்கள்**

(பிரதம குரு, சங்கானை இலுப்பைத்தாழ்வு வெல்வில் முருகன், சங்கானை சிலம்புப் புளியடி வைரவர் ஆலயம்)



இறைபதம் அடைந்த செய்தி அறிந்து மிகுந்த துயரடைவதுடன் அன்னாரின் மறைவில் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் ஐயாவின் ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளரும் ஊழியர்களும்
**சாரங்கா ஜூவெல்லறி,**
157/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## கண்ணீர்க் காணிக்கை




எமது பாடசாலையின் கல்வி வளர்ச்சியிலும் விளையாட்டுச் செயற்பாடுகளிலும் சமூக நிகழ்வுகளிலும் எம்மோடு தோளோடு தோள் நின்ற ஆசிரியரும் எம் அன்பு நண்பருமான

**அமரர் செல்லத்துரை பஞ்சாட்சரம்**

அவர்களது திடீர் மறைவுச்செய்தி எம்மை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. அவரது பிரிவு எம்மையெல்லாம் ஆறாத் துயரில் மூழ்க வைக்கிறது. அன்னாரின் பிரிவால் துன்புற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள்
யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை,
யா/அரியாலை கிழக்கு அ.த.க.பாடசாலை,
யா/பூம்புகார் அ.த.க.பாடசாலை. (107503)

# மரண அறிவித்தல்



## மயில்வாகனம் சுந்தரலிங்கம் (சுந்தா)

(கிராம அலுவலர், J/66, J/67, முன்னாள் யாழ். மாநகரசபை உறுப்பினர், தலைவர், வடக்கு, கிழக்கு கிராம உத்தியோகத்தர் சங்கம், யாழ்.மாவட்டம்)

இணுவிலைப் பிறப்பிடமாகவும் ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சுந்தரலிங்கம் (கிராம அலுவலர்) 14.12.2010 செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - நாகரத்தினம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் பத்மாதேவி (கனடா) தம்பதியரின் மருமகனும் லலிதா (செல்வி)வின் பாசமிகு கணவரும், சிந்துஜன் (இயன் மருத்துவ விஞ்ஞானம், 2ஆம் வருடம், யாழ்.பல்கலைக்கழகம்), யதுர்சன், நிருஜன் (2ஆம் வருட வர்த்தக முகாமைத்துவ பீடம் - கிழக்குப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகேந்திரராஜா (சுவிஸ்), தனபாலசிங்கம் (அவுஸ்திரேலியா), திலகவதி (கனடா), காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் யோகேஸ்வரன்(அவுஸ்திரேலியா), பத்மாவதி (மணி), காலஞ்சென்ற தவராசா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.12.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 8மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

94, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.
(021 222 7075)

(116808)


தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக்கில் சாதிக்க காத்திருக்கும் பெடரர்

ரெனிஸ் அரங்கில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருப்பவர் சுவிட்சர்லாந்து வீரர் ரோஜர் பெடரர். இதுவரை 16 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்று சாதித்துள்ள இவர், ஒலிம்பிக் ரெனிஸ் ஒற்றையர் பிரிவில் ஒரு பதக்கம் கூட வென்றதில்லை. இதற்கு, வரும் 2012இல் லண்டனில் நடக்கவுள்ள ஒலிம்பிக் போட்டியில் முற்றுப்புள்ளி வைக்ககாத்திருக்கிறார்.

கிராண்ட்ஸ்லாம் அரங்கில் அசத்தி வரும் பெடரர், விம்பிள்டன் ரெனிசில் 6 முறை (2003-07, 09) சம்பியன் பட்டம் வென்றுள்ளார். வரும் 2012இல் ஒலிம்பிக் போட்டி லண்டனில் நடக்க உள்ளது. எனவே விம்பிள்டன் ராசி, லண்டன் ஒலிம்பிக்கிலும் தொடர அதிக வாய்ப்பு உள்ளது. இவர், கடந்த 2008இல் நடந்த பீஜிங் ஒலிம்பிக் ரெனிஸ் இரட்டையரில் தங்கம் வென்றார். இருப்பினும் ஒற்றையர் பிரிவில் தங்கம் கைப்பற்றவில்லை என்ற ஏக்கத்துடன் உள்ளார்.



இதுகுறித்து பெடரர் கூறியதாவது: ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வெல்ல வேண்டும் என்ற எனது நீண்ட நாள் ஆசை, கடந்த 2008இல் நடந்த பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் நிறைவேறியது. அப்போது இரட்டையரில் தங்கம் வென்றேன். இருப்பினும் ஒற்றையர் போட்டியில் தங்கம் கைப்பற்ற வேண்டும் என்ற ஏக்கம் இன்னும் உள்ளது. இதற்கு லண்டன் ஒலிம்பிக் கைகொடுக்கும் என நினைக்கிறேன்.

ஒவ்வொரு முறையும், ஒலிம்பிக் போட்டியில் சில மறக்க முடியாத சம்பவங்கள் நிறைவேறி உள்ளன. கடந்த 2000ஆம் ஆண்டு நடந்த சிட்னி ஒலிம்பிக் போட்டியில் எனது மனைவி மிர்காவை முதன்முதலில் பார்த்தேன். கடந்த 2004இல் நடந்த ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியின் வீரர்கள் அணிவகுப்பில், முதன்முதலில் சுவிட்சர்லாந்து கொடி ஏந்திவந்தேன். கடந்த 2008இல் நடந்த பீஜிங் ஒலிம்பிக் போட்டியில், எனது பிறந்த நாளான ஒகட்ஸ் 8 திகதி அன்று நடந்த வீரர்கள் அணிவகுப்பில் தேசிய கொடி ஏந்தி வந்தேன். பின்னர் 2008இல் முதன் முதலில் ஒலிம்பக் போட்டியில் தங்கம் வென்றது, உள்ளிட்ட சம்பவங்கள் முக்கியமானவை. இதேபோல வரும் 2012இல் நடக்கவுள்ள ஒலிம்பிக் போட்டிக்கு, ஒரு சிறப்பு உள்ளது. அப்பாவாக, முதன்முதலில் ஒலிம்பிக் போட்டியில் விளையாட உள்ளேன் இவ்வாறு பெடரர் கூறினார். (த)

# திருமணப்பந்தத்தில் இணைந்தார் ஹிங்கிஸ்



முன்னாள் ரெனிஸ் வீராங்கனை மார்ட்டினா ஹிங்கிஸ் (30 வயது) பிரான்ஸைச் சேர்ந்த ஷோ ஜம்பிங் (குதிரை மூலம் தடை தாண்டுதல்) வீரர் திபௌல்ட் ஹுடினை (24 வயது) மணந்துள்ளார்.

சுவிற்சர்லாந்து பத்திரிகையான "ஷவெய்ஸர் இலுஸ்டிரியரேட்" இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் கடந்த வெள்ளிக்கிழமை மார்ட்டினா - திபௌல்ட் திருமணம் நடந்ததாக அந்த பத்திரிகையின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"எங்களது திருமணம் பலருக்கும் ஆச்சரியமளிக்கலாம். ஆனால் இது முன்கூட்டியே தீர்மானிக்கப் பட்டதுதான்" என்று அந்த இணையத்தளத்தில் மார்ட்டினா ஹிங்கிஸ் தெரிவித்துள்ளார்.

சுவிற்ஸர்லாந்தைச் சேர்ந்த மார்ட்டினா ஹிங்கிஸ் ரெனிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவில் ஐந்து கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள் ளார். இதில் மூன்று அவுஸ்திரேலிய ஓப்பன் பட்டங்கள் அடங்கும். 2007 ஆம் ஆண்டு சர்வதேச ரெனிஸிலிருந்து ஓய்வு பெற்றார். (23)

# லாராவை முந்தினார் ராவிட்



இந்திய வீரர் ராகுல் ராவிட் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அதிக ஓட்டங்களை குவித்த வீரர்கள் வரிசையில் மூன்றாவது இடத்தைப் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அவர் 11 ஓட்டங் களை எடுத்தபோது மேற்கிந்தியத் தீவுகள் வீரர் லாராவின் ஓட்டங்களைக் கடந்து (11,953) அதிக ஓட்டங்களை குவித்த வீரர்களின் வரிசையில் மூன்றாவது இடத்துக்கு முன்னேறினார். 148ஆவது டெஸ்ட் போட்டியில் ராவிட் இந்த சாதனையைப் படைத்துள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்களைக் குவித்த வீரர்கள்

* சச்சின் டெண்டுல்கர் (இந்தியா, 175 டெஸ்ட்) 14,371
* ரிக்கி பொண்டிங் (ஆஸ்திரேலியா,151 டெஸ்ட்) 12,332
* ராகுல் ராவிட் (இந்தியா, 148 டெஸ்ட்) 11,957
* பிரையன் லாரா (மேற்கிந்தியத் தீவுகள், 131 டெஸ்ட்) 11,953
* ஜக்கஸ் காலிஸ் (தென்னாப்பரிக்கா, 143 டெஸ்ட்) 11,449
* ஆலன் போர்டர் (ஆஸ்திரேலியா, 156 டெஸ்ட்) 11,174
* ஸ்டீவ் வோஹ் (ஆஸ்திரேலியா, 168 டெஸ்ட்) 10,927
* சுனில் காவஸ்கர் (இந்தியா, 125 டெஸ்ட்) 10,122
* ஜயவர்த்தன (இலங்கை, 116 டெஸ்ட்) 9,527
* சந்திரபோல் (மேற்கிந்தியத் தீவுகள், 129 டெஸ்ட்) 9,063. (த)

# உலகக் கிண்ணத்துடன் கிறிஸ்டன் ஓய்வு?

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியோடு இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் கேரி கிறிஸ்டன் ஓய்வு பெறப் போவதாக பேச்சு அடிபடுகிறது. இதை கப்டன் டோனியே சூசகமாக தெரிவித்துள்ளார்.

கிறிஸ்டன் பயிற்சியாளராக வந்தபிறகு இந்திய கிரிக்கெட் அணி வெற்றிகளைக் குவித்து வருகிறது. இந்திய அணியின் மூத்த வீரர்களுக்கு கிறிஸ்டன் பயிற்சியாளராக நீடிக்க வேண்டும் என்ற விருப்பமும் உள்ளது. ஆனால் அவர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியுடன் இந்திய அணிக்கு விடை கொடுக்கவுள்ளதாக தற்போது பேச்சு எழுந்துள்ளது.

இதுகுறித்து கப்டன் டோனி கூறுகையில், கிறிஸ்டன் பயிற்சியாளராக நீடிப்பது குறித்து இப்போதைக்கு யாரும் பேசவில்லை. அதுகுறித்த பேச்சும் எழவில்லை. எங்களது கவனம் முழுவதும் தென்னாபிரிக்க தொடரை வெல்வதில்தான் உள்ளது. உரிய நேரம் வரும்போது பேசுவோம்.

தென்னாபிரிக்கத் தொடர் முடிந்த பிறகு உலகக் கிண்ணப் போட்டி வருகிறது. அதுவரை அவர் எங்களுடன் இருப்பார் என்று கருதுகிறோம். அவரது ஒப்பந்தம் உலகக் கிண்ணம் வரை இருக்கிறது.

அதற்குள் அவரிடமிருந்து என்னவெல்லாம் கற்க முடியுமோ அதை செய்ய முயற்சிப்போம். அதேசமயம், இன்னும் 3 ஆண்டுகளுக்கு அவர் எங்களுடன் இருந்தால் மகிழ்ச்சியே.



இந்திய கிரிக்கெட் அணிக்குக் கிடைத்த மிகச் சிறந்த பயிற்சியாளர் கிறிஸ்டன். அதில் எங்களுக்கு பெரும் மகிழ்ச்சி. மிகப் பெரிய வீரர் அவர். பத்திரிகையாளரிடம் பேசுவதை விட அணிக்கு பயனுள்ளது குறித்த சிந்தனையே அவரிடம் அதிகம் உள்ளது. தனது வேலையில் அவர் மிகச் சரியாக, சீரியஸாக இருக்கிறார். இதுவே அவரிடம் எங்களைக் கவர்ந்த முக்கிய விஷயம் என்றார் டோனி.

2007-2008 ஆஸ்திரேலியத் தொடரில் இந்தியா பெருத்த கசப்பான அனுபவங்களைச் சந்தித்திருந்தநிலையில், கிறிஸ்டன் இந்திய அணியுடன் இணைந்தார். அவரது காலத்தில்தான் இந்திய அணி டெஸ்ட் தரைவரிசையில் முதலிடத்தைப் பிடித்து அசத்தியது. பல வெற்றிகளையும் குவித்தது. இந்திய வீரர்களின் சரியாக புரிந்து வைத்து அவர்களை சரிப்படுத்தி திறமைகளை முழுமையான அளவில் வெளிக் கொணருவதில் கிறிஸ்டன்பெரும் வெற்றி பெற்றுள்ளார் என்பது குறிப்படத்தக்கது.




இந்த நிலையில் கிறிஸ்டன் விலகினால் அது இந்திய வீரர்களுக்கு நிச்சயம் பெரிய இழப்புதான் என்பதில் சந்தேகம் இல்லை. (த)

# கொச்சி மைதானத்தில் பரிசோதனை

ஐபிஎல் போட்டி நடைபெறவுள்ள கொச்சி ஜவாஹர்லால் நேரு மைதானத்தில் ஐபிஎல் தலைமைச் செயல் அதிகாரி சுந்தரராமன், ஐபிஎல் கொச்சி அணி உரிமையாளர்கள் வியாழக்கிழமை ஆய்வு நடத்தினர்.

ஐபிஎல் கிரிக்கெட் அணிகளில் 2011 முதல் ஐபிஎல் கொச்சி அணியும் பங்கேற்கிறது.

இந்த நிலையில் கொச்சி ஜவாஹர்லால் நேரு மைதானத்தில் உள்ள வசதிகளை ஐபிஎல் அதிகாரிகள் மற்றும் கொச்சி அணி உரிமையாளர்கள் கடந்த வியாழக்கிழமை ஆய்வு செய்தனர். பின்னர் அவர்கள் கேரள கிரிக்கெட் சங்க நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினர்.

இதுகுறித்து ஐபிஎல் கொச்சி அணி உரிமையாளர்களில் ஒருவரான விவேக் வேணுகோபால் கூறியது:

மைதான பணிகள் எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. 7 உள்ளூர் ஆட்டங்கள் நடைபெற்றுள்ளன. புல்தரை, மின்விளக்குகள், பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து பணிகளையும் அடுத்த ஆண்டு பெப்ரவரி 28ஆம் திகதிக்குள் முடிக்க பிசிசிஐ உத்தரவிட்டுள்ளது. இன்னும் இரண்டரை மாத காலம் உள்ளதால் அதற்குள் முடிக்கப்பட்டுவிடும். அனைத்துமே பிசிசிஐயின் வழிகாட்டுதல் படியே நடந்துள்ளது என்றார்.



செஞ்சூரியில் இடம்பெற்று வரும் டெஸ் போட்டித் தொடரில் இந்தியா தென்னாபிரிக்காவுக்கு இடையிலான ஆட்டத்தில் இந்திய வீரர் கம்பிரின் விக்கெட்டைக் கைப்பற்றிய மகிழ்ச்சியில் தென்னாபிரிக்காவின் மோர்க்கல்.

## காஸ்ட்ரோலின் தூதரானார் சச்சின்



இந்திய நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் காஸ்ட்ரோல் நிறுவனத்தின் விளம்பரத் தூதராக இரண்டு ஆண்டுகள் இருப்பதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளார்.

இதன்மூலம் அவர் இரண்டு ஆண்டுகள் காஸ்ட்ரோல் நிறுவனத்தின் விளம்பரங்களில் தோன்றுவார். இதுகுறித்து சச்சின் கூறுகையில், உலகின் மிகச் சிறந்த நிறுவனங்களுள் ஒன்றான காஸ்ட்ரோலின் விளம்பரத் தூதரானது மிகுந்த மகிழ்ச்சியளிப்பதாக தெரிவித்துள்ளார்.

பிரேசில் உதைபந்தாட்ட வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ, இங்கிலாந்து உதைபந்தாட்ட வீரர் டேவிட் பெக்காம், இந்திய கிரிக்கெட் வீரர் ராகுல் ராவிட், ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் அதிரடி வீரர் ஆடம் கில்கிறிஸ்ட் ஆகியோர் காஸ்ட்ரோல் நிறுவனத்தில் விளம்பரத் தூதர்களாக உள்ளனர். அவர்களுடன் சச்சினும் இப்போதும் இணைந்துள்ளார். (த)

# 2 ஆம் இடத்தில் செய்னா



சர்வதேச பட்மின்ரன் தரவரிசையில், இந்திய நட்சத்திர வீராங்கனை செய்னா நேவல் மீண்டும் 2வது இடத்துக்கு முன்னேறினார்.

பட்மின்ரன் போட்டியில் சிறந்து விளங்கும் நட்சத்திரங்களுக்கான தரவரிசை பட்டியலை, சர்வதேச பட்மின்ரன் கூட்டமைப்பு வெளியிட்டது. இதில் ஹொங்கொங் சூப்பர் சீரிஸ் பட்மின்ரன் தொடரில் சம்பியன் பட்டம் வென்று சாதித்த செய்னா, 68811.2637 புள்ளிகள் பெற்று மீண்டும் 'நம்பர்-2' இடத்துக்கு முன்னேறினார். இத்தொடரின் அரையிறுதி வரை முன்னேறிய சீனாவின் ஜின் வாங் (71192.4017 புள்ளி) மீண்டும் 'நம்பர்-1' இடத்துக்கு முன்னேறினார். பைனலுக்கு முன்னேறிய மற்றொரு சீன வீராங்கனை ஷிஜியன் வாங் (67176.4 புள்ளி), 5வது இடத்தில் இருந்து 3வது இடத்துக்கு முன்னேறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கைவரிசையைக் காட்டினார் ஜோன்சன்;

# இங்கிலாந்துக்கு சரியான பதிலடி 187 ஓட்டங்களுக்குள் சுருண்டது!



பேர்த், டிச. 18

பேர்த் அரங்கில் பெரும் போர் மூண்டு பரபரப்பான நிலையை எட்டியுள்ளது. இங்கிலாந்தின் தாக்குதலில் 268 ஓட்டங்களுக்குள் சுருண்டுகொண்ட ஆஸ்திரேலிய அணி, நேற்றைய ஆட்டத்தில் ஜோன்சனின் ஆவேசத் தாக்குதல் உதவியுடன் பதிலடி கொடுத்து, இங்கிலாந்து அணியின் இன்னிங்ஸை 187 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி, தனது முதலாவது இன்னிங்ஸை 268 ஓட்டங்களுக்குள் சுருட்டியது.

பின்னர், தனது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி, நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. நேற்றுமுன்தினம் ஆட்ட நேரம் முடியும்போது இங்கிலாந்து அணி, விக்கெட் இழப்பின்றி 29 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஸ்டிராஸ் (12), குக் (17) ஆகியோர் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

நேற்று மீண்டும் தனது இன்னிங்ஸைத் தொடங்கிய இங்கிலாந்து அணியிடம், ஜோன்சன் தனது கைவரிசையைக் காட்டத் தொடங்கினார்.

முதலாவது ஆஷஸ் டெஸ்ட் போட்டியில் சரியாகப் பந்துவீசவில்லை எனக்கூறி, இரண்டாவது டெஸ்டிலிருந்து வெளியேற்றப்பட்ட ஜோன்சன், மூன்றாவது டெஸ்ட்டில் தமது திறமையை நிரூபித்தார்.

நிதானமாக ஆடிக்கொண்டிருந்த குக்கை (32) தமது ஆவேசத் தாக்குதலால் ஜோன்சன் வீழ்த்தினார். அவரைத் தொடர்ந்து டிராட் (4), பீற்றர்சன் (0), ஸ்டிரஸ் (52), கொலிங்வூட் (5) ஆகியோரையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த ஜோன்சன், அவர்களையும் 'பெவிலியன்' அனுப்பிவைத்தார்.

பின்னர் வந்த வீரர்களில் பெல் சிறப்பாக ஆடி அரைச்சதம் (53) கடந்த நிலையில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் 62.3 ஓவர்களை எதிர்கொண்ட நிலையில் இங்கிலாந்து அணி, 187 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து தனது இன்னிங்ஸை முடித்துக்கொண்டது.

ஆஸ்திரேலிய அணி சார்பாக பந்துவீச்சில், ஜோன்சன் 6 விக்கெட்டுகளையும், ஹரிஸ் 3 விக்கெட்டுகளையும், சிடில் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர், 81 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸ்திரேலிய அணி, இரண்டாவது இன்னிங்ஸிலும் தடுமாறத் தொடங்கியது.

நேற்று ஆட்ட நேரம் முடியும்போது, 119 ஓட்டங்களுக்குள் 3 விக்கெட்டுகளை இழந்திருந்தது.

ஹக்ஸ் (12), பொண்டிங் (1), கிளார்க் (20) ஆகியோர் விரைவாகவே ஆட்டமிழந்து சென்றனர்.

வோட்சன் (61), ஹஸி (24) ஆகியோர் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

இன்று ஆட்டத்தின் மூன்றாம் நாள் ஆகும்.

# அசத்துகிறது தென்னாபிரிக்கா



செஞ்சூரியன் மைதானத்தில் நடைபெற்று வரும் இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான முதற் ரெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டத்தின் தென்னாபிரிக்க அணி முதல் இனிங்ஸில் 82 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 366 ஓட்டங்களை எடுத்துள்ளது.

இந்திய பந்த வீச்சு எதிர்பார்ப்பைக் குலைத்தது. ஸ்ரீசாந்த் ஷார்மாவால் அவ்வப்போது ஓரிரு பந்துகள் பீட் செய்ய முடிந்ததே தவிர மற்றபடி பந்து வீச்சுக்கு சாதகமான ஆட்டக்களம் என்பது போல இவர்கள் பந்த வீச்சு அமையவில்லை.

முதல் 10 ஓவர்களில் 22 ரன்களை மட்டுமே எடுத்து கவனமாக ஆரம்பித்த ஸ்மித்தும் பீற்றர்சனும் அதன் பிறகு 17 ஓவர்களில் 89 ரன்களை எடுத்தனர்.

ஸ்மித் சிறப்பாக விளையாடி 11 பவுண்டரிகளுடன் 62 ஓட்டங்களை எடுத்து உணவு இடைவேளைக்கு சற்றுமுன் ஹர்பஜன் சிங்கின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

பீற்றர்சன் 9 பவுண்டரிகளுடனும் ஒரு சிக்சருடனும் 72 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அம்லா 100 பந்துகளை சந்தித்து 116 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார். கலிஸ் 102 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார். ஆட்டத்தின் 3ஆம் நாள் இன்றாகும். (23)

# பேஸ்புக், ருவிட்டர் இணையத்தளங்களில் பாக்.வீரர்கள் கருத்துக் கூறத் தடை

பேஸ்புக் மற்றும் ருவிட்டர் போன்ற இணையத்தளங்களில் அணி தொடர்பான கருத்துகளை வெளியிடுவதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களுக்கு அந்நாட்டு கிரிக்கெட்சபை தடைவிதித்துள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் இவ்வாறான சமூக இணையத்தளங்களூடாக வெளியிட்டு வரும் கருத்துகளால் பெரும் நெருக்கடிகள் ஏற்பட்டு வருவது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட்சபை ஏற்கனவே, கவனத்தில் கொண்டிருந்தது.

இந்த நிலையில், பாகிஸ்தான் அணியின் விக்கெட் காப்பாளராகவிருந்த அல்வர்னைன் ஹைதர், அண்மையில் பேஸ்புக் மூலம் தனது ஓய்வை அறிவித்ததுடன்,கிரிக்கெட் சூதாட்டம் தொடர்பாக பல்வேறு கருத்துகளை வெளியிட்டிருந்தார்.

இவரது இந்தச் செயற்பாடுகள் பாகிஸ்தான் அணிக்கும் கிரிக்கெட் சபைக்கும் பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தியிருந்ததுடன், இவரது செயற்பாடுகள் குறித்து கடும் விமர்சனங்களும் எழுந்தன.

இதையடுத்தே பாகிஸ்தான் அணி வீரர்களும் இனிமேல் பேஸ்புக் மற்றும் ருவிட்டரில் அணி தொடர்பாகவோ,கிரிக்கெட் போட்டிகள் தொடர்பாகவோ கருத்துகள் வெளியிடுவதற்கு கிரிக்கெட்சபை தடைவிதித்துள்ளது.

இதனை மீறுவோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கையெடுக்கப்படுமெனவும் வீரர்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

பேஸ்புக் மற்றும் ருவிட்டர் மூலம் சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் அவ்வப்போது வெளியிடும் கருத்துகளும் தகவல்களும் அணிகளுக்கும் கிரிக்கெட் சபைகளுக்கும் நெருக்கடிகளை ஏற்படுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது. (23)

# உலகக் கிண்ணத்தை வெல்ல பாகிஸ்தானுக்கு வாய்ப்பு



உலக கிண்ணத்தை வெல்ல பாகிஸ்தானுக்கும் வாய்ப்பு இருப்பதாக அப்ரிடி நம்பிக்கை தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் கிரிக்கெட் அணி 2 ருவன்ரி 20, 2 டெஸ்ட் மற்றும் 6 ஒருநாள் போட்டியில் பங் கேற்பதற்காக நிஸிலாந்து செல்கிறது

இந்த தொடருக்கான அப்ரிடி தலைமையிலான பாகிஸ்தான் அணி. தொடர் தோல்விகளைச் சந்தித்து வருவதால் பாகிஸ்தான் அணி பலவீனமாக இருப்பதாக நினைக்க வேண்டாம். உலக கிண்ணத்தை வெல்ல எங்களுக்கு வாய்ப்பு பிரகாசமாக இருக் கிறது என்றார் - அப்ரிடி. (23)

# மேஸியா, ரொனால்டோ: யார் சிறந்த மனிதர்?

உதைபந்தாட்ட அரங்கில் முன்னணி வீரர்களாக வலம் வருபவர்கள் கிறிஸ்டியானோ ரொனால்டோ (போர்த்துக்கல்), லியோனல் மேஸி (ஆர்ஜென்டினா).

உலகின் தலை சிறந்த உதைபந்தாட்ட வீரருக்கான விருதை இருவரும் மாறி மாறிக் கைப்பற்றி வருகின்றனர். ஆனால், உதை பந்தாட்ட வீரர்கள் மற்றும் ரசிகர்கள் மத்தியில் ரொனால்டோவை விட, மேஸிக்கே அதிக வரவேற்பு உள்ளது.





இதற்குக் காரணம், மைதானத்துக்கு வெளியே ரொனால்டோவின் நடவடிக்கைகளில் உள்ள குறைபாடுளே ஆகும்.

இது குறித்து பார்சிலோனா கழகத்தின் வீரரான டேனி ஆல்வ்ஸ் (பிரேஸில்) கூறுகையில்,

''கிறிஸ்டியானோ ரொனால்டோ திறமை மிக்கவர் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், இதன் அடிப்படையில் இவர் சிறந்த வீரர் என்று கூறி விட முடியாது.

''ஒரு சிறந்த வீரர் என்பவர், மைதானத்துக்கு வெளியிலும் சிறப்பாக நடந்து கொள்ளவேண்டும். ரொனால்டோவைப் பொறுத்தவரை, சக வீரர்கள் எவரையும் மதிக்க மாட்டார். எப்போதும் திமிராகவே இருப்பார். அமைதி என்பதே அவரிடம் இல்லை.

''ஆனால், மேஸி ஒரு பண்புள்ள மனிதர். மைதானத்தில் திறமையான ஆட்டத்தை வெளிப்படுத்தும் இவர், சக வீரர்களிடம் நல்ல முறையில் பழகக்கூடியவர். அமைதி, மரியாதை காட்டுதல் உள்ளிட்ட நல்ல பண்புகள் அவரிடம் உள்ளன. இதனால் தான், ரொனால்டோவை விட, மேஸிக்கு ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது'' என்றார்.

# குடித்துவிட்டுக் குழப்படி செய்தார் சமி

ராவல்பிண்டி விடுதி ஒன்றில் நன்றாகக் குடித்துவிட்டு சக வீரர் ஒருவருடன் தகராறில் ஈடுபட்ட பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளரான மொகமட் சமி, விடுதியில் வைக்கப்பட்டிருந்த சில பொருள்களையும் உடைத்துச் சேதம் செய்து குழப்பம் விளைவித்தார் எனக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

கராச்சி கிரிக்கெட் சபைத் தலைவரான சிரா புகாரி நடந்தது உண்மை என்று செய்தி நிறுவனம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

இதனால், சமி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால், ''சகவீரருடன் தகராறு செய்தது உண்மைதான், ஆனால் நான் குடித்திருந்தேன் என்பது பொய்.'' என்று சமி மறுத்துள்ளார்.

மொகமட் சமி 35 டெஸ்ட் போட்டிகளிலும் 83 ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிபுணர் குழுவுக்கு சாட்சியங்களை அனுப்பி வைக்கும் திகதி நீடிப்பு

கொழும்பு, டிசெ.18

இலங்கையில் இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக ஆலோசனை வழங்க ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் நியமித்த நிபுணர் குழுவுக்குச் சாட்சியங்களை அனுப்பிவைக்கும் கால எல்லை நீடிக்கப்படும் என்று 'இன்னர்சிட்டி பிரஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

2010 நவம்பர் இறுதிவரை நிபுணர் குழுவுக்கு 1,100 சாட்சியங்கள் கிடைத்துள்ளன என்று அச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. முன்னர் தெரிவிக்கப்பட்டபடி டிசெம்பர் 15ஆம் திகதியுடன் சாட்சியங்களை அனுப்பி வைக்கும் கால எல்லை முடிவடைந்த நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.

NP மின்னஞ்சல் மூலம் சாட்சியங்களை அனுப்பிவைக்கும் காலம் நீடிக்கப்படலாமென ஐ.நா. செயலாளரின் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளதாகவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டள்ளது. (சி)

## மரண அறிவித்தல்கள்

### சின்னவி தம்பையா

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னவி தம்பையா நேற்று (17.12.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னவி - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும், குலநாயகியின் (சின்றில்லா) அன்புக் கணவரும், சுஜீவன் (சுஜி), சாமந்தி (சாமா), வானுதன் (மெனா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆதர் யோசேப் ஜோன்சன், ஆன்கியூரி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜொஷாளின் எசெயிலின் அன்புப் பேரனும், பாக்கியம், கந்தையா, நாகம்மா (மானிப்பாய் கிறின் மெமோரியல் வைத்திய சாலை), சரஸ்வதி, காலஞ்சென்ற அப்பையா மற்றும் நல்லம்மா, மங்கு ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

“சுடின்”
உடுவில் மை க்கு.
0213008474, 0016479800562,
0016478276919.
(107552)
தகவல் :
குடும்பத்தினர்.

### திருமதி பாலசுப்பிரமணியம் மகேஸ்வரி



கொடிகாமம், தாவளை, இயற்றாலையைச் சேர்ந்த திருமதி பாலசுப்பிரமணியம் மகேஸ்வரி கடந்த 14.12.2010இல் காலமானார்.

அன்னார் பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் அ.கலாவதி, செல்லத்துரை, விஜயகுமாரன் (சுவிஸ்), ச.நீலாவதி, ச.லீலாதேவி, இராஜகுமாரன் (பிரான்ஸ்), க.இந்திராதேவி, உதயகுமாரன், உதயசூரியன் (பிரான்ஸ்), கருணன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் அரியரத்தினம், செ.தேவராணி, வி.வாசுகி, சக்திவேல், சற்குணசீலன், இ.சுமித்திரா, கரன்குமார், உ.மலர்விழி, உ.பிரதீபா, க.தாரணி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.12.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனகப்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவளை,
இயற்றாலை,
கொடிகாமம்.
(சி/573212)
தகவல் :
பிள்ளைகள்.

### கார்த்திகேசு சாமிநாதன் (ஐயா)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, திருவையாறு, 3ஆம் பிரிவை வசிப்பிடமாகவும் வவுனியா, தோணிக்கல்லினைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சாமிநாதன் 15.12.2010 புதன்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சின்னப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற வள்ளியம்மையின் அன்புக் கணவரும் திருமதி நவசக்தி பரராஜசிங்கத்தின் (நயினாதீவு) சகோதரனும் இராஜேந்திரன் (கனடா), இராஜராஜேஸ்வரி (மன்னார்), இந்திரேஸ்வரி (வவுனியா), பரமேஸ்வரன் (கனடா), பரமேஸ்வரி (அமெரிக்கா), நகுலேஸ்வரி (வவுனியா) ஆகியோரின் அருமைத் தந்தையும் சந்திராதேவி (கனடா), மாணிக்கவாசகர் (கட்டடங்கள் திணைக்களம், மன்னார்), கருணாமூர்த்தி (பிரான்ஸ்), மஞ்சுளானந்தி (கனடா), ஞானசம்பந்தன் (அமெரிக்கா) ஆகியோரின் மாமனும் ஸ்ரீநடேசன் (கனடா), ஸ்ரீமதி, ஜனார்த்தனன், சகானா, சாரங்கா, அட்சயா, நப்ஷா (அமெரிக்கா), ஹரிஸ் (அமெரிக்கா) மற்றும் செந்தூரன் (பிரான்ஸ்), லோகதர்சினி (லண்டன்), சரண்ராஜ் (பேராதனைப் பல்கலைக்கழகம்), முகுந்தன் (வவுனியா), வினோத் (வவுனியா) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியை நாளை (19.12.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் 11/21, குட்செட் வீதி, முதலாம் ஒழுங்கை, தோணிக்கல், வவுனியா என்ற முகவரியில் இடம்பெற்றுத் தோணிக்கல் இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொலைபேசி :
0774197272,
0779178244
(107469)
தகவல் :
வே.பொ.மாணிக்கவாசகர்
(கட்டடங்கள் திணைக்களம், மன்னார்)

## நல்லூரில் இன்று எழுத்தாளர் தகவல் அமர்வு

சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் அடுத்த மாதம் 6, 7 , 8, 9ஆம் திகதிகளில் கொழும்பில் நடத்தவுள்ள சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு தொடர்பான தகவல் அமர்வுக் கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர், நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

குறிப்பிட்ட மாநாட்டில் கலந்து கொள்ளும் பேராளர்களுக்கான பதிவுகள் இடம்பெறவுள்ளதால் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு யாழ்.குடாநாட்டில் வதியும் தமிழ் எழுத்தாளர்கள் அழைக்கப்படுகின்றனர்.

இந்தக் கூட்டத்தில், இந்த மாநாட்டின் அமைப்பாளர் லெ.முருகபூபதி மாநாட்டின் நிகழ்ச்சி நிரல் - மற்றும் நோக்கங்கள் பற்றி உரையாற்றுவார். (ஒ)

## வீதியில் சென்ற பெண்ணின் சங்கிலி அறுப்பு

சுதுமலைப் பகுதியில் பட்டப்பகல் வேளை வீதியால் சென்றுகொண்டிருந்த குடும்பப் பெண்ணின் தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் அறுத்துக்கொண்டு மாயமாக மறைந்துவிட்டனர்.

சுதுமலை தெற்கைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவர் பகல் 12 மணியளவில் தனது வீடு நோக்கி மாப்பியன் வீதியால் நடந்துசென்று கொண்டிருக்கும்போது மோட்டார் சைக்கிளில் பின்புறமாக வந்தவர்கள் தங்கச் சங்கிலியை அறுக்க முற்பட்டபோது மேற்படி பெண் சங்கிலியைக் கையால் இறுக்கிப் பிடித்துக் கொண்டார் என்றும் ஆனால் இளைஞர்கள் சங்கிலியின் ஒரு பகுதியை அறுத்துக்கொண்டு தப்பியோடிவிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-115)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

ஒரு நாள் பைரகா N0-I புறொயிலர் குஞ்சு 24.12.2010 விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும். விபரங்களுக்கு:- சே. கிருஷ்ண குமார், விதானை வளவு, மானிப்பாய். தொ.பே.0772338084

**காணி விற்பனை**

தாவடி தெற்கு, பத்தானை வீதி, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கிளை 10 க்கு அருகாமையில் உள்ள வீதியில் 3¼ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 0213007003

**விற்பனைக்கு**

வீட்டுத் தளபாடங்கள்
விற்பனைக்கு உண்டு
இல. 160, பழைய பூங்கா வீதி, கண்டுக்குளி.
0774394337

**விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள Super Cup-90 (CHINA) விற்பனைக்குள்ளது.
தொடர்பு:- 0718561296

**வாடகைக்கு**

யாழ். நகருக்கு அண்மையில் நாவலர் வீதி பிறவுண் வீதி சந்திக்கு அண்மையில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்களுக்கு மட்டும்.
தொடர்புகளுக்கு:- 0776258796

**ஒத்து மாறல்**

வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் கடமை புரியும் பயிற்றப்பட்ட ஆரம்ப ஆசிரியர் ஒருவர் யாழ்ப்பாணம் அல்லது வலிகாமம் கல்வி வலயத்துக்கு ஒத்து மாற விரும்புகிறார். தொடர்பு கொள்ளவும்.
0770620413

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சண்முகநாதன் அன்னம்மா (பூமணி)

கல்வியங்காடு, ராஜவீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகநாதன் அன்னம்மா நேற்று (17.12.2010) வெள்ளிக்கிழமை காலை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முருகன் கோயில் முன்பாக
ராஜ வீதி,
கல்வியங்காடு.
தகவல்:
ப. இந்திராணி (பேபி),
கு. போகராணி (சகோதரிகள்).
(107512)

### யோசேப்பு இராசநாயகம் பிரபைதாஸ் (பிரபு)

வடமராட்சி இல.88/4, ஆசீர்வாதம் ஒழுங்கை, கிழக்குத்தெரு, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட யோசேப்பு இராசநாயகம் பிரபைதாஸ் (பிரபு) நேற்று (17.12 .2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசநாயகம் (அதிபர்) மற்றும் அன்னம்மா சற்குணமலர் தம்பதிகளின் மகனும், பாலதாஸ், காலஞ்சென்ற பாக்கியதாஸ் மற்றும் தேவயோகினி, இன்பதாஸ் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பிலோமினா, சுலோசனா நிக்ஷன் புறுட்டீனஸ் (மோகன்) ஆகியோரின் மைத்துனரும், மேரி நிலாந்தினி, கிளின்டன், நிக்ஷன் ஆகியோரின் சிறியததந்தையும், சுமித்திராவின் அன்புமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (18.12.2010) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் மூன்று மணியளவில் வல்வெட்டித்துறை சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இல.88/4, ஆசீர்வாதம் ஒழுங்கை,
கிழக்குத் தெரு,
வல்வெட்டித்துறை
(107518)
தகவல் :
குடும்பத்தினர்.
0212263547, 0777485295

### கணபதிப்பிள்ளை செல்வநாயகம்



திருநெல்வேலி, வளாக வீதியை வதிவிடமாகவும் தற்போது அவுஸ்திரேலியாவில் (Melbourne) வசித்தவருமான கணபதிப்பிள்ளை செல்வநாயகம் 12.12.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தையலம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் சாந்தினி (Melbourne), சந்திரிக்கா (Melbourne), சக்தி (Sydney), முகுந்தன் (ஆசிரியர், யாழ். பரி.யோவான் கல்லூரி), ஜெயஸ்ரீ (Sydney) ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வராஜா, லோகேஸ்வரன், ரவிசங்கர், சுகந்தி (ஆசிரியை, யா/வேலணை மத்திய கல்லூரி), சுரேஸ்குமார் ஆகியோரின் அன்பு மாமனும் மஞ்சரி, சரண்யா, கிரிதர், தருசிகன், ஹம்சாயினி, கிறிஷ்னி, கணேஸ், வாகீசன், ரகுராமன், ஹரினி ஆகியோரின் பாசமிகு பேரனும் சொர்ணாம்பாள் (Canada), சீவநாயகம் (Melbourne), செல்வராணி (Canada), சபாநாயகம் (Melbourne) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நல்லையா, சரோஜினி, சற்குணம், நல்லம்மா, அருள்மணி, மகேஸ்வரி, பரமேஸ்வரி, காலஞ்சென்ற சபாநாயகம், ராஜபிரபு, குமாரநாயகம், தமயந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2010) சனிக்கிழமை (Melbourne) இல் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வளாக வீதி,
திருநெல்வேலி.
T.P : 0212220056
(107496)
தகவல் :
க.செ.முகுந்தன்
(மகன்).

### சீனியர் துரைராசா



சங்கானையைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறையை வதிவிடமாகவும் தற்போது தேவாலய வீதி, சங்கானையை வதிவிடமாகவும் கொண்ட சீனியர் துரைராசா நேற்று முன்தினம் (16.12.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீனியர் மற்றும் வள்ளிப்பிள்ளையின் மகனும் சின்னையா - தெய்வானை தம்பதியரின் மருமகனும் வரதராணியின் அன்புக் கணவரும் ரூபேந்தினி, ரூபேந்திரா, பாலேந்திரா, கலைவாணி, அம்பாலிகை, கஜமுகேந்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும் சுகன்யா, அருள்தாஸ், நந்தினி, பிறேமராஜா, ஜெயக்குமார் ஆகியோரின் மாமனும் ஜஸ்மினா, ஜஸ்வின், ரதுமியா, மதுமியா, மக்சிம், சிமித்தா, அபிராம், அலோன்சோ, ஜெறோமிகா, ஜெறோஸ்மி, ஜெமீறா ஆகியோரின் பாசமிகு பேரனும் சிவசுந்தரம், இராசரத்தினம், சிவப்பிரகாசம், பாலாம்பிகை, செல்வராணி, ஜெயராணி ஆகியோரின் சகோதரனும் துரைமணி, தம்பித்துரை, செல்வராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2010) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவாலய வீதி,
சங்கானை.
(107502)
தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோதக் கொலைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றொபேர்ட் ஓ பிளேக்கால் அனுப்பப்பட்ட அந்த ஆவணத்தின் முக்கிய பகுதிகள் வருமாறு:-

### சாராம்சம்

ஒருங்கிணைக்கப்பட்ட துணைப் படைக் குழுக்களினால் மேற்கொள்ளப் படும் குற்றச் செயல்கள் தொடர்பான குற்றச் சாட்டுக்கள் கடந்த வருடத்தில் குவிந்திருந்தன. விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து இயங்குபவர்கள் என்று சந்தேகிக்கப் படுபவர்களைக் கடத்துவதற்கும் விடுதலைப் புலிகளுடன் சண்டையிடுவதற்கும் கருணா குழுவினரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி எனப்படும் ஈ.பி.டி.பியினரும் இலங்கை அரசுக்கு உதவிகளை வழங்கி வந்தனர்.

துணைப் படைகளுடனான தொடர்புகளை இலங்கை அரசு தொடர்ச்சியாக மறுத்து வருகிறது. காணாமல்போனவர்கள் குறித்து விசாரிப்பதற்காக தனிநபர் ஆணைக்குழுவை அமைப்பது உள்ளிட்ட சில நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அனைத்துலக சமூகத்தின் நன்மதிப்பைப் பெற கொழும்பு தீவிரமாக முயற்சிக்கிறது. ஆனால், கொழும்புக்கு வெளியே, சட்டத்துக்குப் புறம்பான கொலைகள், கடத்தல்கள், சிறுவர் கடத்தல்கள், பலவந்தமாகப் பணம் பறித்தல் மற்றும் விபச்சாரம் போன்ற மனித உரிமை மீறல்கள் தொடர்கின்றன.

### நிதி இல்லாததால் கப்பம் அறவீடு

நிதி வளங்கள் இல்லாததால் துணைப் படையினருக்கான நேரடியான கொடுப்பனவுகளை ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான இலங்கை அரசு நிறுத்திவிட்டது. பதிலாக, கருணா மற்றும் ஈ.பி.டி.பியினர் பணத்துக்காக ஆள்களைக் கடத்தியதை அது கண்டும் காணாது இருந்தது.

பொதுச் சபைகளில் அரசுக்கு எதிராகக் கடும் குற்றச்சாட்டுக்கள் வெளிவரும் நிலையில், துணைப் படையினருடன் அரசுக்கு இருக்கும் தொடர்புகளை தூதரகத்திற்கு நெருக்கமான வட்டாரங்கள் வெளிப்படுத்தின.

துணைப் படைகளை அனுமதிப்பதன் மூலம் பல அனுகூலங்கள் கிடைக்கும் என இலங்கை அரசு எதிர்பார்க்கிறது. விடுதலைப் புலிகளுடன் பணியாற்றுபவர்களைக் கடத்துவதன் மூலம், சில சமயங்களில் சுட்டுக் கொலை செய்வதன் மூலம் கொழும்பின் பாதுகாப்பை இந்தத் துணைப் படைகள் உறுதிப்படுத்துகின்றன.

துணைப் படைகளின் தொடர்ச்சியான கடத்தல்களால் இலங்கையின் நகரங்கள் அச்சத்திலும் மௌனத்திலும் ஆழ்ந்து போயுள்ளன. கருணாவையும் ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவையும் அரசு சார்பு அரசியல் தலைவர்களாக முறையே கிழக்கிலும் வடக்கிலும் மாற்றுவதே இலங்கை அரசின் முழு நோக்கமும் ஆகும்.

ஒருவேளை அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டால் கூட, இவர்கள் (துணைப் படைகள்) வடக்கு, கிழக்கில் அரசின் கட்டுப்பாட்டை உறுதிப்படுத்துவார்கள் என்று அரசு எதிர்பார்க்கிறது.

இந்த துணைப் படைகள், அரசுக்கு மறுத்துரைக்கும் தன்மையை (அதாவது குற்றச் செயல்களைத் தான் செய்யவில்லை எனச் சட்டபூர்வமாக மறுத்துரைப்பதற்கான வாய்ப்பு) வழங்கி நிற்கின்றன.

### துணைப் படைகளை ஒழிக்க கோத்தபாய தடை உத்தரவு

இந்தத் துணைப் படைகளை இல்லாது ஒழிக்க தாம் விரும்புகின்றனர் என்ற போதும் அவர்கள் விடயத்தில் தலையிட வேண்டாம் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவு வழங்கி உள்ளார் என்று யாழ்ப்பாணத்தில் உள்ள இராணுவ அதிகாரி ...... எம்மிடம் தெரிவித்தார். ஏனெனில் சர்வதேச அழுத்தங்கள் காரணமாக இராணுவத்தால் செய்ய முடியாத காரியங்கள் சிலவற்றை துணைப் படைகள் செய்கின்றன என்பதே அதற்குக் காரணம் என்றும் கோத்தபாய தெரிவித்துள்ளார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் நடவடிக்கைகளிலும் தலையிட வேண்டாம் என்றும் பாதுகாப்பு அமைச்சினால் தான் அறிவுறுத்தப்பட்டார் என்றும் அந்த இராணுவ அதிகாரி தெரிவித்தார்.

குற்றச் செயல்களில் (அரசுக்கு ஆதரவான) ஈடுபடுகின்ற துணைப் படையினருக்குக் கொடுப்பனவுகள் வழங்கும் நடவடிக்கை ஜனாதிபதி சந்திரிகா காலத்தில் தொடங்கியதாக ......... என்கிற நபர் தெரிவித்தார். பல தூதரகங்களில் உள்ள அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் இதனை உறுதிப்படுத்தி உள்ளனர். எப்படி இருந்த போதும் ......... என்பவர் கூறுகிறார், இப்போதைய அரசு நிதி நெருக்கடியில் இருப்பதால் துணைப் படைகளுடன் உடன்படிக்கை ஒன்றுக்கு வந்தது. அதனடிப்படையில், ஈ.பி.டி.பி. மற்றும் கருணா குழுவினர் தமிழ் வர்த்தகர்களிடம் இருந்து கப்பம் பெறுவதற்கு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அனுமதி அளித்தார் என்று அந்த நபர் குறிப்பிட்டார். இது உண்மையில் சட்டம் ஒழுங்கைச் சீர்குலைத்தது; குறிப்பாக கடத்தல்கள், கப்பம் அறவிடுதல் என்பவற்றை அதிகரித்தது. வவுனியா மற்றும் கொழும்பில் இவை கூடுதலாக இடம்பெற்றன.

ஈ.பி.டி.பியும் கருணாவும் தமிழ் இனக் குழுமத்தின் மத்தியிலிருந்தே வந்தவர்களாக இருந்த போதும் ஏனைய தமிழர்களுக்கு எதிராகவே அவர்களால் அனைத்துக் குற்றங்களும் அனைத்துச் சமயங்களிலும் நிகழ்த்தப்பட்டன.

### கருணா குழுவின் செயல்பாடு

கடத்தல்களிலும் கப்பம் பெறுவதிலும் மிகத் தீவிரமாகச் செயற்பட்ட துணைப் படை கருணாவினதே. ........ உறுதிப்படுத்துகிறார், தங்களைக் கொல்வதற்கு கருணாவை அரசு பயன்படுத்தக்கூடும் என்று பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் அஞ்சினார்கள். தங்களுடைய உயிர் குறித்து அச்சம் அடைந்துள்ளனர் என்று முஸ்லிம் மற்றும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்மிடம் நேரடியாகக் கூறினர். ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவின் துணையுடன் கருணாவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கிறிஸ்மஸ் தினத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று தான் நம்புகிறார் என்று ....... என்பவர் தெரிவித்தார்.

2006, நவம்பர் 10 ஆம் திகதி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரான நடராஜா ரவிராஜ் கொலை செய்யப்படுவதற்கு கருணா குழு உறுப்பினர்கள் அமர்த்தப்பட்டிருப்பதற்கான சாத்தியங்கள் குறித்தும் ...... கருத்துத் தெரிவித்தார்.

கிழக்கில் இருந்தபடியே கருணா யாழ்ப்பாணத்திலும் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டார் என்பதை ........ உறுதிப்படுத்தினார். யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கடத்தல் சம்பவங்களில் கருணா குழுவே தொடர்புபட்டிருந்தது என்று ...... ஆவணங்களை முன் வைக்கிறார்.

கிழக்கு மாகாணம் முழுவதும், இராணுவ நிலைகளுக்கு மிக அருகில் இருந்து இயங்குவதற்கு கருணா குழு வினருக்கு அனுமதி வழங்கப்பட்டிருந் தது. பொதுவாக வயது குறைந்த சிறு வர்களே அந்த முகாம்களில் இயந்திரத் துப்பாக்கிகளுடன் காவல் காத்தார்கள்.

கிழக்கில் இருந்த இடம்பெயர்ந்தோர் முகாம்களுக்குச் சென்று சிறுவர்களைப் படைக்குச் சேர்த்துக் கொள்வதற்கு கருணா குழுவை அரசு அனுமதித்திருந் தது என்று .......... கூறினார். கருணா தனது படையில் இணைத்துக் கொண்ட வர்களின் சராசரி வயது 14 என்று ......... தெரிவித்தார். கருணா படைக்கு சிறு வர்களை ஆள் சேர்ப்புச் செய்தார் என்று அமெரிக்காவைத் தளமாகக் கொண் டியங்கும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன் றிடம் இருந்தும் நம்பிக்கையான தகவல் கள் கிடைத்துள்ளன.

### பெண்களை விபச்சாரத்திலும் ஈடுபடுத்தினர்

இடம்பெயர்ந்தோர் முகாம்களுக்கு வெளியே படையினரின் தேவைக்காக விபச்சார வளையம் ஒன்றையும் கருணா குழுவினர் நடத்தி வந்தனர் என்று

(28ஆம் பக்கம் பார்க்க)

---

## அகவை அறுபது காணும் ஐயாவுக்கு எங்கள் வாழ்த்துக்கள்



பேரன்புக்கும் மதிப்பிற்குமுரிய
**உயர்திரு. நடராஜு ஐயர் சதாசிவ ஐயர்**
(பிரதிப் பதிவாளர் நாயகம்)
நல்நண்பனாக தன் சமூகத்துக்கு
நற் சேவகனாக தன் மக்களுக்கு
நல் ஆசானாக-தன் ஊழியர்களுக்கு
நல் அதிகாரியாக தன்
திணைக்களத்துக்கு

38 ஆண்டுகள் அரச பணியில் உயரிய சேவையாற்றிய சேவையின் சிகரம் **சதாசிவ ஐயாவுக்கு** இன்று அகவை அறுபது!

எழுதுநர் சேவையுடன் ஆரம்பித்த அரச பணி யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் மேலதிக பதிவாளராகவும், வடக்கு, கிழக்கு மாகாண உதவிப் பதிவாளர் நாயகமாகவும், நாடு முழுவதிற்கும் பிரதிப் பதிவாளர் நாயகமாகவும் படிப் படியாக உயர்ச்சி கண்டு இன்று ஓய்வு பெறும் ஐயாவை இன்னும் தன்பணி தொடரப் பல்லாண்டு வாழ்க வாழ்கவென வாழ்த்தி பரந்தாமன் திருவருளினை வேண்டுகின்றோம்.

பணிவுடன் வாழ்த்தும்
*சங்கத்தானை, சாவகச்சேரி.* **கண்ணன் குடும்பம்.**

---

## ஜனஜய லொத்தர்

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

வாரம் 186 — சீட்டிழுப்புத் திகதி 16.12.2010

வெற்றி இலக்கங்கள்: 13 37 50 55 — சுப்பர் இலக்கம்: 11

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 10,388,870/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 1 இலக்கத்துக்கும் | 61737 | ரூ. 20/= | ரூ. 1,234,740/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 1 இலக்கத்துக்கும் | 5603 | ரூ. 40/= | ரூ. 224,120/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 2 இலக்கங்களுக்கும் | 4758 | ரூ. 100/= | ரூ. 475,800/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 2 இலக்கங்களுக்கும் | 399 | ரூ. 200/= | ரூ. 79,800/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 3 இலக்கங்களுக்கும் | 100 | ரூ. 1,500/= | ரூ. 150,000/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 3 இலக்கங்களுக்கும் | 15 | ரூ. 3,000/= | ரூ. 45,000/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 4 இலக்கங்களுக்கும் | 1 | ரூ. 1,000,000/= | ரூ. 1,000,000/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 10,388,870/= | |
| மொத்த எண்ணிக்கை | 72613 | | ரூ. 3,209,460/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 10,576,280/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

அபிவிருத்தி லொத்தர் சபை

Website: www.dlb.lk

---


ACCA to your future in Finance & Accounting

க.பொ.த (உ/த) பரீட்சைப் பெறுபேறு கிடைக்கப்பெற்ற மாணவர்களுக்கான விசேட பிரிவு

ஆரம்பம்: 18, 19, 20/12.2010- மு.ப. 10.00



Jaffna Technical Institute (JTI)
No.45, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 5670345
e.mail:jtiedu@gmail.com
website: www.accaglobal.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

## விண்ணக வாழ்வில் 2ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னையின் கரங்களில்
14.09.1983

இறைவனின் திருப்பாதகரங்களில்
18.12.2008

**மருசலீன் யஸ்ரின்றாஜ்** (றெனி)
*(புலோப்பளை மேற்கு, பளை)*



அருமை மைந்தனே!
ஆருயிர் தம்பியடா!
ஆசை அண்ணனடா!
உன் எழில் வதனம் கண்டு- இரண்டு
ஆண்டுகள் ஓடி மறைந்ததடா
உன்பாதச் சுவடுகள் காதில் ஒலிக்குதடா
முற்றத்தில் நீ அமைத்த உன்
அழகிய குடிசை- இன்னும்
உன்கதை பேசுதடா
உன் முற்றத்தில் பூக்கும் மலர் பறித்து
உன் வதனத்திற்கு பூச்சூடி அழுகின்றோமடா
கல்யாண மாலை கழுத்தில் போடவில்லை- தம்பிக்குட்டியே
உன் படத்திற்கு மாலை போட்டு கதறியழுகின்றோம்
உன் முக தரிசனத்திற்கு தினம் விளக்கேற்றி விம்முகின்றோம்
உன் அழியாத ஆன்மா
இறைவனின் திருப்பாதக் கரங்களில் பழுதின்றி மகிழ்ந்திட
எம் செபங்களை காணிக்கையாக்குகின்றோம்
இறைவனின் திருவுளம் இதுவென அறிந்து
உன் பிரிவை நினைந்துருகும்.

அன்பு அப்பா, அம்மா,
பெரியக்கா, சின்னக்கா, அருணாந்தர்சி.
புலோப்பளை மேற்கு.

(107507)

## பேச்சு, கருத்துச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுடன் நடைபெற்ற சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"குடாநாட்டு ஊடகங்கள் பல்வேறு நெருக்கடிகளையும் தாண்டிச் சேவையாற்றி வருகின்றன. குறிப்பாக "உதயன்" எல்லாச் சிக்கல்களையும், பிரச்சினைகளையும் தாண்டி தொடர்ச்சியாகப் பயணித்துக் கொண்டிருக்கிறது. இப்போது ஜனநாயகச் சூழல் மலர்ந்துள்ள நிலையில் பேச்சு, கருத்துச் சுதந்திரங்களைப் பயன்படுத்துவதற்கான அனைத்து உரிமைகளும் உண்டு" - என்றார் தளபதி.

குடாநாட்டில் நிலவும் இயல்பு நிலையை எவரும் குழப்ப இடமளிக்கப்பட மாட்டாது எனத் தெரிவித்த மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க, மக்கள் பிரச்சினைகள் குறித்து செய்திகளை ஊடகங்கள் முதன்மைப்படுத்தி வெளியிட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (உ-ஐ)

## ஐ.தே.கவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறியவை வருமாறு:-

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவி உட்பட 5 முக்கிய பதவிகளுக்கு உறுப்பினர்களை நியமிக்கும் முறைமையை உள்ளடக்கிய எமது கட்சியின் யாப்பு கட்சியின் சம்மேளனக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஆனால், அந்தக் கூட்டத்தில் எந்தப் பதவிகளுக்கும் எவரும் நியமிக்கப்பட வில்லை. முக்கிய 5 பதவிகளுக்குப் போட்டியிட இன்னும் எவரும் விண்ணப்பிக்கவில்லை. விண்ணப்பித்ததும் வேட்பாளர்கள் பட்டியல் தயாரிக்கப்படும்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்துகொண்டு இரண்டு ஊடகவியலாளர்கள் சந்திப்புகளை நடத்துவதும் சரியில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி ஒன்றாகப் பயணிப்பதையே மக்கள் விரும்புகின்றனர். அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியை நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருக்கின்றனர். எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை அரசுக்குச் சவால் விடுக்கும் வகையில் எம்மால் மாற்ற முடியும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. - என்றார். (ஒ-சி)

பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சிநெறிகள் ஆரம்பம்
GIT (G.C.E A/L)
ICT (Grade 10,11)
ஆசிரியர் :-திரு.சி.பிரணவன்
Kids Programming (Year1-10)
MSO, DTP
Hardware
Start on: 18, 20.12.2010
Softview Computer College
43, Arasady Road, Thaddatheru Junction Jaffna.
T.P: 021 2225170

## பொன்சேகாவுக்கே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டுள்ளது. அதேவேளை, இந்த வருடம் ஜனவரி மாதம் 22ஆம் திகதி அமெரிக்கத் தூதுவர் இதனை அறிவித்துள்ளார் என்றும், பிரதான எதிர்க்கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட சரத் பொன்சேகா தனக்கு பல சாதகமான உறுதிமொழிகளை அளித்துள்ளார் எனவும் தூதுவர் கூறினார் என்றும் 'விக்கிலீக்ஸ்' இணையதளம் தகவலை கசியவிட்டுள்ளது.

(ஒ-சி)

## பெருமி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லியம் பொக்ஸின் தனிப்பட்ட இலங்கை விஜயம் தொடர்பாக பிரிட்டிஷ் வெளி விவகார அமைச்சர் வில்லியம் ஹேக் விசனமடைந்துள்ளார் என பிரிட்டிஷ் நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட யுத்தம் தொடர்பான கேள்விகளுக்கு இலங்கை அரசு பதிலளிக்கும் வகையில் அழுத்தம் தொடர வேண்டுமென பிரிட்டன் விரும்புகின்றது எனவும் 'தி கார்டியன்' செய்திச் சேவை தெரிவிக்கின்றது.

(சி)

## மீள்குடியமர்த்தப்பட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மன்னார் மாவட்டம் மீள்குடியேற்ற அமைச்சின் வெள்ள நிவாரணத் திட்டங்களில் சேர்த்துக்கொள்ளப்படாதது குறித்தும் இப்பேச்சுகளின்போது சுட்டிக்காட்டப்பட்டது.

மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு ஏற்பட்டுள்ள வெள்ளப் பாதிப்புகள் போன்ற விடயங்கள் குறித்து இச்சந்திப்பின்போது ஆராயப்பட்டது.

மீள்குடியமர்வு மற்றும் மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் எதிர்நோக்கும் சகல பிரச்சினைகள் குறித்தும் அந்தந்தப் பிரதேச கூட்டமைப்பு எம்.பிக்களைத் தனித்தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தப்படும் என இச்சந்திப்பின்போது மீள்குடியேற்ற அமைச்சர் உறுதியளித்தார் எனவும் அடைக்கலநாதன் எம்.பி.தெரிவித்தார். (ஒ-சி)

இறைச்சிக் கோழி விற்பனை
நிறை கூடிய புறொயிலர், கல்பேட்ஸ், சேவல் என்பன சுத்தம் செய்து வேண்டிய அளவுகளில் தினமும் பெற்றுக்கொள்ளலாம்.
(1Kg சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் 440ரூபா மட்டும்)
தொடர்பு:- மல்லியாம் சென்ரர்,
61, இராமநாதன் வீதி, கலட்டி.

# இலங்கைப் போர்க் குற்றச்சாட்டு: கனடா மௌனம் காக்கக் கூடாது

### அந்நாட்டுப் பத்திரிகை வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 18

இலங்கைக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பில் கனடா மௌனம் காக்கக் கூடாது - என்று கனேடிய முன்னணி ஆங்கிலப் பத்திரிகையொன்று வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கு எதிரான யுத்தக் குற்றச்சாட்டுக்கள் சம்பந்தப்பட்ட விடயங்களில் கனடா பேசா மடந்தையாக உள்ளது என கனேடிய 'த ஸ்டார்' என்னும் ஆங்கில பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பாக எழுதப்பட்டுள்ள அதன் பத்தியொன்றிலேயே மேற்கண்ட விடயம் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இப்பத்தியை லோரியர் பல்கலைக் கழகத்தில் கலாநிதிப் பட்டத்துக்கான ஆய்வை மேற்கொண்டு வரும் தமிழ்த் தேசியவாதிகளில் ஒருவரான அமர்நாத் அமரசிங்கம் என்பவர் எழுதியுள்ளார்.

இலங்கைக்கு எதிரான யுத்தக் குற்றச்சாட்டுக்கள் சர்வதேச மட்டத்தில் விசாரிக்கப்பட வேண்டும் என்று ஏனைய உலக நாடுகளுடன் சேர்ந்து கனடாவும் குரல் கொடுக்க வேண்டும் என்றும் இவர் இப்பத்தியின் மூலமாக வலியுறுத்தியுள்ளார். (சி)

## சட்டவிரோதக் கொலைகள்...

(27ஆம் பக்கத் தொடர்ச்சி)

.......... விளக்கினார். பெண்களுக்கு வேறு வழி இல்லாததால் அவர்கள் கருணாவின் ஆள்கள் சொல்வதற்கு செவி சாய்த்தார்கள் என்று .......... தெரிவித்தார். பெண்கள் எப்படி விபச்சாரத்திற்கு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள் என்பதை .......... என்பவரும் .......... என்பவரும் தெளிவுபடுத்தினார்கள். அப்படி இல்லையெனில் அவர்களது பிள்ளைகள் கடத்தப்பட்டார்கள். யாழ்ப்பாணத்திலும் இதே முறைமைகள் பின்பற்றப்பட்டுள்ளன. தங்கள் குழந்தைகள் பலவந்தமாக விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுவதைத் தடுக்கும் என்ற எதிர்பார்ப்பில் பெற்றோர்கள் தமது மகள்களுக்கு 12 அல்லது 13 வயதில் திருமணத்தை ஏற்பாடு செய்தார்கள்.

### ஈ.பி.டி. என்கிற அரசியல் கட்சி மற்றும் துணைப் படை

ஈழ மக்கள் ஜனநாயக விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்) விடுதலைப் புலிகளுக்கு எதிராக இயங்க ஆரம்பித்தது. அதிலிருந்த ஒரு பகுதியினர் டக்ளஸ் தேவானந்தா 1994இல் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவானதைத் தொடர்ந்து அவரது தலைமையில் ஈ.பி.டி.பியாக இயங்க ஆரம்பித்தனர். அவர்கள் அரசுடன் இணைந்திருந்தனர்.

ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்டிருந்த போதும், இராணுவத்தின் அனுமதியுடன் ஈ.பி.டி.பி. இன்னமும் அச்சமூட்டும் ஒரு துணைப் படையாக உள்ளது. அதிகாரபூர்வமற்ற வகையில் யாழ். குடாநாட்டின் அதிகாரங்களை, குறிப்பாக தீவுப் பகுதிகளின் அதிகாரங்களை அது தன்னகத்தே வைத்துள்ளது.

பல்வேறு தரப்புக்களின் கருத்துப்படி, இராணுவத்தினருடன் சேர்ந்து இயங்குவதன் காரணத்தால் கடத்தல்கள், சட்டத்துக்குப் புறம்பான கொலைகள், கப்பம் அறவிடுதல் போன்றவற்றில், தண்டிக்கப்படுவோம் என்கிற எந்தவிதப் பயமும் இன்றி ஈ.பி.டி.பியினால் ஈடுபட முடிகிறது. யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பியினர் நடத்திய சட்டத்துக்குப் புறம்பான கொலைகள் குறித்து ......... என்பவர் எம்மிடம் தெரிவித்தார்.

ஒருவரைக் கொலை செய்வதற்கு ஈ.பி.டி.பியினர் தீர்மானித்து விட்டால் அது பற்றி முதலில் இராணுவத்தினருக்குத்தான் தகவல் தெரிவிக்கப்படும் என்று ............ தெரிவித்தார். பொதுவாகச் சொன்னால் யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு சந்தியிலும் படையினரின் நிலைகள் இருக்கின்றன. அனுமதிக்கப்பட்ட ஒரு நேரத்தில் எல்லாப் படையினரும் ஐந்து அல்லது பத்து நிமிடங்கள் ஓய்வெடுத்துக் கொள்வது வழமை. அந்தச் சமயத்தில் மோட்டார் சைக்கிள்களில் வரும் முகமூடி அணிந்த நபர்கள் தாம் நினைத்த நபர்களைக் கொன்றுவிட்டுத் திரும்பி விடுவார்கள். கொலை முடிந்த சிறிது நேரத்தில் தமது நிலைகளுக்குத் திரும்பும் படையினர் மீதிக் காரியங்களைக் கவனிப்பார்கள்.

இக் கொலைகள் தொடர்பான பொலிஸ் விசாரணைகள் பொதுவானவை. அவர்கள் ஒரு போதும் கொலையாளிகளை நோக்கிச் சென்றதில்லை. விடுதலைப் புலிகள் சந்தேகநபர் எனச் சொல்லப்பட்ட பெண் ஒருவருக்கு அடிக்கடி கருக்கலைப்புச் செய்யுமாறு .......... என்ற மருத்துவர் நிர்ப்பந்திக்கப்பட்டார் என்று ........ என்ற நபர் மேலும் தெரிவித்தார். (உ)

Quick Learning Course
Spoken English with Grammar
Duration 1 Month Rs.2000.00
உரையாடல் பயிற்சிகள். பேச்சுப் பயிற்சிகள். உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video visuals மூலமாக நடாத்தப்படுகிறது
A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special
10-01-2011
Batch 9 : 09.00 AM - 01.00 PM
Batch 10 : 01.30 PM - 05.30 PM
BCHS
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel:021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935

WANTED RESIDENTIAL BUILDING FOR RENT
"A CORPORATE OFFICE NEEDS A DECENT RESIDENTIAL BUILDING ON RENT FOR ITS HEAD, IN CENTRAL JAFFNA, WITH FOUR BEDROOMS, LARGE LIVING/ GUEST AREA SPACIOUS LAWNS IN FRONT AND BACK OF THE HOUSE WITH CLEAR TITLE ON A MAIN ROAD. INTERESTED PARTIES MAY SEND THEIR OFFERS IMMEDIATELY IN CONFIDENCE
C/o 89, Brown Road, Jaffna.

" The Lord Has Done Great Things"
(Psa.126: 3A)
25th Church Anniversary Celebration and Thanks Giving Service of
Assembly Of God, Chunnakam.
ON 19-12-2010
AT 9.00 A.M
God's Message By: Rev. Shawn Thurling
All Are Wel Come
Jesus Saves and Heals

"கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார்"
(சங்.126:3A)
சபையின் 25வது ஆண்டு விழாவும் நன்றித்துதி ஆராதனையும்.
அசெம்பிளி ஒவ் கோட்
சுன்னாகம்
காலம்: 19.12.2010
நேரம்: 9.00 முற்பகல்
தேவசெய்தி: வண போதகர் ஷோண் துறுலிங்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இயேசு இரட்சிக்கிறார் குணமளிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.